Registered as a News Paper in Sri lanka

விலை : ரூபா 10 .00

தினப்பதிப்பு
தினமுரசு
THINAMURASU

முரசு - 04 திருவள்ளுவர் ஆண்டு 2045 வைகாசி 20 செவ்வாய்க்கிழமை (03.06.2014) பக்கங்கள் 20 ஓசை -245

AXSHAYA CONSTRUCTION JAFFNA
கட்டடங்கள் கட்டுதல், வீடு கட்டுதல், பழைய வீடு களைத் திருத்துதல், குளியலறை கட்டுதல்
Plumbing, Electrical, Painting
அனைத்தும் தரமாகவும் குறைந்த விலையிலும் குறித்த காலத்திலும் செய்து கொடுக்கப்படும்.
தொடர்புக்கு: 0776679564
(C/3690)

# முதலமைச்சரை வழிமறித்து முல்லையில் மக்கள் ஆர்ப்பாட்டம்

(முல்லைத்தீவு)

**வடக்கு மாகாண முதலமைச்சர் உட்பட வடக்கு மாகாண சபை உறுப்பினர்களை முல்லைத்தீவு தட்டயமலை கிராம மக்கள் வழிமறித்து ஆர்ப்பாட்டம் செய்துள்ளனர். தமக்கு அடிப்படை வசதிகளைக் கோரியே இந்த ஆர்ப்பாட்டம் மேற்கொள்ளப்பட்டது.**

வட மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் முல்லைத் தீவு மாவட்டத்திற்கு நேற்று விஜயம் செய்திருந்தார்.

சட்டவிரோதம ாக கல் அகழ்ந்து செல்லப்படும் வாவெட்டி மலை மற்றும் தட்டயமலை கற்குவாரிகளுக்கு சென்றிருந்த வடமாகாண முதலமைச்சர் அங்குள்ள நிலைமைகளை கேட்டறிந்துகொண்டார்.

அதனைத் தொடர்ந்து ஒட்டுசுட்டான் பிரதேச செயலகத்திற்கும், இயங்காதுள்ள ஓட்டுத் தொழிற்சாலைக்கும், காணிப் பிரச்சினைகள் காணப்படும் கொக்கிளாய் பிரதேசத்திற்கும் சென்றிருந்தார்.

இதேவேளை, புதுக்குடியிருப்பு பிரதேசத்திற்கு விஜயம் மேற்கொண்ட முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன், புதுக்குடியிருப்பு பிரதேச சபைக் கட்டடத்தையும் திறந்து வைத்தார்.

முல்லைத்தீவு மாவட்டத்திற்கு விஜயம் செய்த வடமாகாண முதலமைச்சர் உள்ளிட்ட தரப்பினரை இடைமறித்து தட்டயமலை கிராம மக்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். தமது கிராமத்திற்கு குடிநீர் மற்றும் வயல் நிலங்களுக்கான நீரைப் பெற்றுத்தருமாறு கோரியே தட்டயமலை மக்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

தாம் தொடர்ந்து புறக்கணிக்கப்பட்டு வருவதாகவும், பல்வேறு சிரமங்களை எதிர்நோக்குவதாகவும்

19 ஆம் பக்கம் பார்க்க

## யாழ். நகரில் மர்ம விமானம்



(யாழ்ப்பாணம்)

ஆள் இல்லாத மர்ம விமானம் ஒன்று நேற்றுக்காலை யாழ். நகர வான்பரப்பில் பறந்தது. அனைவரது கண்களிலும் மண்ணைத் தூவிவிட்டு யாருக்கும் தெரியாமல் பாதுகாப்புத் தரப்புக்கும் தெரியாமல் யாழ். வான் பரப்பில் பறந்தது.

சில மணி நேரங்கள் வான் பரப்பில் சஞ்சரித்த இந்த விமானம் தொழில்நுட்ப கோளாறு காரணமாக யாழ். நகரில் உள்ள பிரபல ஹோட்டேல் ஒன்றின் வளாகத்திற்குள் வீழ்ந்து விட்டது. ஹோட்டேல் நிர்வாகத்தினர் உடனடியாக யாழ்.

19 ஆம் பக்கம் பார்க்க

## யாழ். நகரில் கலாசார நிலையம் அடுத்த மாதம் நிர்மாணப் பணி ஆரம்பம்

### அமைச்சர் டக்ளஸ் தகவல்



(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்தில் இந்திய அரசின் நிதியுதவியுடன் பல நவீன வசதிகளைக் கொண்டமைந்த கலாசார மண்டபத்துக்கான அடிக்கல் அடுத்த மாத இறுதிக்குள் நாட்டப்பட்டு கட்டுமானப்பணிகள் முன்னெடுக்கப் படவுள்ளதாக அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணம் வீரசிங்கம் மண்டப கே.சி நித்தியானந்தா அரங்கில் நேற்று இடம்பெற்ற பனை ஆராய்ச்சி மாநாடு - 2014 நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

பனை அபிவிருத்தி சபையின் கீழான பனை ஆராய்ச்சி நிறுவனத்திற்கு ஊடாக பனை வளத்தை சர்வதேச தரத்திற்கு மேம்படுத்துவதே எமது அமைச்சின் நோக்கமாகும்.

அதன்பிரகாரம் பனைவளத்தை நம்பியிருக்கின்ற மக்களது வாழ்வாதாரத்தை மேம்படுத்துகின்ற வகையில் நாம் அரசின் கொள்கைத் திட்டங்களை முன்னெடுத்து வருகின்றோம்.

அந்தவகையில், ஜனாதிபதி

19 ஆம் பக்கம் பார்க்க

## முல்லையில் கத்திக்குத்து ஒருவர் மரணம்

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு, முள்ளியவளை கேப்பாபிலவு பகுதியில் கத்திக் குத்துக்கு இலக்காகி ஒருவர் உயிரிழந்துள்ளதுடன் மற்றுமொருவர் காயமடைந்துள்ளார்.

கேப்பாபிலவிலுள்ள வீடொன்றில் நேற்று முன்தினம் இரவு 8.30 மணியளவில் ஏற்பட்ட மோதலின் போது குறித்த இருவரும் கத்திக் குத்துக்கு இலக்கானதாக பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது. கடும் காயங்களுடன் மாஞ்சோலை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட 38 வயதான ஒருவர் உயிரிழந்துள்ளார்.

19 ஆம் பக்கம் பார்க்க

## ஓய்வுபெறுகிறார் நவிப்பிள்ளை; தருஸ்மன் பதவியேற்க வாய்ப்பு





ஐக்கிய நாடுகள் மனித உரிமை ஆணையாளர் நவநீதம்பிள்ளை எதிர்வரும் ஆகஸ்ட் மாதம் அந்தப் பதவியில் இருந்து விலகவுள்ளார்.

இந்நிலையில் அந்தப் பதவிக்கு மர்சுகி தருஸ்மன் நியமிக்கப்படவுள்ளதாக ஐ.நா. சபையில் இருந்து கிடைக்கும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

19 ஆம் பக்கம் பார்க்க

## தொழுநோயின் தாக்கம் மீண்டும் அதிகரிப்பு

(யாழ்ப்பாணம்)

வலி. மேற்கு பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட பாண்ட வெட்டை, காட்டுப்புலம் பிரதேசங்களில் மீண்டும் தொழுநோய் பரவ ஆரம்பித்துள்ளது.

இதுவரை 79 பேர் இந்நோயினால் பாதிக்கப்பட்டுள்ளதாக சங்கானை சுகாதார வைத்திய அதிகாரியின் கவனத்திற்கு கொண்டு வரப்பட்டுள்ளது.

இதேவேளை, மேற்படி நோயின் தாக்கத்தை உடன் கட்டுப்பாட்டிற்கு கொண்டுவர நடவடிக்கை எடுப்பதுடன் அறிக்கையிடுமாறும் பிரதேச செயலர் கோரியுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. (92)



உதைபந்தாட்ட உலகக் கோப்பை உலகம் தழுவிய முன்னோட்டம்

உள்ளே

பக்கம் 8



## தீவகத்தில் மகிந்தோதய திட்டம் நேற்று கோலாகல ஆரம்பம்

(வேலணை)

தீவக கல்வி வலயத்தில் மகிந்தோதய செயற்றிட்டம் நேற்று ஆரம்பிக்கப்பட்டிருக்கிறது.

இதன்படி வேலணை மத்திய கல்லூரியில் மகிந்தோதய திட்டத்தின் கீழ் தொழில்நுட்ப பீட கட்டடத்திற்கான அடிக்கல் நாட்டும் வைபவமும், தொழில்நுட்ப ஆய்வு கூடத்துக்கான கட்டடத்திற்கான திறப்பு விழாவும் இடம்பெற்றன.

யாழ். வேலணை மத்திய கல்லூரிக்கான மகிந்தோதய தொழில்நுட்ப பீட கட்டடத்திற்கான அடிக்கல் நாட்டும் நிகழ்வு நேற்று நடைபெற்றது.

இக்கட்டடத்திற்கான அடிக்கல்லினை வடமாகாண ஆளுநர் ஜி.ஏ.சந்திரசிறி மற்றும் ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சில்வேஸ்திரி அலன்ரின் ஆகியோர் நாட்டி வைத்தனர்.



மகிந்த சிந்தனையின் 1000 இடைநிலை பாடசாலைகளின்

19 ஆம் பக்கம் பார்க்க

# வடமாகாண கல்வி அமைச்சின் புதிய கட்டடத்திற்கு அடிக்கல்



வடமாகாண கல்வி மற்றும் பண்பாட்டு அலுவல்கள் அமைச்சின் அலுவலகத்தின் புதிய கட்டடத்திற்கான அடிக்கல் நேற்று நாட்டி வைக்கப்பட்டது.

இக்கட்டடத்திற்கான அடிக்கல்லினை வடமாகாண சபையின் அவைத்தலைவர் சீ.வி.கே சிவஞானம் நாட்டி வைத்தார்.

உலக வங்கியினால் ஒதுக்கப்பட்ட 18 மில்லியன் ரூபா நிதியில் இருந்து இக்கட்டட நிர்மாணிப்பு வேலைகள் நடைபெறவுள்ளன.

சுமார் ஒரு வருடத்தில் இக்கட்டடத்திற்கான நிர்மாணிப்பு வேலைகள் பூரணப்படுத்தப்பட வேண்டியுள்ளதாக வடமாகாண கல்வி அமைச்சின் செயலாளர் தெரிவித்தார்.

இப்புதிய கட்டடத்திற்கான அடிக்கல் நாட்டும் நிகழ்வில், வடமாகாண கல்வி அமைச்சின் செயலாளர் ச.சத்தியசீலன் மற்றும் வடமாகாண கல்வி மற்றும் பண்பாட்டு அலுவல்கள் அமைச்சின் அதிகாரிகள் பலர் கலந்து கொண்டனர். (25)

# சமாதான நீதவானாக சத்தியப்பிரமாணம்

(பருத்தித்துறை)



பருத்தித்துறை சாரையடியைச் சேர்ந்த வேலுப்பிள்ளை சிவகுமார் நீதியமைச்சினால் சமாதான நீதவானாக நியமிக்கப்பட்டு பருத்தித்துறை மாவட்ட நீதிபதி ஜே.கஜநிதிபாலன் முன்னிலையில் சத்தியப்பிரமாணம் செய்து கொண்டார். வடமராட்சி வடக்கு, பருத்தித்துறை பிரதேசசபையில் நிர்வாக உத்தியோகத்தராகக் கடமையாற்றும் இவர் ஒரு சமூகசேவையாளருமாவார். (01)


# சேவைநலன் பாராட்டு விழா

(முழங்காவில்)

முழங்காவில் வைத்திய சாலையில் பணியாற்றி இடமாற்றம் பெற்ற டாக்டர்.தி.குமணனின் சேவை நலன் பாராட்டு விழா நேற்று முன்தினம் இடம்பெற்றது.

முழங்காவில் கிருஷ்ணர் ஆலய ஏற்பாட்டில் ஆலய மண்டபத்தில் இடம்பெற்ற இந் நிகழ்வில் ஆலய பரிபாலசன சபையின் தலைவர் இ.குபேந்திரன் தலைமை தாங்கினார்.

இதில் வாழ்த்துரைகளை ஆலய குரு வை. கலைசட செல்வக் குருக்களும் ஆசிரியர் பரதன், மாதர் சங்கத் தலைவி ஆகியோர் நிகழ்த்தினர். (112)



# விண்ணப்பம் கோரல்

(யாழ்ப்பாணம்)

இலங்கை நில அளவைத் திணைக்களத்தின் பயிலுநர் நிகல அளவையாளர் பதவிக்கு தகுதியான இலங்கைப் பிரஜைகளிடம் விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

22-35 வயதிற்குட்பட்ட சிறந்த நன்னடத்தையுடைய, நாட்டின் எப்பாகத்திலும் சேவையாற்றக் கூடிய உடல், உள நலமுடையவர்கள் விண்ணப்பிக்கலாம், பதவி நிரந்தரமானதும், ஓய்வூதியத்திற்கு உட்பட்டதுமாகும்.

நில அளவையியல் விஞ்ஞானமானிப் பட்டம் கல்வித் தகைமையாகக் கருதப்படுகின்றன. நேர்முகத் தேர்வு மூலம் விண்ணப்பங்கள் தெரிவு செய்யப்படும்.

விண்ணப்பங்கள் எதிர்வரும் 23ஆம் திகதிக்கு முன்னர் நில அளவையாளர் நாயகம் நில அளவையாளர் அலுவலகம், இல.150, கிருல வீதி, நாரஹேன்பிட்டி, கொழும்பு 05. என்ற முகவரிக்கு பதிவுத்தபால் மூலம் அனுப்ப வேண்டும். கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் பயிலுநர் நில அளவையாளர் பதவியில் ஆட்சேர்புச் செய்வதற்கான விண்ணப்பம் எனக் குறிப்பிடப்படல் வேண்டும். (105)

# தர்மநோக்கிலான குடிநீர் விநியோகம் தொடர்ந்தும் ஸ்தம்பித நிலையில்

(யாழ்ப்பாணம்)

வட்டுக்கோட்டை மூளாய் வீதியில் உள்ள ஸ்கந்தா மாஸ்ரர் ஞாபகார்த்த குடிநீர் விநியோகத்திட்டம் தொடர்ந்தும் ஸ்தம்பித நிலையில் உள்ளது.

தர்மநோக்கம் கொண்ட உன்னதமான சேவையை மீண்டும் ஆரம்பிக்க மேற்கொள்ளப்பட்ட முயற்சிகள் எதுவும் இதுவரை பயனளிக்கவில்லை.

இவ்விடயம் தொடர்பாக எமது பத்திரிகையில் கடந்த 25 ஆம் திகதி மேற்படி திட்டத்தின் உரிமையாளர் பேபி ரோஜா தெரிவித்த கருத்துக்கள் சில பிரசுரமாகியிருந்தன.

எனினும், அதில் தெரிவிக்கப்பட்டிருக்கும் கருத்துக்களுக்கும் தனக்கும் சம்பந்தமில்லை என்று அவர் மறுத்துரைத்துள்ளார்.

மேற்படி குடிநீர் விநியோகத்தை மீள ஆரம்பிப்பதற்கான முயற்சியாக வலி.மேற்கு பிரதேச செயலர் தலைமையில் விசேட கூட்டம் ஒன்று கடந்த 23 ஆம் திகதி பிரதேச செயலகத்தில் இடம்பெற்றது.

அக்கூட்டத்தில் சம்பந்தப்பட்ட பலரும் இத்திட்டத்தின் யதார்த்த நிலைமைகளை எடுத்து விளக்கினர் என்பது குறிப்பிடத்தகக்து.

# வருடாந்த மஹோற்சவம்

(யாழ். நகர்)

கொக்குவில் கிருபாகர சிவசுப்பிரமணிய சுவாமி கோவில் (புதுக்கோவில்) வருடாந்த மகோற்சவம் இன்று காலை 10.00 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகின்றது.

தொடர்ந்து 10 நாட்கள் நடைபெறும் திருவிழாவில் 11ஆம் திகதி புதன்கிழமை இரதோற்சவமும், 12ஆம் திகதி வியாழக்கிழமை தீர்த்தோற்சவமும் நடைபெறும்.

மகோற்சவ காலங்களில் அடியார் பால், தயிர், இளநீர் என்பவற்றை வழங்குமாறு ஆலய பரிபாலன சபையினர் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (10)

# மீட்கப்படாத நகைகள் ஏல விற்பனை

யாழ். மாவட்டத்தில் உள்ள மக்கள் வங்கி கிளைகளில் 30.04.2013 வரை அடகு வைத்து மீட்கப்படாத நகைகளைப் பகிரங்க ஏலத்தில் விற்பதற்கு வங்கி நடவடிக்கை எடுத்து வருகிறது.

எதிர்வரும் 17ஆம் திகதி காலை 8.30 மணிக்கு யாழ். பிராந்திய தலைமைக் காரியாலயத்தில் பகிரங்க ஏல விற்பனை நடைபெறும் என பிராந்திய முகர்மையாளர் அறிவித்துள்ளார். (10)

# இசைத்தட்டு வெளியீடு

(யாழ்.நிருபர்)

முருகன் மீதான ஏழு பாடல்களை உள்ளடக்கிய முருகன் புகழ்மாலை எனப் பெயரிடப்பட்ட இசைத்தட்டு அண்மையில் வெளியாகியுள்ளது.

பக்தி மணம் கமழும் இந்தப் பாடல்களை இயற்றியிருப்பவர் கலாநிதி சந்திரிகா சுப்பிரமணியம் ஆவார். பாடல்களுக்கான இசையை ரஜனிகாந் வழங்கியிருப்பதுடன், அனைத்துப் பாடல்களையும் பொம்பே சாரதா பாடியுள்ளார்.

மேற்படி முருகன் புகழ்மாலை பாடல் இசைத் தட்டினை தெல்லிப்பளை துர்க்கை அம்மன் கோவில் நிதிக்காக சோமா தொண்டு நிறுவனம் வெளியிட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (10)

# மருதடியானுக்கு மஹோற்சவம்

(சாவகச்சேரி)

சாவகச்சேரி நுணாவில் மேற்கு விளைவேலி மருதடி வீரகத்தி விநாயகர் தேவஸ்தான மஹோற்சவம் இன்று ஆரம்பமாகின்றது.

இன்று காலை 11.00 மணிக்கு கொடியேற்றத்துடன் மஹோற்சவம் ஆரம்பமாகின்றது. எதிர்வரும் 9ஆம் திகதி திங்கட்கிழமை மாலை வேட்டைத் திருவிழாவும், மறுநாள் செவ்வாய்க்கிழமை சப்பரத் திருவிழாவும் இடம்பெறுவதுடன் மறுநாள் புதன்கிழமை காலை 10.00 மணிக்கு தேர்த் திருவிழாவும் இடம்பெறுகின்றது.

வியாழனன்று தீர்த்தோற்சவம் இடம்பெற்று இரவு கொடி இறக்கமும் இடம்பெறும். 13ஆம் திகதி மாலை பூங்காவன உற்சவமும் இடம்பெறவுள்ளது.

ஆலய பிரதம குரு கலாநிதி து.கு.ஜெகதீஸ்வரக் குருக்கள் தலைமையில் இரத்தின வைத்தியநாதக் குருக்கள் மகோற்சவத்தை நடத்திவைப்பார்.

தினமும் காலை 8.30 மணிக்கு திருவிழா ஆரம்பமாகின்றது. அத்துடன் மாலை 6.00 மணிக்கு இரவு விழா ஆரம்பமாகும். தினமும் நண்பகல் மகேஸ்வர பூசை இடம்பெறும் எனவும் ஆலய பரிபாலன சபையினர் அறிவித்துள்ளனர். (இ)

# பரத நாட்டிய அரங்கேற்றம்

(யாழ். நகர்)

யழினிசியரா விஜயசுந்தரவின் பரத நாட்டிய அரங்கேற்ற நிகழ்வு நாளை புதன்கிழமை மாலை 6.30 மணிக்கு புதிய கதிரேசன் மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

செல்வி யழினிசியரா என்ற மாணவி பரதக் கலையில் மிகவும் தேர்ச்சி பெற்ற இந்திய கலாசார நிலையத்தில் நடன ஆசிரியராகவும், தெஹிவளையில் உள்ள விமலோதயா கலசிகள் பரத நாட்டிய கேந்திர நிலையத்தின் பணிப்பாளருமான சுபாஷினி பத்மநாதனின் மாணவியாவார். (10)

# விதை விற்பனை ஊக்குவிப்பு வாரம்

(யாழ்ப்பாணம்)

தேசிய விதை நாற்று ஊக்குவிப்பு வாரம் விவசாயத் திணைக்களத்தினால் பிரகடனப் படுத்தப்பட்டிருப்பதனால் இன்று தொடக்கம் வரும் 6ஆம் திகதி வரை யாழ். மாவட்ட செயலகத்திலுள்ள விவசாயக் கிளையில் சிபார்சு செய்யப்பட்ட நல்லின விதை நடுகைப் பொருட்கள் விற்பனை செய்யப்படவுள்ளன.

இந்நிகழ்வானது இன்று காலை 9.00 மணியளவில் மாவட்டச் செயலாளரினால் ஆரம்பித்து வைக்கப்படவுள்ளது.

இங்கு பழமரக்கன்றுகள், மரக்கறி விதைகள், MI Green மிளகாய் விதைகளுட்பட ஏனைய வயற் பயிர் விதைகள் திணைக்களத்தினால் நிர்ணயிக்கப்பட்ட விலையில் விற்பனை செய்யப்படவுள்ளன. எனவே, இவற்றினைப் பெற்றுக்கொள்ள விரும்புவர்கள் மாவட்ட விவசாயக் கிளையில் பெற்றுக்கொள்ளலாம்.

# அன்பளிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ். பல்கலைக்கழக பாதுகாப்பு உத்தியோகஸ்தர் நலம் புரிக் கூட்டுறவுச் சங்கத்தினால் சிவபூமி வயோதிபர் இல்லத்திற்கு சில சாதனங்கள் வழங்கும் நிகழ்வு நாளை காலை 9.00 மணிக்கு யாழ். பல்கலைக்கழகத்தில் இடம்பெறவுள்ளது.

யாழ். பல்கலைக்கழகத் துணைவேந்தர் இவற்றை வழங்கவுள்ளார்.


## சிறு விளம்பரம்

**டயானா பிளாஸ்ரிக்**


*றீசைக்கிள் (மீள் சுழற்சி)*

அனைத்து வகையான கழிவு பிளாஸ்ரிக், பொலித்தீன், என்பன விலைக்கு வாங்கப்படும். ரூபா 30 தொடக்கம் ரூபா 70 வரை.

இல.06 கனகசபை லேன்,
சிவலிங்கப்புளியடி,
வண்ணார்பண்ணை,
யாழ்ப்பாணம்.
021 222 8680,
077 592 5088.

(C/3395)

# வறுமையில் கற்கும் மாணவர்களுக்கு கற்றல் உபகரணம் வழங்கல்



(முல்லைத்தீவு)

தந்தை, தாய் அல்லது இருவரையும் இழந்த நிலையில் வறுமையுடன் கல்வி கற்கும் மாணவர்களுக்கு அத்தியாவசிய பொருட்கள் சில வழங்கும் நிகழ்வு வடமாகாண சபை உறுப்பினர் ரவிகரனின் ஏற்பாட்டில் அண்மையில் நடைபெற்றது.

முல்லைத்தீவு - கள்ளப்பாடு பொதுநோக்கு மண்டபத்தில் காலை 9 மணிக்கு ஆரம்பமான இந்நிகழ்வில் 66 மாணவர்களுக்கான பொருட்கள் வழங்கப்பட்டதோடு வடக்கு கிழக்கு மாகாணங்களில் வறுமை நிலையால் கல்வியைத் தொடரமுடியாது இடைவிடும் மாணவர்களின் நிலை தொடர்பில் மேலும் அறியவருவதாவது,

தாய், தந்தை அல்லது இருவரையும் யுத்தத்தில் இழந்த மாணவர்களின் கல்வியை மேம்படுத்தும் ஒரு கட்டமாக புத்தகப்பை, காலணி, கொப்பிகள் மற்றும் சீருடைகள் வழங்கும் நிகழ்வை வடமாகாணசபை உறுப்பினர் ரவிகரன் ஏற்பாடு செய்திருந்தார்.

மேற்படி செயற்றிட்டத்தின் முதலாம் கட்டம் முள்ளிவாய்க்கால் மண்ணில் மே 17 அன்று முள்ளிவாய்க்கால் மேற்கைச் சேர்ந்த 21 மாணவர்களோடு நடாத்தப்பட்ட நிலையில் அதன் அடுத்த கட்டம் செல்வபுரம், கள்ளப்பாடு, சிலாவத்தை, பொன்னகர், முள்ளியவளை மத்தி, வள்ளிபுனம், தேவிபுரம், தேராவில் போன்ற பகுதிகளில் வசிக்கும் மாணவர்கள் தெரிவுசெய்யப்பட்டு முல்லைத்தீவு கள்ளப்பாடு பொதுநோக்கு மண்டபத்தில் இடம்பெற்றுள்ளது.

மேற்படி நிகழ்வில் வடமாகாண சபையின் பிரதி அவைத்தலைவர் ம.அன்ரனி ஜெகநாதன், வடமாகாணசபை உறுப்பினர்கள் வீ.கனகசுந்தர சுவாமி, திருமதி.மேரி கமலா குணசீலன் ஆகியோரும் கிராமத்தின் பிரதிநிதிகளான குணசிங்கராசா, செ.இரத்தினசிங்கம், பொ.கிருஷ்ணகுமார் ஆகியோரும் கலந்துகொண்டு மாணவர்களுக்கு பொருட்களை வழங்கியதோடு தேசத்தின் கல்வி வளர்ச்சியின் அவசியம் தொடர்பில் கருத்துக்களை வழங்கினார். (40)

## மஹோற்சவம்

(யாழ்ப்பாணம்)

கும்பிழாவளைப் பிள்ளையார் கோவில் வருடாந்த மஹோற்சவம் இன்று செவ்வாய்க்கிழமை மு.ப. 10 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது.

தொடர்ந்து பத்து தினங்கள் நடைபெறும் திருவிழாவில் எதிர்வரும் 11 ஆம் திகதி சப்பறத்திருவிழாவும், 12 ஆம் திகதி தேர்த்திருவிழாவும், 13 ஆம் திகதி தீர்த்தத்திருவிழாவும், 14 ஆம் திகதி பூங்காவனத்திருவிழாவும் நடைபெறவுள்ளன.

## விண்ணப்பங்கள் கோரல்

(கரவெட்டி)

கரவெட்டி பிரதேச செயலகப் பிரிவில் அலுமினியம் பொருத்துதல், றேடியோ மற்றும் தொலைக்காட்சி திருத்துதல் போன்ற பயிற்சி நெறிகளுக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

விண்ணப்பிக்க விரும்புவோர் இம்மாத இறுதிக்குள் தங்கள் பதிவுகளை கரவெட்டி பிரதேச செயலகத்தின் திறன் அபிவிருத்தி உதவியாளருடன் தொடர்பு கொண்டு மேற்கொள்ளுமாறு கரவெட்டிப் பிரதேச செயலர் எஸ்.சிவசிறி அறிவித்துள்ளார். (18)

## நான்குநாள் செயலமர்வு

(யாழ்.நிருபர்)

1000 இரண்டாம் நிலைப்பாடசாலைகளை அபிவிருத்தி செய்யும் கருத்திட்டத்தின் கீழ் அபிவிருத்தி அடைந்து வரும் பாடசாலைகளில் தரம் 6 - 11 வரை விஞ்ஞான பாடத்தைக் கற்பிக்கும் ஆசிரியர்களைப் பயிற்றுவிக்கும் நான்குநாள் செயலமர்வினை கல்வியமைச்சு நடாத்தவுள்ளதென கல்வியமைச்சின் விஞ்ஞானக்கல்விப் பணிப்பாளர் எம்.பி.விபுலசேன தெரிவித்துள்ளார்.

இச்செயலமர்வு எதிர்வரும் யூலை மாதம் 17 ஆம் திகதி தொடக்கம் 20 ஆம் திகதி வரை நான்கு நாட்கள் தினமும் காலை 8.30 மணி தொடக்கம் இரவு 8.30 மணி வரை தொம்பேசியனே தேசிய பாடசாலையில் நடைபெறவுள்ளதென அவர் மேலும் தெரிவித்தார்.

மேலும் இச்செயலமர்வு க.பொ.த. சாதாரணதரத்தில் விஞ்ஞான பாடத்தில் சித்தியடையும் மாணவர்களின் சதவீதத்தை அதிகரிப்பதுடன் க.பொ.த. உயர்தர விஞ்ஞான பாடத்துறைக்கு மாணவர்களின் பங்கேற்பை அதிகரிப்பதும் குறித்து இச்செயலமர்வில் ஆசிரியர்களுக்குப் பயிற்சியளிக்கப்படவுள்ளதாகவும் கல்வி அமைச்சின் விஞ்ஞான கல்விப்பணிப்பாளர் எம்.பி.விபுலசேன தெரிவித்துள்ளார். (10)

## மொழிபெயர்ப்பாளர் நியமனம்


(வடமராட்சி)



புலோலி மேற்கு பருத்தித்துறையைச் சேர்ந்த சம்பந்தர் சிவராஜசிங்கம் தமிழ் - ஆங்கில அரசமொழி பெயர்ப்பாளராக நீதியமைச்சினால் நியமிக்கப்பட்டு பருத்தித்துறை மாவட்ட நீதிபதி ஜே.கஜநிதிபாலன் முன்னிலையில் சத்தியப்பிரமாணம் செய்துகொண்டார்.

இளைப்பாறிய தபால் அத்தியட்சகரான இவர் சமாதான நீதவானுமாவார். இவர் சிறந்த சமூகசேவையாளரென்பதும் குறிப்பிடத்தக்கது. (01)

# சிங்கள மக்களே என்ன சொல்கிறீர்கள்?




எப்பவும் எனக்கொரு சந்தேகம்.

ஐக்கிய இலங்கையை தமிழாக்களும் முஸ்லிம்களும் விரும்பிறது இருக்கட்டும். அதைச் சிங்களவர்கள் விரும்புகிறார்களா?

ஏனெண்டால், அநேகமாகத் தமிழர்களையும் முஸ்லிம்களையும் விலத்தி வைக்கிறது, ஓரங்கட்டிறது, அடக்கி வைக்கிறது, புறக்கணிக்கிறது, பொருட்படுத்திறதில்லை எண்ட மாதிரி ஜனநாயகத்துக்கும் ஐக்கியத்துக்கும் மாறாக சிங்களவர்கள்தான் நடக்கிற மாதிரித் தெரியுது.

**'நாங்கள் உங்களோட ஒண்டாக இருக்க விரும்பிறம்'** எண்டாலும் **'இல்லை, அப்பிடி வேண்டாம். நீங்கள் அப்பிடியிருக்கேலாது. அகத்தி ஆயிரம் பூத்தாலும் புறத்தி புறத்திதான்'** எண்டு சொல்லிறமாதிரித்தான் தெரியுது.

ஒரு சின்ன உதாரணம்.

வடக்குக் கிழக்குப் பகுதிகளுக்கு கொழும்பில இருந்து வாற அமைச்சர்மார், அண்டைக்கே திரும்பிப் பறந்திடுகினம்.

வாறது, இஞ்ச நாலு இடத்துக்கு ஓடியோடிப்போய் நாலு கட்டிடத்தைத் திறக்கிறது, அல்லது ரண்டு அடிக்கல்லை வைக்கிறது, அப்பிடியே நிண்ட நிலையில தேத்தண்ணியைக் குடிக்கிறது, பின்னேரம் பறந்திடுறது.

சிலர் ஆசை, அருமையாக ஒரு நாள் இரவு இஞ்ச தங்கிப் போவினம்.

மற்றப்படி இதுதான் இவையின்ரை நிகழ்ச்சி நிரலும் தேசப்பணியும் இன நல்லிணக்கத்துக்கான முயற்சியும் ஐக்கிய இலங்கையைக் கட்டியெழுப்பும் வேலைத்திட்டமும்.

–இன்னும் என்ன கத்தரிக்காயோ.... அதெல்லாம்.

**ஒரு அமைச்சராவது வடக்குக் கிழக்குப் பகுதிகளில வந்து நாலு நாள் நிண்டு, இந்தச் சனங்கள் என்ன செய்யுதுகள், என்ன நினைக்குதுகள், எப்பிடி வாழுதுகள் எண்டு இதுவரையில பாத்திருக்கினமா?**

**தேசிய நல்லெண்ணத்தைக் கட்டியெழுப்புகிற அமைச்சர், தேசிய மொழிகள் ஒருங்கிணைப்பு அமைச்சர், மீள் குடியேற்ற அமைச்சர், புனர்வாழ்வு அமைச்சர் எண்டெல்லாம் இருக்கிற அமைச்சர்களுக்கு இஞ்ச–வடக்குக் கிழக்கிலதான் வேலையே தவிர, அங்க–கொழும்பில இல்லை.**

ஆனால், அவை இஞ்சால் பக்கம் எட்டியும் பாக்கிறதில்லை. அப்பிடித்தான் தப்பித் தவறி இஞ்சாலுப்பக்கம் வந்தாலும் ஒரு இரவு கூட இங்க தங்கிறதில்லை.

அப்பிடித் தங்கி, ஆறுதலாக நிண்டு பேசினால்தானே தெரியும், இந்தச்சனங்களுக்கு என்ன தேவை? அவர்கள் எதையெல்லாம் விரும்புகினம்? எண்டதெல்லாம்.

முந்தித்தான் புலிப்பயம் எண்டு எப்பவும் கிலியாக இருந்திச்சினம். இப்ப என்ன பயம்? எதுக்குப் பயப்படவேணும்?

இஞ்ச [வடக்குக் கிழக்கில] தங்கி நாலுபேரோட கதைச்சால், சனங்கள் கேட்கிற கேள்விகளுக்குப் பதில் சொல்லேலாது.

வேற ஒண்டுமில்லை, **நாங்கள் ஐக்கியமாக இருக்க விரும்பிறம். நீங்கள் ஏன் ஐக்கியத்தை விரும்பிறியள் இல்லை. எப்ப பார்த்தாலும் எங்களப் புறத்தி காட்டிறியள்...** எண்டு கேட்டால் தாங்கள் என்ன சொல்லிறது எண்ட பயம்...

இந்தப் பயம் புலிப் பயத்தை விடப் பெரிய கிலியைக் தரும் பயமெல்லோ....

தமிழாக்களில் ஆயிரம் பிழைகள் இருக்கலாம். அப்பிடிப் பிழைகள் இருக்கெண்டதை நானும் சொல்லிறன்.

**ஆனால், அரசாங்கம் எண்டும், ஆட்சி அதிகாரம் எண்டும். பெரும்பான்மை எண்டும், போரில வெற்றி பெற்றவர்கள் எண்டும் இருக்கிற நீங்கள் (சிங்கள ஆட்கள்) கொஞ்சம் கண்ணியமாக - பெருந்தன்மையோட நடந்தால் இதெல்லாத்தயும் சரியாக்கேலாதா?**

சிங்களப் பண்பாடு வலு சிறப்பு எண்டு எங்கட மாமா அடிக்கடி சொல்லுவார்.

நாங்கள் 'கிரிபத்'தை மட்டும் ருசியானது எண்டு சொல்லேல்ல. சிங்கள மக்களின் பண்பாட்டையும்தான் நல்லதெண்டு சொல்லிறம்.

ஆனால், அரசியல் தெரிவு எண்டு வந்தால் 'நீங்க வேறு – நாங்க வேறு' எண்டு சொல்லுற ஆக்கள்தானே முன்னுக்கு வருகினம்...

**எங்களை ஒரு பக்கம் எங்கட தமிழ்த்தலைவர்கள் ஏமாற்றுகினம். மற்றப்பக்கத்தால உங்களை உங்கட அரசியல்வாதிகளும் அரசாங்கமும் ஏமாத்திக் கொண்டிருக்கினம்.**

சத்தியமாகச் சொல்லுங்கோ... அப்பிடியெண்டால் நாங்கள் ஐக்கியத்தைப் பற்றி ஆரோட கதைக்கிறது? ஆரார் கதைக்கிறது?

எனக்குத் தெரியும்... விட்டுக்குடுத்துச் சேர்ந்து வாழோணுமெண்ட விருப்பம் உள்ளவை ரண்டு பக்கத்திலயுமிருக்கினம். அவையின்ர கதையை எப்பிடி அம்பலத்துக்கு முன்னுக்கு வரப்பண்ணிறது?

நீங்களும் ரண்டு படி இறங்கிவந்து பேசவேணும்... நாங்களும் நாலு படி ஏறி வாறம்... எல்லாத்தையும் பேசித் தீர்க்க நாங்கள் இப்பவாவது மனப்பட வேணும்.

அழுங்குப்பிடிகளை விட்டிட்டுப் பேசினால், பெருந்தன்மை காட்டி நடந்துகொண்டால் இதொண்டும் தீர்க்கேலாத பிரச்சினையில்லை எண்டு ரண்டு பக்கத்திலயும் உண்மையா நம்புறவை கொஞ்சம் யோசியுங்கோ... வெளியில வாங்கோ...

சில நேரங்களில் புத்தி வெற்றி பெறுகிறது. பல நேரங்களில் வெற்றியே புத்தியாகிவிடுகிறது. -கவிஞர் கண்ணதாசன்-

தினப்பதிப்பு
தினமுரசு
THINAMURASU
இல:373, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி : 0212223628, கைத்தொலைபேசி : 0777193264
தொலைநகல் : 0212221811, thinamurasu@live.com
Online : www.emurasu.com

## நியாயம் எங்கட பக்கம்தான்...

திரையில் டைட்டில் கார்ட்டில் வசனகர்த்தா பெயர் வரும்போது, தியேட்டரில் கைதட்டலும் விசிலும் கிடைத்தது முதன்முதலில் தனக்குத்தான் என்று எழுத்தாளர் பாலகுமாரன் ஒரு பேட்டியில் சொன்னார்.

நாயகன் படத்துக்கு அவர் எழுதியிருந்த வசனங்களுக்குப் பிறகே தமிழ் சினிமா ரசிகர்களிடமிருந்து அவருக்கு அந்தக் கைதட்டல்கள் வந்தது. "நாலு பேருக்கு நல்லது செய்யலாம் என்றால் எதுவுமே தப்பில்லை", "நீங்க நல்லவரா கெட்டவரா.... தெரியலயேப்பா...." என அதில் வரும் பல வசனங்கள் இன்றும் பலராலும் நினைக்கப்படுபவை.

அதே படத்தில், தந்தை செய்யும் கட்டப் பஞ்சாயத்து மற்றும் கொலைகளை நிறுத்தும்படி கேட்கும் மகளுக்கு கமல்ஹாசன் சொல்லும் பதிலும் பிரபலமானது. "அவங்கள நிறுத்தச் சொல்லு நான் நிறுத்தறேன்".

நம் நாட்டிலுள்ள பிரச்சினையிலும், இரண்டு தரப்புமே மாறி மாறி அவர்கள்தான் திருந்த வேண்டும் என்று நினைத்துக் கொள்வதுதான் நடக்கிறது. அதைவிடுத்து, சிங்களத் தரப்பில் எழுதுபவர்களும் பேசுபவர்களும் சிங்கள மக்களின் நினைப்புகளில் என்ன மாற்றங்கள் வேண்டும் என்ன விட்டுக்கொடுப்புகளைச் செய்ய வேண்டும் என்பதைச் சொல்வதும் தமிழ்த் தரப்பிலிருந்து எழுதும்–பேசும் நண்பர்கள் தமிழ் மக்கள் தங்களது நல்லெண்ண சமிக்ஞையைக் காட்ட எவ்வாறு நடந்துகொள்ள வேண்டும் என்பதைச் சொல்வதும்தான் இங்கு பிரச்சினை தீர உதவும்.

மாறாக, சிங்களவர்கள் முதலில் திருந்தட்டும் என்று நாங்களும், தமிழர்கள்தான் திருந்தவேண்டியிருக்கிறது என்று அவர்களும் ஏட்டிக்குப் போட்டியாக நினைத்துக் கொள்வதும், எழுதிப் பேசிக் கொண்டிருப்பதும் பழையபடி சண்டையை முதலிலிருந்து ஆரம்பிப்பதற்குரிய வழிமுறைதான்.

நாங்கள் தோற்றுப் பலவீன நிலையில் இருப்பவர்கள்... போரில் வென்று பெரும்பான்மை அதிகாரத்திலும் இருப்பவர்கள்தானே இறங்கிவந்து பேச வேண்டும், பெருந்தன்மையைக் காட்ட வேண்டும் என்றொரு 'தமிழ்நியாயத்தை' அதுதானே பொதுநியாயமும் கூட என்று நாம் நினைத்துக்கொள்கிறோம்.

ஒருவேளை போரில் நாம் வென்ற தரப்பாக இருந்திருந்தால் இன்றைக்கு நமது யோசனைகள் எப்படியிருந்திருக்கும் என்பதை ஒருகணம் சிந்தித்துப் பார்த்தாலே... நாம் மற்றவர்களிடம் எதிர்பார்த்துக் கொண்டிருக்கும் நியாயங்களிலுள்ள அபத்தம் நமக்குப் புரிந்துவிடும்.

இந்த வெற்றியை சிங்களப் பொதுமக்கள் எப்படிப் பார்க்கிறார்கள் எப்படி உணர்கிறார்கள் என்பதை அறியமுற்படாமலும், உரத்ததிரும் நம் 'தமிழ்நியாயங்க'ளினாலேயே நம் காதுகளை அடைத்துக் கொள்கிறோம். அவர்களைப் பொறுத்தவரை பஸ்களிலும் பள்ளிக்கூடங்களிலும் குண்டுகள் வெடிக்கலாம் என்ற பயங்கரவாத அச்சத்திலிருந்து மீளவைத்த வெற்றி.

இன்றும் கூட கொழும்பின் பிரபல பாடசாலைகளில் தமிழ்ப் பிள்ளைகளினதும் பெற்றோரினதும் பொதிகளின் மேலுள்ள அச்சத்தால் சிங்கள முஸ்லிம் பறங்கிப் பிள்ளைகளின்–பெற்றோரின் பொதிகளையும் சேர்த்துச் சோதித்தே உள்ளே விட்டுக்கொண்டிருக்கிறார்கள்.

நாமோ இங்கு இன்னும் புலிகளின் காலத்துச் சவால்களையும் போர் வெடிக்கும் எச்சரிக்கைகளையும் கைவிடாதவர்களாகவே, அந்த நினைப்புகளில் எப்பனும் மாறியதாக காட்டிவிடாமலே இருந்துகொண்டு.... சிங்களவர்களுக்குத்தான் பெருந்தன்மை வேண்டும், வென்றவர்கள் இறங்கி வராதிருப்பதுதான் மனிதகுல விரோதம் என்பதாகச் சொல்லி – நம்பிக் கொண்டிருக்கிறோம்.

ஒருபக்கத்தில் வீம்புப் பேச்சுக்களுடனும் சர்வதேசத்தைச் சொல்லி மிரட்டிக்கொண்டும், மற்றவளத்தால், பெருந்தன்மையைக் காட்டுங்கள் என்று கேட்க முடியாது. இன்றுள்ள நிலைகளைப் புரிந்து எங்களை மாற்றிக்கொண்டுதான் அவர்கள் மனசாட்சியைச் சென்று தட்டமுடியும்.

- ஆசிரியர்.

# இலங்கையில் 30 சதவீதமானவர்கள் வாக்காளர் பதிவில் அக்கறையில்லை

## - பிரதி தேர்தல் ஆணையாளர் தெரிவிப்பு-

இலங்கையில் 30 சதவீதமான மக்கள் வாக்காளர் பதிவு தொடர்பில் அக்கறையின்றி இருப்பதாக பிரதித் தேர்தல் ஆணையாளர் எம்.எம்.முகமட் தெரிவித்தார்.

கிளிநொச்சி மாவட்ட செயலகத்தில் நேற்று நடைபெற்ற வாக்காளர் தின நிகழ்வில் உரையாற்றுகையிலே அவர் இவ்வாறு கூறினார்.

அங்கு அவர் மேலும் உரையாற்றுகையில்,

மேற்படி மக்கள் வாக்காளர் பதிவு தொடர்பில் அக்கறையின்றி இருப்பார்கள். தேர்தல் காலத்தில் நாங்கள் வாக்காளர்களாக பதிய மறந்துவிட்டோம். எங்களையும் வாக்களிப்பதற்கு அனுமதியுங்கள் என்று கடிதங்கள் மற்றும் தொலைபேசிகள் மூலம் எங்களிடம் தொடர்பு கொள்வார்கள்.

இதனைத் தவிர்த்து வாக்காளர் இடாப்பின் பதிவுகள் மேற்கொள்ளும்போது, தங்களையும் வாக்காளர்களாக இணைத்துக் கொள்ள வேண்டும். வாக்களிப்பது உரிமை. நீங்கள் வாக்களிப்பதன் மூலம் சட்டங்களை இயற்றும் நாடாளுமன்ற பிரதிநிதிகளை, மாகாணசபை மற்றும் உள்ளூராட்சிமன்ற பிரதிநிதிகளைத் தெரிவுசெய்வதுடன், நாட்டின் ஜனாதிபதியையும் தெரிவு செய்ய முடியும்.

மேலும், தொழில் வாய்ப்புக்களை நீங்கள் நாடும்போது உங்கள் வாக்காளர் அட்டையை சில இடங்களில் கேட்கின்றார்கள். வடமாகாணத்தில் கிளிநொச்சி, யாழ்ப்பாணம் ஆகிய மாவட்டங்களுக்கு தலா 6 நாடாளுமன்ற உறுப்பினர்களே தெரிவுசெய்யப்படுவார்கள். 5 பேர் வாக்களிப்பு மூலமும் ஒருவர் மாகாண ஒதுக்கீட்டின் மூலமும் தெரிவு செய்யப்படுவார்கள்.

நாடாளுமன்ற உறுப்பினர்கள் குறைந்தமைக்கான காரணம் வாக்காளர்களின் எண்ணிக்கை விகிதாசார அடிப்படையில் குறைவடைந்தமையே ஆகும் என்றார்.

# விசா வழங்குவதில் தீர்மானம் இல்லை

## என்கிறார் கெஹலிய

ஐக்கிய நாடுகள் சபையின் முன்னாள் பொதுச செயலாளர் கோபி அனானுக்கு விசா வழங்குவது தொடர்பில் இதுவரை தீர்மானிக்கப்படவில்லை என அரசாங்கம் தெரிவித்துள்ளது. அமைச்சரவை பேச்சாளர் அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல்ல இதனைத் தெரிவித்துள்ளார்.

இலங்கையில் இடம்பெற்றதாகக் கூறப்படும் மனித உரிமை மீறல்கள் தொடர்பான குற்றச்சாட்டுக்களை விசாரணை செய்யும் குழு தொடர்பான விபரம் எதிர்வரும் தினங்களில் அறிவிக்கப்படும் என ஐக்கிய நாடுகளின் நாளாந்த செய்தியாளர் சந்திப்பில் கலந்துரையாடப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது.

அந்தக் குழுவிற்கு விசேட கண்காணிப்பாளராக கோபி அனான் நியமிக்கப்படலாம் என்று செய்திகள் வெளியாகியுள்ளன. இந்த நிலையிலேயே, அனானுக்கு இலங்கை வர விசா வழங்குவது தொடர்பில் இன்னும் தீர்மானிக்கவில்லை என்று கெஹலிய ரம்புக்வெல்ல குறிப்பிட்டுள்ளார்.

# கைதான இந்திய மீனவர்களை விளக்க மறியலில் வைக்க உத்தரவு

(தலைமன்னார்)

தலைமன்னார் கடற்பரப்பில் வைத்து கடந்த சனிக்கிழமை இரவு கடற்படையினரால் கைது செய்யப்பட்ட இந்தியா இராமநாதபுரத்தைச் சேர்ந்த 29 மீனவர்களும் நேற்று மன்னார் நீதிமன்றத்தில் ஆஜர்ப்படுத்தியபோது குறித்த மீனவர்களை இம்மாதம் 16 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு மன்னார் நீதவான் ஆனந்தி கனகரட்ணம் உத்தரவிட்டார்.

இந்தியா இராமநாதபுரத்தைச் சேர்ந்த 29 மீனவர்களும் 6 படகுகளில் கடந்த சனிக்கிழமை இரவு இலங்கை கடற்பரப்பினுள் அத்துமீறி நுழைந்து மீன்பிடியில் ஈடுபட்டுக்கொண்டிருந்த போது சனிக்கிழமை இரவு 11 மணியளவில் தலைமன்னார் கடற்பரப்பில் வைத்து கடற்படையினர் கைது செய்து தலைமன்னார் கடற்படை முகாமிற்கு கொண்டு சென்றதோடு குறித்த படகுகளையும் முகாமிற்கு கொண்டு சென்றனர்.

இந்த நிலையில் குறித்த 29 மீனவர்களும் மன்னார் மாவட்ட கடற்றொழில் திணைக்கள அதிகாரிகளிடம் ஒப்படைக்கப்பட்ட நிலையில் குறித்த மீனவர்களின் படகுகளில் உள்ள வலைத் தொகுதியினை கடற்படையினர் நேற்று கடற்றொழில் திணைக்கள அதிகாரிகளிடம் ஒப்படைத்தனர்.

மன்னார் நீதவான் குறித்த மீனவர்களை எதிர்வரும் 16 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்க உத்தரவிட்டதோடு, குறித்த மீனவர்களின் படகுகள் மற்றும் வலைத்தொகுதிகளை கடற்படையூடாக பாதுகாக்க நடவடிக்கை எடுக்குமாறு கடற்றொழில் திணைக்கள அதிகாரிகளுக்கு உத்தரவிட்டார்.

# சீரற்ற காலநிலை 13 பேர் உயிரிழப்பு

நாட்டின் பல பாகங்களிலும் பெய்த மழையைத் தொடர்ந்து ஏற்பட்ட வெள்ளப்பெருக்கு மற்றும் மண்சரிவு காரணமாக குறைந்தபட்சம் 13 பேர் உயிரிழந்ததுடன், பலர் காயமடைந்துள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கடந்த 12 மணித்தியாலங்களில் மண்சரிவு மற்றும் வெள்ளப்பெருக்குக் காரணமாக மாலபேயில் 2 பேரும், புலத்சிங்களவில் 3 பேரும், மத்துகமவில் 5 பேரும், அகலவத்தையில் 2 பேரும், வலிபென்னவில் ஒருவரும் உயிரிழந்ததாகவும் பொலிஸார் கூறினர்.

# தொடருந்து சேவைகள் இயல்பு நிலைக்குத் திரும்பியுள்ளன

(கொழும்பு)

தொடருந்து சேவைகள் இயல்பு நிலைக்கு திரும்பியுள்ளன.

கடும் மழை காரணமாக பல தாழ் நிலங்கள் நீரில் மூழ்கியுள்ளதாக அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையம் குறிப்பிட்டுள்ளது.

இந்த நிலையில், றாகம தொடருந்து நிலையம் நீரில் தாழ்ந்த நிலையில் நேற்றுக் காலை முதல் வடக்கு தொடருந்து சேவைகள் பாதிக்கப்பட்டிருந்தது.

எனினும் தற்போதைய நிலையில் வெள்ள நீர் வடிந்துள்ள நிலையில் தொடருந்து போக்குவரத்து வழமைக்கு திரும்பியுள்ளதாக தொடருந்து கட்டுப்பாட்டு மையம் அறிவித்துள்ளது.

# மீனவர்களுக்கு எச்சரிக்கை

மன்னாரில் இருந்து கொழும்பு ஊடாக பொத்துவில் வரையிலான கடற்பகுதியில் 80 கிலோமீற்றர் வேகத்தில் காற்று வீசும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

காலநிலை அவதான நிலையம் இந்த அறிவிப்பை விடுத்துள்ளது.

இதன் காரணமாக கடற்றொழிலுக்குச் செல்பவர்கள் எச்சரிக்கையுடன் செயற்படுமாறும் அவதான நிலையம் குறிப்பிட்டுள்ளது.

# இன்றுள்ள நெருக்கடி நிலையில் இருந்து தமிழரை மீட்க....

**தமிழ் அரசியலாளர்கள் ஒருமித்த கருத்துடன் தமிழ் மக்களின் அரசியல் தீர்வு பற்றிய கோரிக்கையொன்றினை அல்லது திட்ட வரைபொன்றினை முன் மொழியும் பட்சத்தில் அது சாதகமான அரசியல் சூழலொன்றினை உருவாக்கக்கூடியதாக அமையும். வழங்கப்பட்ட அதிகாரப்பரவலாக்க அடிப்படையிலான மாகாண சபை அமைப்பும் மக்களால் தெரிவு செய்யப்பட்ட அங்கத்தவர்களைக் கொண்டதாக இருப்பினும், அதன் செயற்பாடுகள் எதுவும் மக்களுக்குப் பயனுள்ள வழியில் இடம்பெறாமல் இருப்பது, தமிழ் மக்கள் மத்தியில் வல்லமை மிக்க அரசியல் நடைமுறைப்படுத்தப்படவில்லை என்பதைக் காட்டுவதாகவே கொள்ள வேண்டியுள்ளது.**

யாழ். பல்கலைக்கழக சிரேஷ்ட விரிவுரையாளர் சோமேசசுந்தரி கிருஷ்ணகுமார் கட்டுரையிலிருந்து

இலங்கை என்ற அழகிய தீவில் இடம்பெற்ற நீண்ட குடியியல் யுத்தம் தணிந்து ஐந்து ஆண்டுகள் கடந்துள்ளன. இந்தக் காலப்பகுதியில் தமிழ் மக்கள் வாழும் பிரதேசங்களில் நிலவும் அரசியல், பொருளாதார, சமூக பண்பாட்டு விடயங்களில் காணப்படும் போக்கினைக் குறிப்பிடுவதாயின், ஒரு வெறுமையான நிலையும் அதன் தாக்கங்களுமே காணப்படுகிறது எனச் சுருக்கமாகக் கூறி விடலாம். யுத்த சகாப்தம் முப்பது வருடங்கள் நீடித்திருந்தன. இன்னொருவகையில் சொல்வதானால் ஒரு தலைமுறை காலம் நீடித்திருந்தது. ஒரு தலைமுறையினர் யுத்தத்திலேயே பிறந்து வளர்ந்தவர்கள். இன்னொரு தலைமுறையினர் யுத்தத்தில் தமது இளமைக்காலத்தைக் கழித்தவர்கள். இதற்கும் மேலாக யுத்தம் காரணமாக உயிர், உடைமை, அவயவங்கள் ஆகியவற்றை இழந்தவர்களும் அதீத மன உளைச்சலுக்கு ஆளானவர்களும் மீள முடியாத துயரில் உள்ளவர்களும் என துன்பங்கள் நீண்டவையாகவும் பரிகாரமற்றவையாகவுமுள்ளன.

இவை ஒரு புறமாக நீண்ட யுத்த நிலை முடிவிற்கு வந்த போதிலும் மக்களின் பிரச்சினைகள் எனப் பார்க்கும் போது இருந்தவற்றை இழந்தது மட்டுமன்றி புதிதாக உருவாகியுள்ள சூழலில் வேதனைகளை எதிர்கொள்ளும் நிலையில் உள்ளனர். துன்பங்களை அனுபவித்து இழப்புக்களுடன் ஏதோ மிகுதி வாழ்வை வாழ்ந்து பார்க்கலாம் என்ற நிலையில் உள்ள மக்களுக்கு எதிர்காலம் பற்றிய கேள்விக் குறிகளே எஞ்சியுள்ளன.

இந்தப் பிரச்சினைகள் யாவற்றிலும் மூலப்பிரச்சினையாக அமைந்த அரசியல் பற்றிய விடயங்கள் வெற்றிடமாக உள்ளன. அந்த விடயம் பற்றி பல்வேறு தரப்பினராலும் பல்வேறு கருத்துக்கள் முன்வைக்கப்பட்டாலும் காத்திரமான தமிழர் அரசியல் திட்டங்களோ, கொள்கை வகுப்புகளோ காணப்படவில்லை.

அரசியல்கட்சிகள் பலவாக உள்ளன. மேலும், புதிய அரசியல் கட்சிகள் உருவாகினாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை. கட்சிகளின் அங்கத்தவர்களிடமும் கருத்தொருமை முழுமையாகக் காணப்படவில்லை. இவ்வாறு பார்க்கும்போது யுத்தத்திற்கு முன்பிருந்த அரசியல் நிலையை விட வலுவற்ற வெறுமை மிக்கதாகத் தமிழ் மக்களின் அரசியல் நிலை உள்ளது.

தமிழ் அரசியலாளர்கள் ஒருமித்த கருத்துடன் தமிழ் மக்களின் அரசியல் தீர்வு பற்றிய கோரிக்கையொன்றினை அல்லது திட்ட வரைபொன்றினை முன் மொழியும் பட்சத்தில் அது சாதகமான அரசியல் சூழலொன்றினை உருவாக்கக்கூடியதாக அமையும். வழங்கப்பட்ட அதிகாரப்பரவலாக்க அடிப்படையிலான மாகாண சபை அமைப்பும் மக்களால் தெரிவு செய்யப்பட்ட அங்கத்தவர்களைக் கொண்டதாக இருப்பினும் அதன் செயற்பாடுகள் எதுவும் மக்களுக்குப் பயனுள்ள வழியில் இடம்பெறாமல் இருப்பது, தமிழ் மக்கள் மத்தியில் வல்லமை மிக்க அரசியல் நடைமுறைப்படுத்தப்படவில்லை என்பதைக் காட்டுவதாகவே கொள்ள வேண்டியுள்ளது. அரசியலில் ஜனநாயகம் என்ற உன்னதமான தத்துவம் பற்றி உலகெங்கும் பேசப்படுகிறது. தமிழ் மக்களைப்பற்றிக் கூறும்போது கல்வி கற்ற சமூகத்தினர் எனக்கூறப்படுவது வழக்கம். ஆனால், தமிழ் மக்களால் ஜனநாயகம் என்ற விடயம் புரியப்படவில்லையா? அல்லது தவறாகப் புரியப்பட்டுள்ளதா? என்ற கேள்வியே மேலோங்கி உள்ளது. ஜனநாயக வழிமுறை என்பது ஒவ்வொரு தனிமனிதனது சுதந்திரம், சமத்துவம், சகோதரத்துவம் ஆகியவற்றை உறுதிப்படுத்துவதும் மதிப்பளிப்பதும் ஆகும். அத்தகைய ஒரு கலாசாரத்தை பயிலும் போக்கு தமிழ் மக்களிடம் அருகிவிட்டதா? எனறே எண்ணத் தோன்றுகிறது.

அது மட்டுமன்றி அரசும் இனப் பிரச்சினை குறித்த திட்டவட்டமான முடிவுகளை மேற்கொண்டு நீண்ட அரசியல் இனப்பிரச்சினைக்கு ஒரு தீர்க்கமான தீர்வை ஏற்படுத்தும் வழிமுறைகளைப் பின்பற்றுவதில் காலம் தாழ்த்துவதாகவே உள்ளது. தமிழ் - சிங்கள மக்களிடையே இன ஒருமைப்பாட்டையும், நல்லிணக்கத்தையும் ஏற்படுத்தலாம் என அரசு கருதினாலும் இனங்களுக்கிடையிலான புரிந்துணர்வையும் நல்லிணக்கத்தையும் ஏற்படுத்தக்கூடிய செயற்றிட்டங்கள் எதுவும் வலுவான வகையில் முன்னெடுக்கப்படவில்லை.



மாறாக இனங்களுக்கிடையிலான இடைவெளி விரிசலடைவது போலவே தென்படுகிறது. அரசு யுத்தம் முடிவடைந்த பின்னர் தமிழ் மக்களின் அரசியல் தீர்வு விடயத்தில் காலம் தாழ்த்துவதானது பிரச்சினை பற்றிய விடயம் முடிவற்றதாகவும் பரஸ்பர புரிந்துணர்வு ஏற்படுவதில் பாதகமான போக்கு வலுவடைவதற்கு இடமளிப்பதாகவும் அமைவதற்குச் சந்தர்ப்பம் வழங்குவதாகவே அமைகிறது.

தொடர்ச்சியாக இடம்பெற்று முகிழ்த்து வந்த இனப்பிரச்சினையின் அடிப்படையாக அதிகாரப் பகிர்வு காணப்படுகிறது. தமிழ் மக்கள் அடிப்படையில் யுத்தத்தை விரும்புகின்ற பண்புள்ளவர்கள் அல்லர். அது மட்டுமன்றி செயற்றிறனும் விசுவாச உழைப்பும் முயற்சியும், மதிநுட்பமும் வாய்ந்தவர்கள். அழகிய, சிறிய, பொதுக் கலாசாரப் பாரம்பரியம் கொண்ட இரண்டு இனக்குழுக்களுக்கிடையில் புரிந்துணர்வையும் நல்லெண்ணத்தையும் வளர்க்கக்கூடிய வாய்ப்பு அரசிற்குக் கிடைத்த அரிய சந்தர்ப்பமெனலாம்.

இலங்கையில் இருக்கின்ற இரண்டு மொழி பேசுவோருக்கிடையிலான உறவை பரஸ்பர புரிந்துணர்வுடையதாகக் கட்டியெழுப்புவது மிகவும் பெரிய சவாலெனக் கூற முடியாது. நீண்ட வலிமை மிக்க போராட்டத்தை முடிவுக்குக் கொண்டு வந்த அரசு, பிரச்சினைக்கான தீர்வை எட்டுவதிலும், பாதிக்கப்பட்ட தமிழ் மக்கள் மத்தியில் நம்பிக்கையை வளர்ப்பதிலும் வெற்றி கொள்வதன் மூலமே இலங்கையில் அமைதியான, நிலையான வளர்ச்சிப் பாதையில் செல்வதற்கு அத்திவாரமிட முடியும்.

அரசு மட்டுமன்றி, சிங்கள அறிவு ஜீவிகளும், பௌத்த மத நிறுவனங்களும் சாதாரண மக்கள் மத்தியில் இனங்களுக்கிடையில் நல்லெண்ணத்தை ஏற்படுத்துவதிலும் சமாதான சகவாழ்வு ஏற்படுத்துவதிலும் நல்லெண்ணம் உருவாக்குவதிலும் பங்களிக்க வேண்டியதவசியம்.

பொருளாதார நோக்கில் அவதானிக்கும் போது, யுத்த காலத்தில் நிலவிய பொருளாதார நெருக்கடிகளை விட அதிக நெருக்கடிகளை தமிழ் மக்கள் எதிர்கொள்கிறார்கள். இது மேலும் அதிகரிக்கும் நிலை ஏற்படக்கூடும் என்ற அச்ச நிலை உள்ளது.

அனைத்துப் பிரச்சினைகளுக்கும் அடிப்படைக் காரணம் பொருளாதாரமே. பொருளாதார நிலையில் ஏற்பட்டுள்ள நெருக்கடிகள், சமூகத்தின் பல்வேறு பாகங்களையும் சீரழிப்பதாக உள்ளது. பொருளாதார, சமூக குழப்பம் மலிந்த ஒரு காலகட்டமாக யுத்தத்தின் பின்னரான தமிழ் மக்களின் நிலை காணப்படுகிறது. போர்க்காலத்திலும் இத்தகைய நெருக்கடிகள் இருந்தனவாயினும், தற்போதுள்ள நிலை மிகவும் மோசமான தாக்கங்கள் நிறைந்ததாக உள்ளது.

கல்வியின் வாயிலாக மக்களுக்கு தொழில் வாய்ப்பு பெறும் நிலையும் போட்டி நிறைந்ததாக உள்ளது. கல்வி வழிமுறைகளில் பட்டங்கள் பெறும் கல்வி வழங்கப்பட்டாலும் தொழில் வாய்ப்புகள் அருகியதாகவேயுள்ளது. பெருமளவு மக்களின் வாழ்க்கைத் தரம் அடிப்படைத் தேவைகளை நிறைவு செய்யும் நிலையில் இல்லை.

போர் இடம்பெற்ற காலத்தில் இருந்த நிலையை விட அச்சம் நிறைந்த வாழ்க்கை நிலையில் மக்கள் வாழுகின்றனர் எனக்கூறின் மிகையாகாது. நிலத்தையும் கடலையும் பயன்படுத்திப் பெறக்கூடிய பொருளாதார நன்மைகளைப் பெறும் நிலையும் வலுவற்றதாகிக் கொண்டு வருகிறது. விவசாயிகள், கடற்றொழிலாளர், சிறு வியாபாரிகள் என்போர் பொருளாதார நெருக்கடி நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர்.

யுத்த நெருக்கடியின்போது மக்கள் வாழ்வில் இருந்த தேவைகளும் சூழலின் வாழ்க்கைத் தரத்தில் காணப்பட்ட ஒருமையும் மாறுதலடைந்து திறந்த, நுகர்வுக் கலாசாரத்தின் அம்சங்கள் பரவலடைந்துள்ள நிலையில், மக்களில் ஒரு பகுதியினர் வசதி வாய்ப்புகளை பெருக்கிக்கொள்ள, பெரும்பான்மையினர் தமது அடிப்படை வசதிகளைத் தானும் பெறமுடியாத நிலையில் இருப்பது சமூக முரண்பாடுகளை ஏற்படுத்தக் கூடியதாகும். வசதி வாய்ப்பு இல்லாதவர்கள் விரக்தி அடைவதற்கும் தவறான வழிமுறைகளை எட்ட முனைவதற்கும் இடமளிப்பதாயுள்ளது.

அரசு யுத்தத்தின் பின்னர் மேற்கொண்ட, அபிவிருத்தி நடவடிக்கைகள் வடக்கின் பொதுவான வாழ்க்கை நிலையில் முன்னேற்றமான தன்மை கொண்டவையெனினும் யுத்தத்தில் இருந்து மீண்ட, பொருளாதார அடிப்படைகளை எதிர்பார்க்கும் சமூகத்தின் அடிநிலை மக்களுக்கு நிலைபேறான பொருளாதார எதிர்காலத்தை வழங்கக் கூடியனவாக இல்லை.

இந்த நிலையில், பொருளாதார திட்டமிடலாளர்கள் நன்கு ஆராய்ந்து மக்களுக்கு வேண்டிய உடனடி பொருளாதார வாழ்க்கையினை வழங்குவதற்கு ஆவன செய்ய வேண்டிய கட்டாயமுள்ளது.

அரசியல் பிரச்சினைகளும், அபிலாசைகளும் மக்களின் பிரச்சினைகள் என்பதில் மாறுபட்ட கருத்திற்கு இடமில்லை எனினும், கடந்த ஐந்து ஆண்டுகளாக வட இலங்கையில் இடம்பெற்று வருகிற சமூக, பொருளாதார, வாழ்வியல் பிரச்சினைகள் பொருளாதார விடயங்களுக்கு அதிக இடமுள்ளது என்பதை வலியுறுத்துவதாக உள்ளது.

(தொடர்ச்சி 18ஆம் பக்கம் பார்க்க)

# இலங்கையின் மீன் உற்பத்தி 2016இல் மேலும் அதிகரிக்கப்படும்

## அமைச்சர் ராஜிதசேனாரட்ண



இலங்கையின் மீன் உற்பத்தி 2016 ஆம் ஆண்டாகும்போது 686.000 மெற்றிக் தொன்களால் அதிகரிக்கும் என்று கடற்றொழில் மற்றும் நீரியல் வளங்கள் அபிவிருத்தி அமைச்சர் டாக்டர் ராஜித சேனாரட்ன தெரிவித்தார்.

இந்து சமுத்திர டுனா ஆணைக குழுவின் 18ஆவது சர்வதேச மாநாடு நேற்று முன்தினம் கொழும்பு பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் ஆரம்பமானது. இந்த மாநாட்டின் அங்குரார்ப்பண நிகழ்வில் உரையாற்றும் போதே அமைச்சர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

இந்து சமுத்திர டுனா ஆணைக்குழுவில் 31 நாடுகள் அங்கம் வகிக்கின்றன.அத்தோடு 3 நாடுகள் வாக்களிப்பு அந்தஸ்து அற்ற நாடுகளாக இந்த ஆணைக்குழுவில் அங்கத்துவம் பெற்றுள்ளன. இந்நாடுகளைச் சேர்ந்த 250 இற்கும் மேற்பட்ட வெளிநாட்டுப் பிரதிநிதிகள் இவ்வமர்வில் பங்குபற்றினர்.

நேற்று முன்தினம் முதலாம் திகதி முதல் எதிர்வரும் 5 ஆம் திகதி வரை நடைபெறவுள்ள இம்மாநாட்டின் அங்குரார்ப்பண நிகழ்வில் பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பசில் ராஜபக்ஷ பிரதம அதிதியாகவும் வெளிவிவகார அமைச்சர் பேராசிரியர் ஜீ. எல். பீரிஸ் கௌரவ அதிதியாகவும் பங்குபற்றினர்.

இந்நிகழ்வில் அமைச்சர் டாக்டர் ராஜித சேனாரட்ன தொடர்ந்தும் உரையாற்றுகையில்,ஆரம்ப காலம் முதல் இந்து சமுத்திர மீன் வளத்தை நாம் தேவைக்கு ஏற்ப பயன்படுத்தி வந்தோம். இருப்பினும் சனத்தொகை அதிகரிப்பு, தொழில் நுட்ப வளர்ச்சி, சந்தைப் பொருளாதார அபிவிருத்தி மற்றும் கைத்தொழில்மயம் என்பன காரணமாக மீன் பிடிப்பதற்குப் பயன்படுத்தப்படும் உபகரணங்களால் பெருமளவிலான மீன்கள் வீணாக அழிக்கப்படுகின்றன.

இதனால் மீன் வளம் பாதிக்கப்படுகின்றது. இது ஆரோக்கியமான நிலைமை அல்ல. இலங்கையில் சுமார் 2800 பெரிய ஆழ்கடல் வள்ளங்கள் உள்ளன. எமது மக்களுக்குத் தேவையான விலங்குப் புரதத்தில் 70 வீதத்தை மீன்களே வழங்குகின்றன.நாம் கடற்றொழில் துறை மேம்பாட்டுக்காக மேற்கொண்டு வருகின்ற நடவடிக்கைகளின் பயனாகக் கடந்த சில வருடங்களாகத் தனிநபர் மீன் நுகர்வு அதிகரித்துள்ளது.

இதன் பயனாகத் தற்போது எமது தனிநபரின் அன்றாட மீன் நுகர்வு 45 கிராம்களாகக் காணப்படுகின்றன. அதனை உலக சுகாதார ஸ்தாபனத்தின் சிபாரிசுக்கு அமைய 60 கிராம்கள் வரை அதிகரிப்பதை இலக்காகக்கொண்டுள்ளோம். அதனால் எமது மீன் உற்பத் தியை அதிகரிப்பது அவசியம். தற்போது 5,00,000 மெற்றிக் தொன்களாகக் காணப்படுகின்ற மீன் உற்பத்தி 2016 ல் 6,86, 000 மெற்றிக் தொன்கள் வரை அதிகரிக்கப்படும்.

இந்நாட்டில் கடந்த அரை நூற்றாண்டுக்கு முன்னர் அதாவது 70 களில் இந்நாட்டின் மொத்த மீன் உற்பத்தியில் அரைவாசியை வடக்கு கிழக்கு பிரதேசமே வழங்கியது. எனினும் யுத்தம் காரணமாக அந்நிலைமை வீழ்ச்சி அடைந்தது. ஆயினும் யுத்தம் முடிந்ததோடு அப்பிரதேசங்களை மீளக் கட்டியெழுப்புவதற்கான சகல நடவடிக்கைகளையும் அரசாங்கம் மேற்கொண்டுள்ளது என்றும் அவர் குறிப்பிட்டார்.

இந்நிகழ்வில் பிரதியமைச்சர் சரத்குமார குணரட்ன. மாலைதீவு இராஜாங்க அமைச்சர் டாக்டர் சனா வஹிட் இந்து சமுத்திர டுனா ஆணைக்குழுவின் தலைவர் மௌரி தர்மலிங்கம், செயலாளர் ரண்டோட் பயட் உட்பட முக்கியஸ்தர்கள் பலரும் கலந்து கொண்டார்.

# சட்டவிரோத ஆயுதங்களுடன் முன்னாள் போராளி கைது

வாழைச்சேனை பொலிஸ் பிரிவில் சட்ட விரோத ஆயுதங்களை வைத்திருந்தார் என்ற சந்தேகத்தின் பேரில் விடுதலைப் புலிகள் அமைப்பின் முன்னாள் போராளி ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளதாக வாழைச்சேனை பொலிஸார் நேற்று முன்தினம் தெரிவித்துள்ளனர்.

வாழைச்சேனை பொலிஸ் புலனாய்வுத் துறையினருக்குக் கிடைத்த தகவலையடுத்தே சந்தேக நபரான கண்ணமுத்து யோகரா (வயது-48) என்பவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

இவர் விடுதலைப்புலிகள் அமைப்பில் இருக்கும் போது வீரமணி என்று அழைக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

வாகனேரி குளத்து மடுவவைச் சேர்ந்த குறித்த சந்தேக நபர் யானை வழங்கி எனும் வயல் பிரதேசத்தில், உள்ளூரில் தயாரிக்கப்பட்ட துப்பாக்கி மற்றும் கைக்குண்டு ஒன்றுடன் கைது செய்யப்பட்டுள்ளார்.

குறித்த நபரிடம் மறைத்து வைக்கப்பட்ட ஆயுதங்கள் இன்னும் இருப்பதாக விசாரணைகளில் தெரிவித்துள்ளதாகவும் அது தொடர்பாக விசாரணைகளை முன்னெடுத்து வருவதாகவும் வாழைச்சேனை பொலிஸார் தெரிவித்தனர்.

சந்தேக நபர் பல கொள்ளைச் சம்பவங்களுடன் தொடர்புடையவர் என்றும் இவருக்கு எதிராக வாழைச்சேனை நீதவான் நீதிமன்றத்தின் மூலம் பகிரங்க பிடியாணை பிறப்பிக்கப்பட்டு தேடப்பட்ட நிலையில் தலைமறைவாக வாழ்ந்துவந்த நிலையிலயே வாழைச்சேனை பொலிஸ் நிலைய புலனாயவுத்துறையினரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

# அவுஸ்ரேலிய உயர்ஸ்தானிகராக லக்ஸ்மன் ஹுலுகல்ல நியமனம்



தேசிய பாதுகாப்பு தொடர்பான ஊடக மத்திய நிலையத்தின் பணிப்பாளர் லக்ஸ்மன் ஹுலுகல்லவிற்கு இராஜதந்திர பதவியொன்று வழங்கப்பட்டுள்ளது.

அவுஸ்ரேலியாவிற்கான இலங்கை உயர்ஸ்தானிகராலயத்தின் அமைச்சு பதவியொன்று ஹுலுகல்லவிற்கு நேற்று முன்தினம் வழங்கப்பட்டுள்ளது.

ஹுலுகல்ல, ஜனாதிபதியின் இணைப்புச் செயலாளர் முன்னாள் அமைச்சர் காமினி திஸநாயக்கவின் இணைப்புச் செயலாளர், இளைஞர் விவகார அமைச்சின் ஆலோசகர், அரச சார்பற்ற நிறுவனங்கள் தொடர்பான தேசிய செயலகத்தின் பணிப்பாளர் நாயகம் உள்ளிட்ட பல்வேறு பதவிகளை வகித்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

# சிறையிலிருந்து விடுதலையாகும் கைதிகளுக்கு கொடுப்பனவு வழங்கத் திட்டம்

## அமைச்சர் சந்திரசிறி கஜதீர தெரிவிப்பு

(கொழும்பு)

நீண்ட காலமாக சிறைகளில் தண்டனை அனுபவித்து விடுதலையாகும் கைதிகளுக்கு 50,ஆயிரம் ரூபா கொடுப்பனவு ஒன்றை வழங்க திட்டமிட்டுள்ளதாக சிறைச்சாலைகள் மற்றும் புனர்வாழ்வு அமைச்சர் சந்திரசிறி கஜதீர தெரிவித்துள்ளார்.

விரைவில் இந்தக் கொடுப்பனவுத் தொகை வழங்கப்படவுள்ளது. சிறைச்சாலை பயிற்சிகளை பூர்த்தி செய்து நன்னடத்தையுடன் செயற்படும் நபர்களுக்கு இவ்வாறு கொடுப்பனவு வழங்கப்படும்.

இந்த ஆண்டில் ஆயிரம் கைதிகளுக்கு இவ்வாறு கொடுப்பனவு வழங்கப்படவுள்ளது. இதற்கான நிதி ஏற்கனவே ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. கைதிகள் இந்தப் பணத்தை எவ்வாறு பயன்படுத்துகின்றார்கள் என்பது குறித்து கண்காணிக்கப்படும்.

கைதிகளின் வாழ்க்கையை மேம்படுத்தும் நோக்கில் இந்த கொடுப்பனவு வழங்கப்படவுள்ளது.

சிறையிலிருந்து விடுதலையாகும் கைதிகள் பணக் கஷ்டம் காரணமாக மீண்டும் கொள்ளைச் சம்பவங்களில் ஈடுபடுகின்றனர் என அமைச்சர் தெரிவித்துள்ளார்.

ஊடகமொன்றுக்கு அளித்த நேர் காண லில் அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

# குளவித்தாக்கத்தால் 67 மாணவர்கள் பாதிப்பு

மெதிரிகிரிய, திஸ்ஸபுர விகாரையில் பாடசாலை மாணவர்கள் மீது குளவிகள் கொட்டியதில் 63 மாணவர்கள் உட்பட 67 பேர் பாதிக்கப்பட்ட நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இச்சம்பவம் நேற்று முன்தினம் முற்பகல் 10.45 மணியளவில் இடம்பெற்றுள்ளது. குறித்த விகாரையிலிருந் குளவிக்கூடொன்று காற்றினால் கலைந்ததில் அதிலிருந்த குளவிகள் மாணவர்களைக் கொட்டியுள்ளன.

சம்பவத்தில் பாதிக்கப்பட்ட மாணவர்கள் மெதிரிகிரிய வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

# சீரற்ற காலநிலையால் மத்தளைக்கு விமானம்

கட்டுநாயக்க விமான நிலையத்தில் தரையிறக்கப்படவிருந்த விமானமொன்று சீரற்ற வானிலையால் மத்தளை விமான நிலையத்திற்கு திருப்பி அனுப்பப்பட்டுள்ளது.

ஓமான் தலைநகரான மஸ்கட்டில் இருந்து பயணத்தை ஆரம்பித்த ஸ்ரீலங்கன் விமான சேவைக்கு சொந்தமான விமானமொன்றே இவ்வாறு மத்தளை விமான நிலையத்திற்கு அனுப்பிவைக்கப்பட்டதாக கட்டுநாயக்க விமான நிலையத்தின் கடமைநேர முகாமையாளர் தெரிவித்துள்ளார்.

நேற்று அதிகாலை ஐந்து மணிக்கு குறித்த விமானம் கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் தரையிறக்கப்படவிருந்தது.சீரற்ற வானிலையால் விமானத்தை அங்கு தரையிறக்க முடியாமற்போனதாக கட்டுநாயக்க விமான நிலையத்தின் கடமைநேர முகாமையாளர் குறிப்பிட்டுள்ளார்.

எவ்வாறாயினும் தற்போது வழமைபோன்று கட்டுநாயக்க விமான நிலையத்தில் விமானங்கள் தரையிறக்கப்படுவதாக அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

# பத்தாம் வகுப்பில் பாலியல் கல்வி கட்டாயமாக போதிக்க ஏற்பாடு

பாடசாலைகளில் கல்வி பயிலும் மாணவர்களுக்கு பத்தாம் வகுப்பிலிருந்து பாலியல் கல்வி இனிமேல் கட்டாய விஞ்ஞான பாடமாகப் போதிக்கப்படும். கல்வி மற்றும் சுகாதார அமைச்சு இதற்கான நடவடிக்கையை எடுத்து வருவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

தற்போது மாணவர்களுக்கு சுகாதார பாடத்தில் ஓர் அம்சமாக சில விடயங்கள் போதிக்கப்படுகின்றன. மனித உயிர்ப்பெருக்க முறைமை, உடலியல் தொழிற்பாடு ஆகிய ரீதியில் மட்டுமே இதுவும் போதிக்கப்படுகின்றது. மேலும் நாற்பது வீதமான மாணவர்கள் மட்டுமே சுகாதார பாடத்தைக் கற்கின்றார்கள். இந்தப் பின்புலத்திலேயே பாலியல் பற்றிய விஞ்ஞான அறிவை சகல மாணவருக்கும் ஊட்டும் விதத்தில் அதனைக் கட்டாய விஞ்ஞான பாடமாகக். கொண்டுவருவது பற்றிச் சிந்திக்கப்படுகின்றது எனக் கூறப்படுகின்றது. இளம் வயதினரிடையே பாலியல் நெருக்கம், பதின்ம வயதுக் கர்ப்பம், எய்ட்ஸ் நோயப் பரவல், தொற்று நோய்கள் எனப் பல பிரச்சினைகள் தீவிரமடைந்து வருவதால் அவற்றைத் தடுக்கும் எண்ணத்துடனேயே மாணவர்களுக்குப் போதிய அறிவு, முன்னெச்சரிக்கை அறிவுறுத்தல், தடுப்பு நடவடிக்கைகள் ஆகியவை பற்றிய விளக்கங்களைத் தரும் நோக்குடன் இந்த முடிவு எடுக்கப்பட்டிருக்கின்றதாம். எயிட்ஸ் மற்றும் பாலியல் தொற்று நோய்கள் தடுப்புத் திட்டத்தின் மூத்த அதிகாரி ஒருவர் இத்தகவல்களை வெளியிடடுள்ளார்.

# மண்சரிவில் புதையுண்டு ஐவர் உயிரிழப்பு

இலங்கையில், அகலவத்தை கிதுல்பட பாலிந்தநுவர பிரதேசத்தில் இடம்பெற்ற மண் சரிவில் ஐந்து பேர் கொல்லப்பட்டுள்ளனர்.

உயிரிழந்தவர்களில் மூன்று பெண்களும் உள்ளடங்குவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

பிரதேசத்தில் நிலவி வரும் சீரற்ற காலநிலையினால் இவ்வாறு மண்சரிவு ஏற்பட்டுள்ளது.நேற்று அதிகாலை குறித்த ஐந்து பேரும் மண்சரிவில் புதையுண்டு உயிரிழந்துள்ளதாக பிரதேச செயலாளர் யூ.டி.சீ. ஜயலால் தெரிவித்துள்ளார்.மண்சரிவில் உயிரிழந்தவர்களின் உறவினர்களுக்கு நட்ட ஈடு வழங்க நடவடிக்கை எடுக்கப்படும் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

# இளைஞர்கள் சரியான முறையில் சமுதாயத்தில் வழிநடாத்தப்படுவதில்லை

## வைத்திய கலாநிதி சிவமோகன் குற்றச்சாட்டு



(யாழ்ப்பாணம்)

சமுதாயத்தில் முக்கிய பங்கு வகிக்கும் இளைஞர்கள் சரியான முறையில் வழிநடாத்தப்படுவதில்லை எனவும் வளர்ந்து வருபவர்களை அழித்துவிட சிலர் முக்கிய காரணியாக இருக்கின்றனர் என வைத்திய கலாநிதி சி.சிவமோகன் குற்றஞ் சாட்டியுள்ளார்.

கடந்த 26 ஆம் திகதி ஒட்டுசுட்டான் மகாவித்தியாலயத்தில் தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தினால் ஒழுங்கு செய்யப்பட்ட மாவட்ட நிர்வாகக் குழுக் கூட்டத்தில் பிரதம விருந்தினராக கலந்து கொண்ட வடமாகாண சபை உறுப்பினர் வைத்திய கலாநிதி சி.சிவமோகன் உரையாற்றும் போதே இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்,

தற்போதைய சூழ் நிலையில் இலங்கையைப் பொறுததவரையில் இளைஞர்களின் பங்கு மிக முக்கியமானதொன்றாக காணப்படுகின்றது. இலங்கையின் மொத்த சனத்தொகையில் 26 சதவீதம் உள்ள இளைஞர்களில் பெரும்பான்மையானோர் வேலையில்லாப் பிரச்சினையை எதிர் நோக்குபவர்களாக இருக்கின்றனர். இவர்கள் தங்கள் படிப்பை முடித்து விட்டு வெளியேறிய பின் வேலையொன்றை பெறுவதற்காக மிகவும் அலச்சலுக்குள்ளாகின்றனர்.

இந்நிலை தற்போது எமது நாட்டிலும் அதிகரித்து வருகின்றது. தங்களின் கல்விக்கும் திறமைகளுக்கும் தகுந்த வேலை கிடைக்காத நிலையில் குறைவான சம்பளத்தில் கிடைக்கும் வேலையை செய்பவர்களும் அல்லது தாய் நாட்டை விட்டு வெளிநாடுகளில் வேலை தேடிச செல்பவர்களும் அதிகரித்து வருகின்றனர், என தெரிவித்தார்.

இந்நிலை மாற வேண்டுமானால் எமது நாட்டின் தலைமைத்துவத்தில் இளைஞர்களின் பங்கு அதிகரிக்க வேண்டும் எனவும் அதற்காக அவர்களுக்கு சரியான முறையில் தலைமைத்துவ பயிற்சி, தொழில் பயிற்சி, தொழில்நுட்ப பயிற்சி, சமூக செயற்பாடுகளில் ஈடுபடச் செய்தல் போன்ற ஊக்குவிப்புத் திட்டங்கள் உருவாக்கப்பட வேண்டும்.

எங்களது சமுதாயத்தில் முக்கிய பங்கு வகிக்கின்ற இளைஞர்கள் சரியான முறையில் வழிநடாத்தப்படுவதில்லை எனவும் வளர்ந்து வருபவர்களை அழித்து விட சில அரசியல் சூழ்நிலை மிக முக்கிய காரணமாக அமைகின்றது என குற்றஞ்சாட்டினார். (40)

# புலவியோடை நாகதம்பிரான் ஆலய அடிக்கல் நாட்டுவிழா



(யாழ்ப்பாணம்)

நாகர்கோவில் வடக்கு அருள்மிகு புலவியோடை நாகதம்பிரான் ஆலயத்தில் நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக் கிழமை காலை 9.45 மணியளவில் மணிக்கூட்டுக்கோபுரத்திற்கான அடிக்கல் நாட்டப்பட்டது.

ஆலய தர்மகர்த்தாவும் நிர்வாக சபைத்தலைவருமாகிய சி.செகராஜாவினால் நாட்டப்பட்ட அடிக்கல் நிகழ்வில் அவரைத்தொடர்ந்து கலந்து கொண்ட அடியவர்களும் அடிக்கல் நாட்டி சிறப்பித்தமை குறிப்பிடத்தக்கது.

# வாழ்வாதாரத்தை உயர்த்த 76 பயனாளிகளுக்கு உதவிகள்

(பூநகரி)


பூநகரி பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட முழங்காவில் கிராமசேவையாளர் பிரிவில் கியூ மெடிக்கா நிறுவனத்தினால் வாழ்வாதாரத்தை உயர்த்தும் நோக்குடன் 96 பயனாளிகளுக்கு அவர்களுடைய தேவைகளைக் கேட்டறிந்து உதவிகள் வழங்கப்பட்டன.

இதன்போது 8 பேருக்கு தையல் இயந்திரங்களும் 3 பேருக்கு நீர்இறைக்கும் இயந்திரமும் 49 பேருக்கு துவிச்சக்கரவண்டிகளும் 29 பேருக்கு நீரிறைக்கும் குழாய்களும் 2 பேருக்கு சிறுதொழில் வாணிப உதவிகளும் 5 பேருக்கு கோழிக்குஞ்சுகளும் வழங்கப்பட்டன.

இந்த உதவிகளை முழங்காவில் கிராம சேவையாளர் நகுலேஸ்வரன் வழங்கி வைத்தார். (36)

## நீராவியடி வாழும் வாரணனே வரமருள்வாய்!

"தெய்வத் தமிழிச்சுடர்"
இராசையா ஸ்ரீதரன்



**வீக்கினங்கள் தீர்க்கின்ற விநாயகப்பெருமானே!**
**வேதனைகள் போக்கியே சாதனை புரியவைப்பாய்!**
**பக்குவமாய் வந்துந்தன் பாதமலர் பணிந்தோமையா!**
**பாரினிலே நீயன்றி வேறுதுணை யார் எமக்கு?**
**நெக்குருதி நின்றுன் கோவில் நிதம் வலம் வந்தோம்!**
**நீராவியடி வாழும் வாரணனே வரமருள்வாய்!**
**சிக்கலெல்லாம் நீங்கி இனி நிம்மதியாய் நாம் வாழ**
**அருட்காட்சி தரவேண்டும் கஜமுகனே சரணம்!**

ஸ்ரீ ஜெயநீராவியடி வீரகத்தி விநாயகர் ஆலய இரண்டாம் நாள் திருவிழா இன்றாகும்.

## முரசின் இன்றைய பலன்





03.06.2014 செவ்வாய்க்கிழமை

ஜய வருஷம் வைகாசி மாதம் 20 ஆம் திகதி.
பஞ்சமி /மரணயோகம்.
ஆயிலிய நட்சத்திரம் முழுநாளும்.
இராகு காலம 02.52 - 04.22 வரை. சுபநேரம 10.22 - 11.52 வரை.


ஜோதிர் வித்யா ரத்னா வி.ஏ.சிவராசா அவர்களால் கணிக்கப்பட்டது.

| | |
|---|---|
| மேடம் | பிள்ளையின் மனம் கல்லாக இருபபதை எண்ணிக் கவலையுறல். அரசுத்தொழிலில் அமர்ந்திருப போர் பணியை நிறைவேற்றுவதில் தாமதம் தக்கவைக்கும். |
| ரிஷபம் | உத்தியோகத்தில் நிலவிக் காணப்பட்ட மறைமுக எதிர்ப்புகள் விலகும். சுபகாரிய நிகழ்வொன்று எதிர்பாராமல் ஏற்பட்டு குதூகலம் தக்க வைக்கும். |
| மிதுனம் | நியாயமும் தர்மமும் இறையருளும் கைகூடியதால் நீண்ட நாள் இழுபட்ட விடயம் நன்மை தருதல், தொழில், வியாபாரத்தில ஈடுபட்டிருப்பவர்கள் அவசரப்பட்டு முடிவெடுப்பதைத் தவிருங்கள். |
| கடகம் | முரண்பாடுனைக்களைய குடும்பத்தில் விட்டுக்கொடுத்துப போனதால் நன்மை ஏற்படல். மருத்துவச் செலவுக்காக ஆபரணத்தை அடகுவைக்கும் துர்பாக்கிய நிலையுண்டு. |
| சிம்மம் | எதிர்காலம் பற்றித் திட்டம் தீட்டுவதற்கு சோதிடப்பலன் கேட்க ஆர்வம் பிறத்தல். அவசரத்தில் காலாவதித்திகதியை பார்க்க மறந்ததால் வீட்டில் முரண்பாடு ஏற்படல். |
| கன்னி | நீண்ட வருடங்களுக்கு குத்தகை பார்த்த காணி கைவிட்டுப்போனதால் மனத்துயர். இழுபட்ட திருமணம் நிறைவு நிலைக்கு வந்ததை எண்ணி மகிழ்வடைதல். |
| துலாம் | கொடுத்த வாக்குறுதியைக் காப்பாற்ற பகீரதப்பிரயத் தனத்துடன் செயற்படல். கடந்த காலத்தில் ஏற்பட்ட கசப்பான சம்பவமொன்றை நினைத்து மனக்கிலேசமடைதல். |
| விருச்சிகம் | இடைத்தங்கல் நாட்டில் வெளியூர் பயணம் கொண்டு போய்ச் சேர்த்தல். பவ்வியமாக எடுத்துரைத்ததனால் பிள்ளைகளுடன் கவின் நிலை தோன்றுதல். |
| தனுசு | உங்களை மட்டந்தட்டிச்சிலர் பேசினாலும் காதில் வாங்கிக் கொள்ளாமல் இருத்தல் நன்று, தொலைபேசி உரையாடல் மூலம் நீண்ட நாள் நிலுவை கிடைக்க ஆவன செய்தல். |
| மகரம் | வெளியூர் உறவினர் எதிர்பாராது வருகை தந்ததினால் கலகலப்பு ஏற்படல், விடாப்பிடியாகச் செயற்பட்டதனால் தேங்கிய பணி நிலுவையின்றி முடிவடைதல். |
| கும்பம் | ஏலவே திட்டமிட்டதினால் பணி சுலபமாக முடிந்ததை எண்ணி மகிழ்தல், குடும்ப வருமானத்தை உயர்த்தும் வழிவகை குறித்து ஆலோசனை செய்தல். |
| மீனம் | விரோதி நிலைக்கு உங்கள் பேச்சு பிரச்சினையைத் தோற்றுவித்தல், தடைப்பட்டிருந்த காரிய மொன்று எதிர்பாராத விதமாக சுலபமாக முடிவுக்கு வருதல். |





**கைதடி கிழக்கு ஊற்றல் இந்துமயானம் நீண்ட காலத்துக்குப் பின்னர் தற்போது புனரமைப்புச் செய்யப்பட்டுள்ள தனைக் காணலாம். (51)**



ஆஷ்லே கோல், டெவெஸ், மரியோ கோமெஸ், டொனோவான்.

# உலகக் கோப்பை கால்பந்து 10 நட்சத்திர வீரர்கள் நீக்கம்

(பிரேசில்)

பிரேசில் நாட்டில் வரும் 12 அம் திகதி ஆரம்பிக்கவுள்ள உலகக்கோப்பை போட்டியில் பங்கேற்கும் அனைத்து நாடுகளும் தங்களது அணியை அறிவித்துவிட்டன. சிறந்த வீரர்களைக் கொண்ட அணிகளை அந்தந்த நாட்டு பயிற்சியாளர்கள் தேர்ந்தெடுத்து அறிவித்துள்ளனர்.

ஆனால், இதில் அதிர்ச்சியான விடயம் என்னவென்றால் உலகின் மிகச் சிறந்த கால்பந்து வீரர்கள் 10 பேர் அவரவர் நாட்டு அணியில் சேர்க்கப்படவில்லை என்பதுதான்.

ஒவ்வொரு அணியும் பிரேசில் உலக கோப்பையை வெல்வதையே குறிக்கோளாக கொண்டு சிறந்த வீரர்கள் அடங்கிய அணியைத் தேர்வு செய்துள்ளன.

இதில் கடந்த காலங்களில் தங்களது நாட்டு அணிக்கு வெற்றி தேடித் தந்தவர்கள், தற்போது உலகக்கோப்பையில் விளையாட முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

## இலங்கை இங்கிலாந்து போட்டி


சுற்றுலா இலங்கை அணிக்கும் இங்கிலாந்து அணிக்கும் இடையிலான ஐந்தாவதும் இறுதியுமான ஒரு நாள் சர்வதேச போட்டி இன்று இடம்பெறவுள்ளது. பேர்மி ங்ஹேமில் இந்த போட்டி இடம்பெறவுள்ளது. இரு அணிகளுக்கும் இடையிலான ஐந்து போட்டிகளைக்கொண்ட தொடரில் இரு அணிகளும் இரண்டு போட்டிகளில் வெற்றிப் பெற்றுள்ள நிலையில் தொடர் சமநிலை பெற்றுள்ளது.

இந்த நிலையில் இன்றைய போட்டியே தொடரின் வெற்றியைத் தீர்மானிக்கும் போட்டியாக அமைந்துள்ளது.

# காலிறுதிக்கு முன்னேறினார் பவுச்

(பாரிஸ்)

பிரெஞ்ச் ஓபன் டென்னிஸ் போட்டியின் மகளிர் ஒற்றையர் பிரிவு காலிறுதியில் விளையாட, கனடா வீராங்கனை யூஜெனி பவுச்சார்டு தகுதி பெற்றார்.



நான்காவது சுற்றில் ஜேர்மனியின் ஏஞ்சலிக் கெர்பருடன் நேற்றுமுன் தினம் மோதிய பவுச்சார்டு 6 : 1 என்ற கணக்கில் முதல் செட்டைக் கைப்பற்றி முன்னிலை பெற்றார்.

இரண்டாவது செட்டிலும் அதிரடியாக விளையாடி கெர்பரின் சர்வீஸ் ஆட்டங்களை முறியடித்த அவர் 6: 1, 6 : 2 என்ற நேர் செட்களில் வென்று காலிறுதிக்கு முன்னேறினார். மற்றொரு 4 ஆவது சுற்றில் சுவாரஸ் நவர்ரோ (ஸ்பெயின்) 6 : 3, 6 : 3 என்ற நேர் செட்களில் குரோஷியாவின் டாம்ஜனோவிச்சை வீழ்த்தினார்.

விளையாட்டுச் செய்திகள்

# ஹொக்கித் தொடரில் ஜேர்மனி அபார வெற்றி



நெதர்லாந்தில் நடைபெறும் உலகக்கோப்பை ஆண்கள் ஹொக்கி போட்டித்தொடரின் பி பிரிவு லீக் ஆட்டத்தில், ஜேர்மனி அணி தென்னாபிரிக்காவை அபாரமாக வென்றது.

ஹேக் நகரின் கியோசெரா ஸ்டேடியத்தில் நேற்று நடந்த இப்போட்டியில், தொடக்கத்தில் இருந்தே ஆதிக்கம் செலுததிய ஜேர்மனி அணி வீரர்கள் தென்னாபிரிக்க கோல் பகுதியை முற்றுகையிட்டு தாக்குதல் நடாத்தினர். அவர்களது வேகத்துக்கு ஈடு கொடுக்க முடியாமல் திணறிய தென்னாபிரிக்க அணி, முதல் பாதி ஆட்டத்தில் 2 கோல் விட்டுக்கொடுத்து பின்தங்கியது.

இரண்டாவது பாதியிலும் அபாரமாக விளையாடிய ஜேர்மனி, மேற்கொண்டு 2 கோல் அடித்து 4:0 என்ற கணக்கில் கோல் அடித்தனர்.

# அதிர்ச்சித் தோல்வி


(பாரிஸ்)

பிரெஞ்ச் ஓபன் டென்னிஸ் போட்டியின் ஆண்கள் ஒற்றையர் பிரிவு 4 ஆவது சுற்றில், அனுபவ வீரரும் 17 முறை கிராண்ட் ஸ்லாம் பட்டம்வென்று சாதனை படைத்தவருமான ரோஜர் பெடரர் அதிர்ச்சித் தோல்வியடைந்து ஏமாற்றத்துடன் வெளியேறினார்.

நான்காவது சுற்றில் லாட்வியா வீரர் எர்னஸ்ட் குல்பிசுடன் நேற்றுமுன்தினம் மோதிய பெடரர் 7-6 (7-5) என்ற கணக்கில் முதல் செட்டை கைப்பற்றி முன்னிலை பெற்றார்.

இரண்டாவது செட்டில் குல்பிஸ் 7-6 (-3) என வென்று பதிலடி கொடுக்க சமநிலை ஏற்பட்டது. மூன்றாவது செட்டில் அதிரடியாக விளையாடிய குல்பிஸ் 6-2 என கைப்பற்றி முன்னிலை பெற்றார். அடுத்த செட்டில் பெடரர் வெற்றி பெற மீண்டும் சமநிலை ஏற்பட்டது.

கடைசி செட் ஆட்டத்தில் பெடரரின் சர்வீஸ்களை முறியடித்து முன்னேறிய குல்பிஸ் 6-7 (5-7), 7-6 (7-3), 6-2, 4-6, 6-3 என்ற செட் கணக்கில் மூன்றரை மணி நேரத்துக்கும் அதிகமாகப் போராடி வென்று காலிறுதிக்குத் தகுதி பெற்றார்.






## கால்பந்து திருவிழா இன்னும் 9 நாட்கள்

# உலக கால்பந்தாட்ட விழா

## வெல்லப்போகும் அணி எது?





**எஸ்.அன்ரனிப்பிள்ளை கிளிபேட்**

தலைவர் : யாழ் கால்பந்தாட்ட லீக்

**ஈரானிய சிறு பார்வை**

மக்கள் தொகை 7 கோடி. 1974 இல் முதன் முதலாக உலகக் கிண்ண தகுதிகாண் போட்டிகளில் பங்கேற்றது. நான்காவது தடவையாக உலக கிண்ணத்திற்குத் தகுதி பெற்றுள்ளது. 1978, 1998, 2006 ஆகிய முன்னைய மூன்றிலும், முதலாம் சுற்றுடன் வெளியேறியது. 33 வயது, மத்தியகள வீரர் ஜவட் நெகொநம் (JavadNekounam) அணிக்குத் தலைமை தாங்குகிறார். 29 வயதான, தாக்கும் மத்திய கள வீரர்மசூட் ஷோஜி (Masoud Shojaei) முக்கியமானவர். இது இவர்களது 2 ஆவது உலகக் கிண்ணப் போட்டியாகும். ஆரம்பத் தில் நெதர்லாந்து தேசிய இளைஞர் அணியில் விளையாடி, 2012 இல் ஈரான் தேசிய அணியில் இண்ணந்துகொண்ட, 26 வயது றெசா கூசனிஜாட் (Reza Ghoochannejhad) அணியின் முன் கள வீரராவார். இரண்டாவது சுற்றுக்குத் தகுதி பெறு வதற்கு பொஸ்னியா மற்றும் நைஜீரியாவுடன் கடுமையாகப் போராட வேண்டியிருக்கும். போத்துக்கல் நாட்டவரான, 61 வயது, காலொஸ் குயிரொஸ் (Carlos Queiroz) அணியின் பயிற்சியாளராவார்.

# புதுமுறிப்பில் வசித்துவரும் மக்களுக்கு காணி ஆவணங்களை வழங்க ஏற்பாடு



(கிளிநொச்சி)

கிளிநொச்சி புதுமுறிப்பு மத்திய வகுப்புத் திட்ட காணிகளில் குடியிருக்கும் மக்கள் எதிர்கொளளும் காணி ஆவணம் தொடர்பான பிரச்சினைக்கு தீர்வினைப் பெற்றுக்கொடுக்க நாடாளுமன்ற உறுப்பினர், முருகேசு சந்திரகுமார் நடவடிக்கை மேற்கொணடுள்ளார்.

புதுமுறிப்பில் கடந்த முப்பத்தைந்து ஆண்டுகளுக்கு மேலாக வாழ்ந்து வரும் சுமார் அறுபது வரையான குடும்பங்கள் காணி ஆவணங்கள் இன்றி நிரந்தர வீட்டுத் திட்டம் உள்ளிட்ட மேம்பாட்டு செயற்பாடுகளை முனனெடுக்க முடியாது சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றனர். இந்த நிலையில், குறித்த விடயம் நாடாளுமன்ற உறுப்பினர் முருகேசு சந்திரகுமாரின் கவனத்திற்கு கொண்டுவரப்பட்டதையடுத்து, நேற்று முன்தினம் குறித்த பகுதிக்குச் சென்று அந்த மக்களை சந்தித்து கலந்துரையாடிய அவர், காணி ஆவணங்கள் இன்மையால் வீட்டுத் திட்டத்தை பெறமுடியாதுள்ள நிலைமை குறித்தும் அவர்களுக்கான காணி ஆவணங்களை வழங்குவதற்கான நடவடிக்கைகளை முன்னெடுப்பது குறித்தும் கலந்துரையாடினார்.

தொடர்ந்து இந்த விடயத்தினை மாகாண காணி ஆணையாளர் தயானந்தாவின் கவனத்திற்கு கொண்டு சென்ற அவர், புதுமுறிப்பு பகுதியில் மத்திய வகுபபுத் திட்டம் தவிர்ந்த ஏனைய அரச காணிகளில் குடியிருக்கும் மக்களில் இதுவரை காணி ஆவணங்கள் இன்றி வசிப்பவர்களுக்கு உடனடியாக காணி ஆவணங்களை வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என பணித்ததோடு, மேற்குறித்த மத்திய வகுப்புத் திட்ட காணிகளில் வாழ்கின்ற மக்கள் காணி ஆவணங்கள் தொடர்பாக எதிர்கொள்ளும் பிரச்சினைகளுக்கும் உரிய தீர்வினைப் பெற்றுக்கொடுக்கும் முகமாக முறையான நடவடிக்கையை மேற்கொள்ளுமாறும் பணித்தார்.

இந்தக் கலந்துரையாடலின் போது கரைச்சி பிரதேச செயலர் நாகேஸ்வரன், புதுமுறிப்பு கிராம சேவையாளர் மற்றும் புதுமுறிப்பு கிராம அபிவிருத்தி சங்க தலைவர், செயலாளர் மற்றும் கிராம மக்கள் என பலர் கலந்துகொண்டனர்

# தொண்டு நிறுவனம் ஒன்றினால் வீடமைப்புக்கு நிதியுதவி

சண்டிலிப்பாய் பிரதேச செயலர் பிரிவில் வறுமைக்கோட்டின் கீழ் வாழும் நான்கு குடும்பங்களுக்கு தொண்டு நிறுவனம் ஒன்றினால் வீட மைப்பு உதவி வழங்கப்பட்டுள்ளது.

வீடமைப்புத்திட்டத்துக்காக ஒவ்வொரு குடும்பததிற்கும் அண்ணளவாக ரூபா 600000 இலட்சம் ரூபா நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

இத்தொகையினைப் பயன்படுத்தி வீடமைப்புப் பணிகளை முழுமையாகப்பூர்த்தி செய்வதற்கு சில சமூகப்பங்களிப்பினைப் பெறுவது சிறப்பானதெனக் கருதி சண்டிலிப்பாய் பிரதேச செயலக சமூக சேவை உத்தியோகத்தர் சிவராஜாவினால் கோரிக்கை விடுத்த போது இரண்டு வீடுகளுக் கான



அத்திபாரம் வெட்டும் வேலைகளை இளவாலை வாலிபர் சங்கத்தினர் பொறுப்பேற்றுக் கொண்டனர்.

இச் செயற்றிட்டத்தை அறிந்து, அத்திபாரம் வெட்டுதலுக்கு சண்டிலிப்பாய் பிரதேச இளைஞர் நாடாளுமன்ற உறுப்பினர் க.உஷாந்தன், ஆனைக் கோட்டை இளைஞர் கழகத்தலைவர் சண்டிலிப்பாய் மேற்கு இளைஞர் கழகத்தலைவர் எஸ்.சனோசன் எனப்பலர் தன்னார்வத் தொண்டாக இப்பணியில் கலந்து கொண்டனர். (48)

# மஹோற்சவம்

(அச்சுவேலி)

யாழ்ப்பாணம் நீர்வையம்பதி அருள்மிகு ஸ்ரீ இராஜராஜேஸ்வரி (பழைய) அம்பாள் ஆலயத்தின் மகோற்சவம் நேற்றுமுன்தினம் முற்பகல் 11மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து 12 தினங்கள் திருவிழாக்கள் நடைபெறவுள்ளன.

முதல் திருவிழாவான கொடியேற்றத்துடன் 12 தினங்களும் விசேட பூசை வழிபாடுகள் இடம்பெறும். எதிர்வரும் 9ஆம் திகதி திங்கட்கிழமை வேட்டைத்திருவிழாவும் 10 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலை கற்பூர ஆராத்தி, மாலை சகோபுரத்திருவிழா (சப்பறம்) 11ஆம் திகதி புதன்கிழமை முற்பகல் 10 மணிக்கு தேர்த்திருவிழாவும் நவசக்தி அர்சனையும் இடம் பெறும் 12 ஆம் திகதி வியாழக்கிழமை திருமஞ்சனத்தைத் தொடர்ந்து முற்பகல் 10.30 மணிக்கு தீர்த்தோற்சவமும் மாலை 5 மணிக்கு கொடியிறக்கமும் இடம் பெறவுள்ளது. (85)

□ □ □

அச்சுவேலி,பத்தமேனி, பாரதிவீதி அருள்மிகு ஸ்ரீ ச்ங்கிலி வைரவப் பெருமான் ஆலயத்தின் மகோற்சவம் இன்று முற்பகல் 10மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து 11 தினங்கள் திருவிழாக்கள் மகோற்சவ பிரதமகுரு சிவஸ்ரீ.திருஞானசம்பந்தம் குருக்கள் தலைமையில் இடம்பெறவுள்ளன.

தினசரி உற்சவங்களாக முற்பகல் 10 மணிக்கு அபிஷேகம் 11மணிக்கு மூலஸ்தான பூசை, நண்பகல் 12 மணிக்கு வசந்த மண்டபப்பூசை, மாலை 7 மணிக்கு மூலஸ்தானப்பூசை, மாலை 7.30 மணிக்கு வசந்தமண்டபப் பூசை இரவு 9.30 மணிக்கு திருவிழா நிறைவு பெறும்.

எதிர்வரும் 10ஆம் திகதி சப்பறத்திருவிழாவும் 11ஆம் திகதி அலங்கார உற்சவம், 12ஆம் திகதி தீர்த்தோற்சவமும் இடம்பெறவுள்ளன. (85)

# இரத்ததான முகாம்

இணுவில் ஸ்ரீராம் ஜிம் நிலையத்தினரின் ஏற்பாட்டில் தெல்லிப்பழை ஆதார வைத்திய சாலையின் இரத்த வங்கிப் பிரிவினர் நடாத்திய இரத்ததான முகாம் கடந்த ஞாயிற்றுக் கிழமை முற்பகல் 10 மணி முதல் நிலைய மண்டபத்தில் நடை பெற்றது.மேற்படி இரத்த தான முகாமில் சுமார் 35 வரையான குருதிக் கொடையாளர்கள் ஆர்வத்துடன் கலந்து கொண்டு உயிர்காக்கும் உன்னத பணிக்கு ஒத்துழைப்பு வழங்கியதாக இரத்த வங்கிப் பொறுப்பதிகாரி வைத்தியகலாநிதி ம.பிரதீபன் தெரிவித்தார்.குறித்த இரத்ததான நிகழ்வு நிலையத்தினரின் 16 ஆவது ஆண்டுப் பூர்த்தியை முன்னிட்டு இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது. (63)

# பதிவிறக்கப் பெட்டகம்

என் படங்களுக்கான இசை, குறிப்பாகப் பின்னணி இசை எங்கு தொடங்கி எங்கு முடிய வேண்டும் அது எப்படிப்பட்ட இசையாக இருக்க வேண்டும் என்பவற்றில் நான் வெகு உன்னிப்பாக இருப்பேன். இவற்றையெல்லாம் திரைக்கதை எழுதும் போதே தீர்மானித்துக்கொள்வேன். படத் தொகுப்பு முடிந்து இசைச் சேர்க்கைக்குத் தயாரானதும், அந்தப் படத்திற்கான இசை பற்றிய எனது எண்ணங்களை இசையமைப்பாளருக்குத் தெளிவாகத் தெரியப்படுத்துவேன். பிரக்ஞைபூர்வமாக நான் வைக்கும் மௌனங்களை உணர்வு பொதிந்த அர்த்தமுள்ள மௌனங்களை இசை கொண்டு கலைக்க வேண்டாம் என்றும் நான் கேட்டுக்கொள்வேன்.

'மூடுபனி' படத்தின் இசைச் சேர்க்கைக்கு முன் அதற்கான இசை எப்படி இருக்க வேண்டும் என்ற எனது எண்ணங்களை இளையராஜாவுக்கு மிக நுணுக்கமாகத் தெரியப்படுத்தியிருந்தேன். இசைஞானியுடன் பணியாற்றத் தொடங்கிய அந்த ஆரம்ப நாட்களில் ஒரு நாள் ராஜா என்னிடம் கேட்டார். "ஒரு படத்திற்கான இசையை யார் தீர்மானிப்பது?"

என்ன மன நிலையில் அந்தக் கேள்வி கேட்கப்பட்டிருக்கிறது என்பதை உடனடியாக நான் புரிந்துகொண்டேன். இசை அமைப்பதில் அதுவரை அவர் அனுபவித்து வந்த படைப்புச் சுதந்திரத்திற்குள் நான் மூக்கை நுழைக்கிறேனோ என்ற சந்தேகம் எனக்கே தோன்ற ஆரம்பித்திருந்தது. கொஞ்சம் யோசித்துவிட்டு நான் சொன்னேன்:

"ஒரு நதி அது ஆரம்பிக்கும் இடத்திலிருந்து கடலில் சென்று கலக்கும் வரை மாறிக்கொண்டே இருக்கும். ஆரம்பிக்கும் இடத்தில் அது ஒரு சிறிய ஊற்றாக இருக்கலாம். அப்படி ஆரம்பிக்கும் அந்த நதி சற்றுத் தள்ளி ஒரு சிறிய அருவியாக ஓடுகிறது. இன்னும் சற்றுத் தொலைவில் வேறு சிற்றருவிகள் சில அதனுடன் சேர்ந்துகொள்ள அது ஒரு காட்டருவியாக உருமாறுகிறது. இன்னுமொரு இடத்தில் நெடிதுயர்ந்து நிற்கும் பாறைகளிலிருந்து பேரழகும், பேரிரைச்சலும் கொண்ட நீர்வீழ்ச்சியாகக் கொட்டுகிறது. வேறு ஒரு இடத்தில் அது விரிந்து பரந்த நீர்த்தேக்கமாக ஸ்தம்பித்து நிற்பது போன்ற தோற்றத்துடனும் அதிக ஆழத்துடனும் காட்சியளிக்கிறது. அந்த நீர்த்தேக்கத்திலிருந்து வழிந்து கீழே உள்ள கூழாங்கற்களின் மீது ஒரு குட்டிப் பெண்ணின் குதூகலத்துடனும் சிலு சிலு என்ற சத்தத்துடனும் ஸ்படிகம் போன்ற தெளிவுடனும் துள்ளிக் குதித்தபடி தொடர்கிறது. இன்னும் சில இடங்களில் அது நிலத்தடி நீராக மாறிக் காணாமல் போய்விடுகிறது. இப்படியாக ஒரு நதியானது அது ஆரம்பிக்கும் இடத்திலிருந்து இறுதியில் கடலுடன் சென்று கலக்கும் வரை அதன் தோற்றத்திலும் வேகம், ஆழம் ஆகியனவற்றிலும் மாறிக்கொண்டே இருக்கிறது. இந்த மாற்றங்களையெல்லாம் நதியா தீர்மானிக்கிறது? அதன் கீழேயுள்ள நிலப்படுகைதானே – நிலத்தின் அமைப்புதானே தீர்மானிக்கிறது!

நான் பேசப் பேச ராஜாவின் அகத்தில் ஏற்பட்ட தெளிவு அவர் முகத்தில் தெரிகிறது.

"இதுபோலத்தான் ஒரு திரைப்படத்தின் இசையும். ஒரு திரைப்படத்திற்கான இசையை குறிப்பாக அதன் பின்னணி இசையை அந்தப் படம்தான் – அந்தப் படத்தின் திரைக்கதை தான் தீர்மானிக்கிறது. இசை மட்டுமல்ல ஒளிப்பதிவையும், ஒலி அமைப்பையும், நடிப்பையும், படத் தொகுப்பையும், உடைகளையும் சகலத்தையும் தீர்மானிப்பது அதன் திரைக்கதை தான்!"

கேட்டுக்கொண்டிருந்த ராஜாவின் முகத்தில் புன்னகை மலர்கிறது. கைதட்டி ஆமோதிக்கிறார். அன்று முதல் இன்று வரை எனது படங்களுக்கான அவரது இசை அந்தந்தத் திரைக் கதைகளின் தேவையை ஒட்டியே இருந்துவந்திருக்கிறது.

எனது படங்களில் வரும் மௌனங்களை மதிக்கத் தெரிந்தவர் அவர். எனது அர்த்தமுள்ள மௌனங்களின் அழுத்தத்தை என்றுமே இசை கொண்டு அவர் கலைத்ததில்லை.

That is my Raja..!

– பாலு மகேந்திரா

"அன்னக்கிளி' படத்துக்கு இசையமைப்பாளராக இளையராஜா தேர்வான போது அதை எதிர்த்த பலருக்கும் பதிலடி தர பஞ்சு அருணாச்சலம் சொன்ன சூழ்நிலைகளுக்கு அங்கிருந்த திருமண மண்டபத்திலேயே அனைத்துப் பாடல்களுக்கும் இசையமைத்து, தனது திறமையை நிரூபித்தார் இளையராஜா.

"உங்களின் மாஸ்டர் பீஸ் என எதைக் கருதுவீர்கள்?" என நிருபர் ஒரு முறை கேட்க, "கார்த்திக், யுவன், பவதாரணி ஆகியோரே எனது சிறந்த மாஸ்டர் பீஸ் படைப்புகள்" என பதிலளித்தார் இளையராஜா.

# இங்கிலீஷ்

– ஜி.ஆர்.சுரேந்திரநாத் –

சிறுவயதில் நான் வெள்ளைக்காரர்கள் மட்டுமே ஆங்கிலத்தில் பேசுவார்கள். நம்மாட்களுக்கு எல்லாம் ஆங்கிலத்தில் படிக்க மட்டுமே தெரியும். பேசத் தெரியாது என்றுதான் வெகுநாட்களாக எண்ணிக்கொண்டிருந்தேன்.

மேலும் வளர்ந்து தொடர்ச்சியாக தமிழ்ப்படங்கள் பார்க்க ஆரம்பித்த பிறகுதான், நம்மைப் போன்ற சக தமிழர்களும் ஆங்கிலத்தில் பேசுவார்கள் என்பதைத் தெரிந்துகொண்டேன். தமிழ்ப்படங்களில் ஆங்கிலம் பேசுவதில் பின்வரும் 3 பற்றேர்ண்கள் இருப்பதை எனது செல்.ஃப் இன்டலிஜென்ஸைப் பயன்படுத்திக் கண்டுபிடித்தேன்:

1. அப்போதைய தமிழ் சினிமாக்களின் கதாநாயகிகள், பெரும்பாலும் திமிர்பிடித்த பணக்கார வீட்டுப் பெண்களாகத்தான் இருப்பார்கள். அவர்களிடம் ஹீரோக்கள் கலாட்டா செய்யும்போது கதாநாயகிகள் மிகவும் கோபத்துடன், "யு ஸ்டுப்பிட்... இடியட்... ப்ளடி நான்ஸென்ஸ்... என்று ஆங்கிலத்தில்தான் கோபப்படுவார்கள். இன்னும் சற்று புத்திசாலியான(?) கதாநாயகிகள், "I will call the police" என்று எச்சரிக்கை விடுப்பார்கள்.

2. "விதி" திரைப்படத்தின் வெற்றிக்குப் பிறகு தமிழில் நீதிமன்றம் செட்டைப் போட்டுவிட்டுத்தான் டைரக்டர்கள் கதைத் தேடத் துவங்கினார்கள். இந்த நீதிமன்றக் காட்சிகளில் மிகவும் அடிக்கடி பயன்படுத்தும் மூன்று ஆங்கில வசனங்கள்: ஆர்டர்... ஆர்டர்... ஆர்டர்... அடுத்து, அப்ஜெக்ஷன் ஓவர்ரூல்ட். அடுத்து அப்ஜெக்ஷன் சஸ்ரெய்ன்ட். இவ்வாறு வெறும் 3 டயலாக்குகளையே கேட்டு கேட்டுப் புளித்துப் போயிருந்த சமயத்தில்தான் வெண்திரையில் அந்த மாபெரும் ஆங்கிலப் புரட்சி நடந்தது.

டி. ராஜேந்தரின் "ஒரு தாயின் சபதம்" திரைப்படம் வந்தது. அதில் வழக்கறிஞராக நடித்திருந்த டி. ரா்ஜேந்தர் ஸ்டைலாக நீதிமன்றத்தில் பேசியதற்கு இணையான ஆங்கில வசனத்தை நான் எந்த ஒரு உலகத் திரைப்படத்திலும்... ஏன்? படம் முழுவதும் நீதிமன்றக் காட்சிகள் நிரம்பிய "ஜட்ஜ்மென்ட் நூரம்பெர்க்" படத்திலும் கூட பார்த்ததில்லை. ஆங்கிலத்திற்கே அடுக்குமொழி கற்றுத்தந்த அந்த டயலாக் இதோ: ராஜேந்தர், "According to the prosecution... mr. johnson... you says its a poison. According to me it is a ex-agression… I say this bottle contains a-ordinary solution".

இந்த இடத்தில் எதிர்தரப்பு வக்கீல் ஆட்சேபம் தெரிவிக்க... பதிலுக்கு டி. ராஜேந்தர் பேசிய இங்கிலீஷ் வசனத்திற்கு நாங்கள் எல்லோரும் அசந்துபோய் எழுந்து நின்று கைதட்டினோம். அந்த டயலாக்: first of all you should hear my explanation… I think you are a person… always getting emotion… because of the only reason… you never get promotion… இந்த இடத்தில் மற்ற வக்கீல்கள் எல்லாம் ஹா... ஹா... என்று சத்தமாக சிரிக்க... அப்போது டி. ராஜேந்தர் see this reception…its not only my conception… any way i come to a conclusion. this bottle contains a ordinary solution.. .(உலக மொழியியல் வரலாற்றில் முக்கியத்துவம் வாய்ந்த இந்தக் காட்சி யு-ட்யூபில் கிடைக்கிறது.)

3. அடுத்த பற்றேர்ண்" பல கமல், ரஜனி படங்களில், ஆரம்பக் காட்சியிலிருந்து அவர்களை இங்கிலீஷ் பேசத் தெரியாத தற்குறிகள் போலத்தான் காட்டுவார்கள். ஆனால் நாம் கொஞ்சமும் எதிர்பாராத சமயத்தில் படத்தில் வரும் பணக்கார கதாநாயகி இங்கிலீஷில் பேசும்போதோ, அல்லது யாரேனும் கலெக்டர் அல்லது பொலீஸ் அதிகாரி இங்கிலீஷில் பேசும்போதோ பதிலுக்கு கமலோ ரஜினியோ நீளமாக இங்கிலீஷில் பேசுவார்கள் பாருங்கள் (உதாரணம்: "மன்னன்" திரைப் படத்தில் மெக்கானிக்காக பணி புரியும் ரஜினிகாந்த் ஒரு பார்ட்டியில் விஜயசாந்தி முன் பேசும் வசனம்) நாங்கள் எல்லாம் "அவ்வை சண்முகி" படத்தில் கமல் மடிசார் மாமி வேடத்தில் பைக் ஓட்டியதற்கே ஷஷஎய்" பொம்பள பைக் ஓட்டுறாடா" என்று பக்கத்தில் அமர்ந்திருப்பவர் மடியில் விழுந்து விழுந்து சிரிக்கும் கிராமப்புற வெள்ளந்தி ரசிகர்கள். எங்கள் ஹீரோ இப்படி இங்கிலீஷ் பேசினால் விடுவோமா? கைதட்டல் அடி பின்னி எடுத்துவிடுவோம். இந்த கைதட்டின் விசேஷம் என்னவென்றால், கைதட்டியவர்களுக்கு அந்த டயலாக்கில் ஒரு வாக்கியம் கூட புரியாது என்பதுதான்.





ஒருமுறை திடீரென்று என் மாமாவுக்கு கையில் மிகக் கடுமையாக வலித்ததால் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டார். ஒரு இளம் டாக்டர் என் மாமாவின் கையில் ஒரு ஜெல்லைத் தடவி அதன் மேல் ஒரு மெஷினை வைத்துப் பார்த்தார். உடனே அந்த இளம் டாக்டரின் முகம் மாறியது. வெளியே சென்றவர் சில நிமிடங்களில் இரண்டு பெரிய டாக்டர்களுடன் வந்தார். மூவரும் என் மாமாவைச் சுற்றி நின்றுகொண்டு அம்மெஷினைப் பார்த்தபடி இங்கிலீஷில் பேச ஆரம்பிக்க". எனக்கு பகீரென்றது. பொதுவாக யாராவது இங்கிலீஷ் பேசினாலே எனக்கு பீதியாகும். அதுவும் டாக்டர்கள் ஒரு நோயாளிக்கு பக்கத்தில் இங்கிலீஷ் பேசினால் ஆள் அவுட்தான் என்று தோன்றும்.

எனக்கு இரண்டு பயங்கள். முதலாவது பயம், மாமாவுக்கு என்ன ஆனது? இரண்டாவது" அன்று நான் பான்ட், சட்டை போட்டுக்கொண்டிருந்ததால் டாக்டர்கள் திடீரென்று என்னிடம் இங்கிலீஷில் பேசிவிடுவார்களோ என்ற பயம். அவர்களின் உரையாடலில் இடையிடையே ஹான்ட், ஹார்ட், ப்ளட் என்ற வார்த்தைகள் காதில் விழுந்தது. சரி" கையில் இருக்கும் இரத்தத்தை எடுத்து இதயத்தில் விடப்போகிறார்கள் போலிருக்கிறது என்று நான் அமைதியானேன்.

எனது அலுவலகச் சூழலில் ஆங்கிலம் பேசுவதற்கு வாய்ப்பில்லை. சில உயரதிகாரிகள் ஆங்கிலத்தில் பேசுவார்கள் என்றாலும் அவர்களோடு எனக்கு நேரடித் தொடர்பில்லை என்பதால் வண்டி பிரச்சினையில்லாமல் ஓடியது.

இவ்வாறு இங்கிலீஷ் பேசாமலேதான் நாட்களை ஓட்டிக்கொண்டிருந்தேன். இந்த செல்.ஃ.போன் கர்மம் வந்துத் தொலைத்தது. கடைசியாக நானும் இங்கிலீஷில் பேசிவிட்டேன். ஒரு நாள் மொபைலில் என்னைத் தொடர்புகொண்ட ஒரு குரல் அழகிய பெண்மணி கொன்வென்ட் இங்கிலீஷில் பேச ஆரம்பிக்க" நான் குறுக்கே புகுந்து தமிழில் பேசினேன். தமிழ் அவளுக்குப் புரியவில்லை. எனவே வேறு வழியின்றி என் வாழ்வில் முதன்முதலாக இங்கிலீஷில் பேசினேன். அது: I don't know English.

# பொன் பொருளினும் பெரிது நூல்கள்!



• இங்கிலாந்தில் ஹே ஆன் வை என்ற ஊரின் மொத்தச் சனத்தொகையே இரண்டாயிரத்துக்குக் கீழேதான். ஆனால், அவ்வூரில் உள்ள நூல்களோ 15 இலட்சத்திற்கும் மேலாகும். ஒவ்வொரு ஆண்டும் பெரும் அளவில் புத்தகச் சந்தையையும் அவர்கள் நடாத்தி வருகிறார்கள். உலகின் பல இடங்களிலிருந்தும் மாபெரும் எழுத்தாளர்கள் உட்பட பலர் கலந்துகொள்வது சிறப்புச் செய்தி.

• இராமநாதபுரம் மன்னரிடம் இருந்து நட்பின் அடையாளமாக பழம்பெரும் நூல்களையே பாரதியார் பரிசிலாகப் பெற்றார். குடும்பம் வறுமையில் உழன்றபோதும் பொன்னும் பொருளும் மன்னரிடம் கோரிப் பெறாமல், ஒரு வண்டி நிறைய தமிழ் நூல்களை மேலாகக் கருதிப் பெற்றார்.


• ஜவஹர்லால் நேரு, படிப்பதற்கு நேரம் இல்லாதபோதும், தான் செல்லும் இடங்களுக்கெல்லாம் நூல்களை எடுத்துச் செல்வதை வழக்கமாகக் கொண்டிருந்தார். அவ்வாறு நூல்களுடன் செல்வது, பல பேரறிஞர்களுடன் பயணித்த நிம்மதி கிடைக்கிறது என்றார்.

• தமிழ்த்தாத்தா எள்றழைக்கப்படும் உ.வே. சாமிநாதையர் எட்டுத்தொகை, பத்துப்பாட்டு, சீவகசிந்தாமணி, சிலப்பதிகாரம், மணிமேகலை, புராணங்கள், உலா, கோவை, தூது, அந்தாதி, பரணி, இரட்டை மணிமாலை இதர பிரபந்தங்கள் என 80 நூல்களைத் தேடிப்பிடித்துப் பதிப்பித்துள்ளார்.

• தமிழில் வெளிவந்த முதல் இலக்கியக் கலைக்களஞ்சியம் "அபிதான கோசம்". அது யாழ்ப்பாணத்தில் வாழ்ந்த முத்துத்தம்பி பிள்ளையால் எழுதப்பட்டது.

• வெப்ஸ்டர்ஷஸ் அகராதியைத் தொகுப்பதற்கு நோவா வெப்ஸ்டர் 36 ஆண்டுகள் கடினமாக உழைத்தார்!

• மைசூர் பல்கலைக்கழக நுழைவாயிலில் தொங்கும் விளம்பரப் பலகையில் காணப்படும் வாசகம் இது. "அற-



# ஒக்டோபஸ்


ஒக்டோபஸ் ஒரு கடல் வாழ் உயிரினமாகும். எந்தத் திசையிலும் திரும்பும் வசதி உடைய வால் போன்ற எட்டு கைகள் இதற்கு உண்டு. இதனால் ஒரு கிலோ எடை மட்டுமே உடைய சிறிய ஒக்டோபஸ்கூட இருபது கிலோ எடையுள்ள பொருளைப்பற்றி இழுக்க முடியும்.

ஆபத்துக்காலங்களில் அதன் ஒரு கை துண்டிக்கப்பட்டாலும், மீண்டும் வளர்ந்துவிடும். ஒக்டோபஸ் ஒரே நேரத்தில் ஆயிரக்கணக்கான முட்டைகளை இடும். அந்த முட்டைகளை அடைகாக்கும்போது பெண் ஒக்டோபஸ் எதுவுமே சாப்பிடாது. இதனால் அடைகாக்கும் காலம் முடிந்தவுடன் பெண் ஒக்டோபஸ்கள் இறந்து விடுகின்றன.

சில ஒக்டோபஸ்கள் சுற்றுச்சூழலுக்கு ஏற்ப தம் நிறத்தை மாற்றிக்கொள்ளும் திறன் உடையவை. எதிரிகளால் தாக்குதல் ஏற்படும்பொழுது ஒக்டோபஸ் ஒருவகை நீல நிறத் திரவத்தை உமிழும். இதனால் எதிரிகளால் அங்கு பார்க்க முடியாமல் போகும்பொழுது ஒக்டோபஸ் விரைந்து ஓடி மறைந்து விடும். இந்திய - பசிபிக் கடல் பகுதியில் காணப்படும் நீல வகை ஒக்டோபஸ் மிக மிக ஆபத்தானது.

மிகப்பெரிய ஒக்டோபஸ்களிடம் சிக்கிக்கொள்ளும் மனிதனை நீருக்குள்ளே அமிழ்த்திவிடுவதால் மூச்சுத்திணறல் ஏற்பட்டு இறக்க நேரிடும். ஒக்டோபஸ்களுக்கு மூன்று இதயங்கள் உள்ளன. உலகின் எல்லா கடல்களிலும் ஒக்டோபஸ்கள் காணப்படுகின்றன.

# படகில் போகும்போது ஏன் நிற்கக் கூடாது?




**பூ**மியில் உள்ள எல்லாப் பொருள்களிலும் புவியீர்ப்பு மையம் (Centre of gravity) உள்ளது. அதுபோல, மனித உடலிலும் புவியீர்ப்பு மையம் செயற்படுகிறது. நமது செயற்பாடுகளுக்கு ஏற்ப புவியீர்ப்பு மையம் இடம் மாறிக் கொண்டேயிருக்கும். அதாவது நின்று கொண்டிருக்கும்போது புவியீர்ப்பு மையம் உயரமான இடத்துக்கும், உட்காரும்போது தாழ்வான இடத்துக்கும் மாறும்.

நாம் நிற்கும்போதும் நடக்கும்போதும் ஓடும்போதும் நம் உடலில் புவியீர்ப்பு மையம் செயற்படும் இடத்திலிருந்து தரைக்கு ஒரு செங்குத்துக் கோட்டை வரைவதாகக் கற்பனை செய்துகொள்வோம். அப்படியானால், அந்தக் கோடு தரையைத் தொடும் இடம் என்பது நம் இரு கால்களின் பாதங்களுக்கும் இடையே அமைய வேண்டுமில்லையா? அப்போதுதான் நாம் நிலைதடுமாறாமல் இருக்கவும் முடியும். ஒரு வேளை அந்தக்கோடு, இரு பாதங்களுக்கு இடைப்பட்ட பகுதியைத் தாண்டி வெளியே சென்றால் நம்மால் உறுதியாக நிற்க முடியாது, கீழே விழுந்து விடுவோம்.

தண்ணீரில் ஓயாது எழும் அலைகள் காரணமாக நாம் செல்லும் இந்தப் படகு அங்கும் இங்கும் ஆடிக்கொண்டே செல்லும். படகு மட்டுமல்ல, படகு ஆடுவதற்கு ஏற்ப நம் உடலும் அசைந்தாடும்.

இந்த நேரத்தில் நாம் நின்றுகொண்டிருந்தால் நம் உடலின் புவியீர்ப்பு மையத்திலிருந்து தரைப் பகுதியைத் தொடும் செங்குத்துக்கோடு, நமது இரு கால்களுக்கும் இடைப்பட்ட பகுதியைத் தாண்டி, திடீரென வெளியே சென்றுவிடலாம். அதனால், எதிர்பாராத நேரத்தில் நாம் கீழே விழுந்து விடுவோம். அதனாலதான் படகில் நிற்காதீர்கள் என படகோட்டிகள் எச்சரிக்கிறார்கள்.

நாம் உட்கார்ந்துவிட்டால் நம் உடலில் புவியீர்ப்பு மையம் செயற்படும் இடமும் தாழ்ந்துவிடும். நாம் நிற்கும்போது செங்குத்துக் கோடு தரையைத் தொடும் இடத்திலிருந்து புவியீர்ப்பு மையம் செயற்படும் இடம் வரை இருந்த உயரம், உட்காரும்போது குறைந்துவிடுகிறது. இதன் காரணமாகச் செங்குத்துக் கோடு தரையைத் தொடும் இடம், நம் உடல் பரப்பைத் தாண்டி வெளியே செல்லும் வாய்ப்புக் குறைந்து போய்விடும். அதனால், நாம் கீழே விழும் வாய்ப்பும் குறைந்துவிடும்.

# காதலில் மாட்டிக்கொண்டார்!

"ஹொலிவூட்டின் எவர்கிரீன் பச்சிலர்" என, செல்லமாக அழைக்கப்படுபவர் ஜோர்ஜ் க்ளூனி. 52 வயதாகியும் இன்னும் கல்யாணம் செய்யாமலும் காதலில் விழாமலும் இருந்து வரும் நடிகர். ஆனாலும், இந்த வயதிலும் ஹொலிவூட் ரசிகைகளின் கனவுக் காதலனாகத் திகழ்ந்து வருபவர் இவர்தான். இவரை, இதுவரை எத்தனையோ நடிகைகள், காதலித்தும், இவர், அவர்களை கண்டு கொள்ளவே இல்லை. இத்தனை நாட்களாக தப்பி வந்த அவர், தற்போது, இங்கிலாந்தைச் சேர்ந்த அமல் அலாமுதீன் என்ற பெண்ணின் காதல் பார்வையில், வசமாகச் சிக்கியுள்ளார். இந்தப் பெண், ஒரு சமூக ஆர்வலர். அலாமுதீனை, தன் வீட்டுக்கு அழைத்து, தன் கையாலேயே சமைத்த உணவை பரிமாறி, காதலை தெரிவித்துள்ளார், க்ளூனி. இதனால், பரவசமடைந்த அலாமுதீன், காதலுக்கு பச்சைக் கொடி காட்ட, வரும் செப்ரெம்பரில் இருவருக்கும்



# புலம்பெயர்ந்த நாடுகளில் இருந்து தனித் தமிழீழத்திற்கு முனைவோர் 3

- கமெலியா நாதானியேல் -

## விநாயகமூர்த்தி என்கிற விநாயகம்

மே 2009 ல், எல்.ரீ.ரீ.ஈ முடிவுக்கு வந்தபோது, மோதலினால் துன்பம் அனுபவித்து வந்த எல்ரீ.ரீ.ஈ தலைவர்கள் மற்றும் தொண்டர்கள் ஆகிய அனைவரும் பச்சாதாபப்பட்டு மனம் வருந்தினார்கள். புனர்வாழ்வு வழங்கப்படும் வேளையில் சிங்களவர்கள், முஸ்லிம்கள் ஏன் இந்தியர்களைக் கூட ஏற்றுக்கும் விதத்தில் தங்களுக்கு போதனைகள் மேற்கொள்ளப்பட்டதை எல்.ரீ.ரீ.ஈ அங்கத்தவர்கள் ஏற்றுக்கொண்டார்கள்.


ஆயினும் சிறிய தொகையின்ரான எல்.ரீ.ரீ.ஈ தலைவர்கள் பாதுகாப்பு நடவடிக்கைகளை ஏமாற்றி நாட்டை விட்டு தப்பியோடினார்கள். போரின் பயனற்ற தன்மையை அவர்கள் தனிப்பட்ட முறையில் அனுபவப்பட்டிருந்த போதிலும், உயிர் வாழ்வதற்காக அவர்கள் போருக்கு ஆதரவளித்து தற்போதும் எஞ்சியிருக்கும் எல்.ரீ.ரீ.ஈ யின் சர்வதேச வலையமைப்புகளுடன் தொடர்புகளை ஏற்படுத்தி வருகிறார்கள். அவர்கள் குற்றவியலிலும் மற்றும் பயங்கரவாதத்திலும் மட்டுமே நிபுணத்துவம் பெற்றிருப்பதால், மையநீரோட்டத்தில் இணைந்து வாழ்க்கையை முன்னெடுப்பதற்குப் பதிலாக அவர்கள் எல்.ரீ.ரீ.ஈயை ஒன்றிணைக்க முயற்சித்து வருகிறார்கள்.

யாழ்ப்பாணம் வரணியில் 1964 நவம்பர் 10 இல் பிறந்த சேகரப்பிள்ளை விநாயகமூர்த்தி அல்லது கதிர்காமத் தம்பி அறிவழகன் என்கிற விநாயகம், ஐந்து பிள்ளைகள் உள்ள குடும்பத்தின் மூன்றாவது பிள்ளையாவார். அவர் எல்.ரீ.ரீ.ஈயில் 1985இல் இணைந்து அடிப்படை பயிற்சியை வடமராட்சி பகுதியில் பெற்றார். அவரது இராணுவ பயிற்சியை முடித்துக்கொண்ட பின்னர் யாழ்ப்பாண மாவட்டத்தின் தாக்குதல் குழுவின் ஒரு தீவிர அங்கத்தவராக இயங்கினார்.

1985 - 1990 இற்கு இடைப்பட்ட காலப்பகுதியில் பாதுகாப்புப் படையினரின் ரோந்து மற்றும் தொடரணிகள் மீது இடம்பெற்ற சிறியரக ஆயுதத் தாக்குதல்கள் பலவற்றில் அவர் பங்கெடுத்திருந்தார். 1990 இல் ஈழப் போர் - 2 இன் ஆரம்பகட்டத்தில் விநாயகம் பிX பிரிவுக்கு (அது தமிழ் ஈழ புலனாய்வுப் பிரிவின் குறியீட்டுப் பெயர்) மாற்றப்பட்டு புலனாய்வைக் கையாளும் முன்னணி முகவராக மாறினார், அதைத் தொடர்ந்து முக்கிய முகவர்களை கையாளும் நியமனத்துக்கு உயர்த்தப்பட்டார்.

அவர் பாலம்பிட்டி வடக்கில் ஒரு உளவுத்துறை சிறு குழுவொன்றை அமைத்திருந்தார், அது மன்னார், கொழும்பு, மற்றும் புத்தளம் மாவட்டங்களின் தகவல்களை மட்டும் சேகரிக்கும் பொறுப்பினைக் கொண்டிருந்தது.

காட்டுப் போர்முறை உத்திகளில் ஒரு தொழில் முறை நிபுணராக கருதப்பட்ட அவரிடம், குஞ்சுக்குளம், மறிச்சுக்கட்டி, புத்தளம் மற்றும் கொழும்பு பாதையூடாக கரும் புலிகளை கொழும்புக்கு அழைத்துச் செல்லும் பணி பலமுறை ஒப்படைக்கப் பட்டிருந்தது. 1998 இல் மத்திய வங்கியை வெடிக்க பயன்படுத்திய வெடிபொருட்கள் விநாயகம் மூலமாகவே கொண்டு செல்லப்பட்டதாக கூறப்படுகிறது. அதற்கு மேலும் தளபாடங்கள், நிதி, மற்றும் அங்கத்தவர்களை, மத்திய வங்கி மற்றும் கட்டு நாயக்கா விமானநிலையம் போன்ற தாக்குதல்களில் பயன்படுத்துவதற்காக அனுப்பி வைத்ததற்காக இயக்கத்தினால் அவர் கௌரவிக்கப்பட்டுள்ளார்.




2006 இல் ஈழப்போர் - 4 இன் தொடக்கத்தினை முன்னிட்டு, 2005 இல் அவர் உள்ளக உளவுத்துறை தலைவராக பதவி உயர்த்தப்பட்டார். கொழும்பு உளவுத்துறை நடவடிக்கைகளை முடுக்கி விடும் பொருட்டு அவர் அரிப்பு பகுதிக்கு நகர்ந்ததாகச் சொல்லப்படுகிறது.

எல்.ரீ.ரீ.ஈ தலைவர்களுக்கு பாதுகாப்பான பாதையை அமைத்துக் கொடுப்பதற்காக விநாயகத்தின் கீழ் ஒரு சிறு பிரிவினர் 2009 ஏப்ரல் - மே மாதப் பகுதியில் வில்பத்து காடுகளுக்கு நகர்ந்தார்கள். 2009 மே 18இல் எல்.ரீ.ரீ.ஈ தோற்கடிக்கப்பட்ட பின்னும் இந்தக் குழு அந்தப் பகுதியில் சுற்றித் திரிந்ததாக நம்பப்படுகிறது, மற்றும் இறுதியாக இந்தக் குழு தென்னிந்தியாவுக்கு தப்பியோடி அங்கிருந்து அவர்கள் தற்போது உள்ள இடமான பிரான்சுக்குச் சென்றிருக்க வேண்டும்.

கடும்போக்காளரான இந்த எல்.ரீ.ரீ.ஈ உளவுத்துறை தலைவர் பிரான்சில் அரசியல் புகலிடம் கோரியுள்ளார், சர்வதேசப் பொலிஸாரினால் சிவப்பு எச்சரிக்கை விடுக்கப் பட்டிருந்த போதிலும் அவர் அங்கு சுதந்திரமாக வாழ்கிறார்.

விநாயகம் எல்.ரீ.ரீ.ஈ தலைமைச் செயலக குழுவுக்கு தலைமை தாங்குகிறார். இவரது தலைமையின்கீழ், எல்.ரீ.ரீ.ஈயின் வெளிநாட்டு உளவுப் பிரிவு மற்றும் புலிகள் அமைப்பின் பாதுகாப்பு புலனாய்வு சேவை (ரி.ஓ.எஸ்.ஐ.எஸ்) என்பன ஒன்றிணைக்கப்பட்டுள்ளன.

நெடியவன் மற்றும் விநாயகம் ஆகியோர் வங்கி கடனட்டை மற்றும் காசோலை மோசடி உட்பட நேரடியாகவே பல குற்றச் செயல்களில் ஈடுபட்டு வந்துள்ளார்கள். எனினும் ஆயுதக் கடத்தலில் ஈடுபட்டிருந்த நெடியவனைப் போலல்லாது விநாயகம் ஆயுதம் மற்றும் போதைப் பொருள் கடத்தல் ஆகிய இரண்டிலும் ஈடுபட்டு வந்துள்ளார். எல்.ரீ.ரீ.ஈயின் உளவுத் துறையின் கீழ் விநாயகத்தின் தலைமையில் ஒரு சிறுபிரிவு போதைப் பொருள் வியாபாரத்தில் ஈடுபட்டு வந்தது. பொட்டு அம்மானின் நேரடித் தலைமையின் கீழ் இயங்கி வந்த விநாயகம், இந்தியா மற்றும் இலங்கையில் இருந்து போதைமருந்து கடத்தல் வலையமைப்புக்கான ஒரு கலைவடிவக் கட்டமைப்பையே கட்டியெழுப்பியிருந்தார்.

இந்திய கடலோரம் வழியாக படகுகள் மூலம் ஹெரோயின் மன்னாருக்கு கொண்டுவரப்பட்டு பின் அங்கிருந்து வீதி வழியாக அது கொழும்புக்குக் கடத்தப்படும். எல்.ரீ.ரீ.ஈ தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரன் போதைப்பொருள் வடக்கு மற்றும் கிழக்கு பகுதிகளுக்குகொண்டு வரப்படாமலும் அது எல்.ரீ.ரீ.ஈ அங்கத்தவர் கைகளில் சிக்கி விடாமலும் இருப்பதை மிகுந்த அக்கறையுடன் உறுதிப்படுத்திக் கொண்டார். ஆகவே மன்னாரிலிருந்து கொழும்புக்கு போதைப் பொருளைக் கடத்துபவர்கள் சிங்கள ஆண்கள் மற்றும் பெண்களாக இருந்தார்கள்.

ஒரு கட்டத்தில் எல்.ரீ.ரீ.ஈ யின் ஒருதொகை போதைப் பொருள் சரக்கு கண்டு பிடிக்கப்பட்டது, ஆனால் அதன் பின்னணியில் எல்.ரீ.ரீ.ஈ இருப்பதை காவல்துறையினரால் கண்டுபிடிக்க முடியவில்லை. விநாயகத்தின் போதைப்பொருள் கடத்தல் வலையமைப்பு மிகவும் இரகசியமாகச் செயற்பட்டதால் எல்.ரீ.ரீ.ஈயின் ஏனையவர்களும் அதைப்பற்றி அதிகம் அறிந்திருக்கவில்லை.

விநாயகத்தின் சகாவான எல்.ரீ.ரீ.ஈ உளவுத்துறையை சேர்ந்த சிரஞ்சீவி மாஸ்டர் இந்திய அதிகாரிகளால் கைது செய்யப்பட்டதின் பின்னரே விநாயகத்தின் செயற்பாடுகள் வெளிச்சத்துக்கு வந்தன. போதைப்பொருள் கடத்தல் வலையமைப்புக்கு ஒத்துழைப்பு நல்கி, விநாயகத்தின் நடவடிக்கைகளுக்கு தகவல்களை வெளிப்படுத்தி வந்த மற்றொரு முக்கிய தலைவர் அகத்தியன் ஆவார். மற்றொருவர் மல்லாவியை சேர்ந்த தீபன். இவர் ஒரு எல்.ரீ.ரீ.ஈ கப்பல் மூலமாக கனடாவுக்கு பயணமானார்.

(தொடரும்)




## ஆங்கில வினா விடைகள்

**1) How do u say "He is a gambler" in tamil?**

1) அவர் ஒரு மேதை 2) அவர் ஒரு சூதாடி
3) அவர் ஒரு நோயாளி 4) அவர் ஒரு கைதி

**2) Select the direction from the list?**

1) தூரம் 2) வலது
3) தெற்கு 4) இடது

**3) How would you write "What was yesterday" in tamil ?**

1) நாளை என்ன கிழமை
2) நேற்று என்ன கிழமை
3) இன்று என்ன கிழமை
4) நேற்று நல்ல நாள்

**4) Select the months?**

1) வைகாசி 2) திங்கள்
3) ஆனி 4) செவ்வாய்

**5) What does the English word "Clouds" translate to Tamil?**

1) வானம் 2) ஆறுகள்
3) வானவில் 4) மேகம்

**6) How to say "The Sky is above our heads" in Tamil ?**

1) வானம் இப்போது இருண்டிருக்கிறது
2) வானத்தில் மேகம் உள்ளது
3) வானம் நமது தலைக்கு மேலே இருக்கிறது
4) வானம் மேலே

**7) What is "Mortgage" in tamil?**

1) அடமானம் 2) கடனாளி
3) நிலுவை 4) வாணிபம்

**8) How do you say "The wolf howls" in tamil ?**

1) ஆடு உறுமுகிறது
2) ஆடு கத்துகிறது
3) ஓநாய் கத்துகிறது
4) ஓநாய் ஊளையிடுகிறது

**9) What is the tamil meaning to "Summer"?**

1) குளிர் காலம் 2) கோடை
3) கடும் புயல் 4) இலையுதிர் காலம்

**10) Select the colors from the list?**

1) ஊதா 2) நீலம்
3) பச்சை 4) சாம்பல்

## அன்பான சிநேகிதனை ஆபத்தில் அறியலாம்

*(கடந்தவாரத் தொடர்ச்சி...)*

ஆபத்தில் உதவாத சிநேகிதத்தை எளிமையாக அறிந்து கொள்வதற்கு எல்லோருக்கும் தெரிந்திருக்க கூடிய கதை ஒன்று உண்டு.

இரு நண்பர்கள் காட்டு வழியில் செல்கின்றனர். கரடியொன்று சற்றுத்தூரத்தில் எதிர்ப்படுகிறது. இருவரில் ஒருவன் மற்றவனைத் தவிர்த்துவிட்டு, அருகாமை மரத்தில் ஏறிப்பதுங்கிக் கொள்கிறான். தனியே நிற்கிறவன், தரை மீது மூச்சடக்கிப் படுத்துவிடுகிறான். கரடியோ அவன் அருகில் வந்து முகம் முழுவதுமாக முகர்ந்து பார்த்துவிட்டு விலகிப் போகிறது. ஆபத்து நீங்கியதும் மரத்தின் மீதிருந்தவன் இறங்கி வந்து மற்றவனைக் கேட்கிறான். கரடி என்ன காதில் சொன்னது? "ஆபத்துக்காலத்தில் உதவாத சினேகிதனை அடியோடு நம்பாதே என்பது பதிலாகக் கிடைக்கிறது.


உலகியலில் ஐய்யன் திருவள்ளுவன் உரைக்காத எதனையும் தேடிக் கண்டுகொள்ள முடியாது. உண்மை நட்பினை உயரிய பண்பினை இவ்வாறும் அவன் புகன்றுள்ளான்.

"உடுக்கை இழந்தவன் கைபோல ஆங்கே
இடுக்கண் களைவதாம் நட்பு"

அதாவது அரையில் தரித்திருக்கும் ஆடை தளரும் போது தாமதமின்றி அதனைப் பற்றி மானத்தைக் காக்கும் கைபோல, துன்பம் நேருகையில் அதனை நீக்க ஓடோடி வந்து உதவுவதே உயர்ந்த நட்பாகும்.

சி.சிவனுஜா
தரம் :- 6 கிளி.வட்டக்கச்சி ம.வி

## சிக்கனமான சிந்தனை




## பொது அறிவு வினா விடைகள்

1) உலகில் உள்ள பறவைகளில் மிகப்பெரியது எது?
1) கோழி 2) தீக்கோழி
3) மயில் 4) மைனா

2) வெறும் கண்களால் பார்க்க முடியாத கோள்?
1) புதன் 2) வியாழன்
3) யுரேனஸ் 4) சனி

3) ஜப்பானின் தலைநகர்?
1) சிக்காக்கோ 2) டெல்லி
3) கனடா 4) டோக்கியோ

4) பாம்பு எதன் மூலம் வாசனையை உணர்கிறது?
1) தோல் 2) கண்
3) நாக்கு 4) மூக்கு

5) திரை அரங்குகளே இல்லாத நாடு?
1) பாகிஸ்தான் 2) பூட்டான்
3) சவுதி அரேபியா 4) சோமாலியா

6) உலகில் மிக நீண்ட நாள் வாழும் மிருகம்?
1) யானை 2) பாம்பு
3) சிங்கம் 4) முதலை

7) எந்த கண்டத்தில் கங்காரு, பனிக்கரடி உள்ளது?
1) கனடா 2) அமெரிக்கா
3) அவுஸ்ரேலியா 4) சீனா

8) நள்ளிரவு சூரியன் உதிக்கும் நாடு ?
1) சுவீடன் 2) பிரான்ஸ்
3) இங்கிலாந்து 4) நோர்வே

9) உலகிலேயே உயரமான சிகரம் ?
1) எவரெஸ்ரட் 2) இமயமலை
3) சகாரா 4) சிவனொலிபாதமலை

10) மரத்தின் கிளைகளிலிருந்து வேர்களைத் தோற்றுவிக்கும் தாவரம் ?
1) அரசமரம் 2) வேம்பு
3) ஆலமரம் 4) வில்வமரம்

## உலகப் புகழ் ஓவியர் – ஓவியம்



**உலகப் புகழ் ஓவியர்**
**மைக்கேல் ஏஞ்சலோ**
(Michelangelo Buonerroti)
**வாழ்ந்த காலம் பொது ஆண்டு**
**1475 -1664**
**வரைந்த ஓவியம்**



## கடலுக்கு அடியில் மனிதன் வாழ முடியுமா?

*(சென்றவாரத் தொடர்ச்சி...)*

**பெரியவர்:** பொறு, பொறு ஆழ்கடல் கலம் இறங்கிய இடத்தில் கடலின் ஆழம் 35,800 அடி. அதாவது கிட்டத்தட்ட 7 மைல். அக்கலத்தில் இருந்தவர்கள் இருவர். ஆழ்கடல் வீரர்கள் அவர்கள். அதுவரை எவரும் கடலில் அவ்வளவு ஆழத்துக்கு இறங்கியது கிடையாது.

**இளவரசன்:** விண்ணில் ரொக்கெட் சர் என்று உயரே போவது போல் ஆழ்கடல் கலம் தண்ணீருக்குள்ளே சென்றிருக்குமோ?

**பெரியவர்:** அதுதான் இல்லை. ஆழ்கடல் கலம் இந்த 7 மைல் உள்ளே இறங்க 4 மணி நேரமும், மேலே வர 9 மணிநேரம் ஆகியது. டிரியெஸ்டி என்ற ஆழ்கடல் கலம் 4 முதல் 6 அங்குலம் வரை களம் கொண்ட உருக்கினால் தயாரிக்கப்பட்டு ஜன்னல்கள் ஐந்தரை அங்குலம் கொண்ட பிளாஸ்டிக்கினால் உருவாகியிருந்தன.

**இளவரசன்:** நீர்மூழ்கிக் கப்பல் போன்றதுதானே ஆழ்கடல் கலம்.

**பெரியவர்:** அதுதான் இல்லை. ஆழ்கடல் கலத்துடன் ஒப்பிட்டால் நீர்மூழ்கிக் கப்பல்கள் எல்லாம் அதிக ஆழம் செல்ல முடியாது. ஒரு மைல் ஆழம் செல்லும் திறன் கொண்ட நீர்மூழ்கிக் கப்பல்கள்கூட சமீபத்தில்தான் உருவாயின.

**இளவரசன்:** ஐய்யா, இந்தத் தகவல்கள் எல்லாம் புதியதாகவும், கேட்பதற்கு வியப்பாகவும் உள்ளன. இந்த முத்துக் குளிப்பவர்கள் என்பவர்கள் தூத்துக்குடியில் எவ்விதக் கலமும் இன்றி நீருக்குள் இறங்குகிறார்களே?

**பெரியவர்:** எவ்விதக் கலமும் இன்றி நீருக்குள் இறங்கி ஆராய்கிறவர்களுக்கு டிரைவர் என ஆங்கிலத்திலும், முக்குளிப்பாளர் என்று தமிழிலும் பெயர். அவர்கள் சுவாசிக்கக் காற்றை அளிக்கும் கருவியான ஸ்கூபா என்பதனை முகத்தில் மாட்டிக் கொண்டுதான் உள்ளே இறங்குகின்றனர். என்னதான் ஸ்கூபாவை மாட்டிக் கொண்டாலும் 300 அடிக்குக் கீழே செல்வது கடினம்.

**இளவரசன்:** அவ்வளவு ஆபத்து என்பது எனக்கு இவ்வளவு நாளும் தெரியாது.



**பெரியவர்:** அது மட்டுமல்ல, 300 அடிக்குக் கீழே இறங்கினால் சுவாசிக்க விசேட வாயு தேவையாதலால் இதனால் ஆக்சிஜன், ஹீலியம், நைட்ரஜன் ஆகிய மூன்றும் கலந்த கலவையினைக் குப்பி வழி அல்லது குழாய் வழி சுவாசிக்கச் செய்கின்றனர். சில வேளைகளில் நியான், ஆக்சிஜன் ஆகிய இரு வாயுக்கள் கலைவையைச் சுவாசிக்கின்றனர்.

**இளவரசன்:** இவ்வாறு ஆழத்தில் இறங்கும்போது அங்கிருந்து பேச முடியுமா?

**பெரியவர்:** கடலில் இவ்வாறு 300 அல்லது 400 அடி ஆழத்தில் இறங்கியவர்கள் அங்கிருந்து தொலைபேசியில் பேசினால் என்ன பேசுகிறார்கள் என்று புரியாது. நீருக்கடியில் விசேட வாயுக் கலவையைச் சுவாசித்துக் கொண்டே பேசும்போது அவர்கள் குரல் வாத்துக் குரல் போல மாறிவிடும். வேறு ஒரு கருவியை வைத்தே அவர்கள் பேச்சைப் புரிந்துகொள்ள முடியும்.

**இளவரசன்:** விண்ணில் பயணித்த யூரிகாகரின் போல கடலில் அதிக ஆழம் இறங்கிய சாதனையாளர்கள் இருக்கிறார்களா?

**பெரியவர்:** 1964ஆம் ஆண்டில் அமெரிக்காவைச் சேர்ந்த ஜோன் லிண்ட் பெர்க் என்பவரும், இராபர்ட் ஸ்டெனுயிட் என்பவரும்தான் 432 அடி ஆழத்தில் 49 மணி நேரம் தங்கிச் சாதனை ஏற்படுத்தினர். கடலடியில் அமைக்கப்பட்ட உலோகக் கூடாரம் ஒன்றில் தங்கி, அவ்வப்போது சுவாசக் கருவியுடன் வெளியே வந்து நீரில் நடமாடினர்.

*(தொடரும்...)*

# சுத்திகரிப்பாளர்கள் அசண்டையீனம்

# சுகாதாரமற்ற நிலையில் விடுதி

யாழ்.போதனா வைத்தியசாலை சுத்திகரிப்புத் தொழிலாளர் விடுதியில் அமைந்துள்ள மலசலகூடம், கைகழுவப் பயன்படுத்தும் தொட்டி ஆகியன சுகாதாரத் தொழிலாளர்களால் சுத்திகரிப்புச் செய்யப்படாமல் புறக்கணிக்கப்பட்டு வருவதாக புகார் தெரிவிக்கப்படுகிறது.

யாழ்.போதனா வைத்தியசாலை ஊழியர்களுக்குள்ளும் பாகுபாடு காட்டப்படுவதாகச் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

அதேவேளை ஆண்பரிசாரகர், சிற்றூழியர் விடுதிகளில் அமைந்துள்ள மலசலகூடங்கள், தொட்டிகள் துப்புரவு செய்யப்படுவதில் மேலதிகாரிகள் சிரத்தை எடுத்துவருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது. சுத்தி கரிப்பு ஊழியர் விடுதியில் மேற்படி வேலைகள் நடைபெறுகிறதா என்பதைக்கண்டும் காணாமல் மேலதிகாரிகள் இருந்து வருவதால் சுத்திகரிப்புத் தொழிலாளர் விடுதி தொட்டி பல தினங்களாக கழுவப்படாமல் இருப்பதால் துர்நாற்றம் வீசுமளவுக்கு நிலைமை மோசமாகி உள்ளதாகவும் தொழிலாளர்களால் விசனம் தெரிவிக்கப்படுகிறது.

மேற்படி விடயத்தில் தங்களுக்கு நியாயமான தீர்வு கிடைக்க வேண்டுமெனவும் சுத்திகரிப்பு தொழிலாளர் சார்பாக சம்பந்தப்பட்ட உயர் அதிகாரிகளிடம் இருந்து எதிர்பார்க்கப்படுவதாகவும் அவர்களால் தெரிவிக்கப்படுகிறது. (68)

# கூட்டுறவுதினத்தை முன்னிட்டு மாணவரிடையே போட்டிகள்

(யாழ்ப்பாணம்)

92 ஆவது சர்வதேச கூட்டுறவு தினவிழாவை முன்னிட்டு வட மாகாண கூட்டுறவு அபிவிருத்தி திணைக்களம் ஓவியப் போட்டியை நடாத்தவுள்ளது.

ஆறு பிரிவாக நடாத்தப்படவுள்ள இப்போட்டிக்கான ஆக்கங்களை பாடசாலை அதிபரின் சிபார்சுடன் அனுப்பி வைக்குமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

இப்போட்டியில் தரம் 1 முதல் 3 வரை கூட்டுறவில் கூடி உழைத்தல தரம் 4,5 இற்கு கூட்டுறவு ஒற்றுமையே உயர்வு தரம் 6,7 இற்கு கூட்டுறவு ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு, தரம் 8,9 இற்கு கூட்டுறவில் விடாமுயற்சி வெற்றி தரும். தரம் 10,11 இற்கு கூட்டுறவில் புரிந்துணர்வும் பரஸ்பரமும், உயர்தரத்திற்கு கூட்டுறவில் சிறுதுளி பெருவெள்ளம் ஆகிய தலைப்புக்களில் சித்திரம் வரைதல் வேண்டும்.

சித்திரம் ஏ-3 அளவுத்தாளில் எவ்வகை வர்ணத்தையும் பயன்படுத்தி வரையமுடியும்.

ஆக்கங்களை எதிர்வரும் 15 ஆம் திகதிக்கு முன்னர் கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளர் (வ.மா) முதியோர் இல்லவளாகம் கண்டிவீதி கைதடி,யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு அனுப்பி வைக்குமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

# கூட்டுறவு உயர்பிரிவுக்கான பயிற்சி நெறி ஆரம்பம்

கூட்டுறவுப் பயிற்சிக் கல்லூரியால் மேற்கொள்ளப்பட்டு வரும் கூட்டுறவு நிறுவனங்களில் பணியாற்றும் பணியாளர்களுக்கும் தனிப்பட்டவர்களுக்குமான கூட்டுறவு உயர்பிரிவு பயிற்சிநெறி சாதாரணதரப்பயிற்சிநெறி ஆகியவற்றில் இந்த ஆண்டு கூட்டுறவு உயர்பிரிவுக்கான பயிற்சி நெறி கடந்த ஏப்ரல் மாதம் முதல் யாழ்.மாவட்டக் கூட்டுறவுச் சபையில் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இப்பயிற்சிநெறியை கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் வீ.கே அருந்தவநாதன் ஆரம்பித்து வைத்தார். பத்து [illegible]ங்களைக்கொண்ட இப்பயிற்சிநெறியில் கூட்டுற வுச்சங்கப் [illegible]யாளர்களும் க.பொ.த(உ/த) சித்தியடைந்த வெளிவாரி மாண[illegible]களும் பயிற்சி பெற்று வருகின்றனர்.

இப்பயிற்சியில் சித்திபெறும் வெளிவாரி மாணவர்களுக்கு உடனடியாக கூட்டுறவு நிறுவனங்களில் வேலைபெற்றுக் கொள்ளும் வாய்ப்பு மிக அதிகமாக உள்ளது எனத்தெரிவிக்கப்பட்டுள்ளது.

# வருடாந்த பொதுக்கூட்டம்

கிளிநொச்சி மகாதேவஆச்சிரம வருடாந்த பொதுக்கூட்டம் எதிர்வரும் 7 ஆம் திகதி சனிக்கிழமை பிற்பகல் 3.00 மணிக்கு குருபீடாதிபதி ஸ்ரீமத் கணேஷானந்த மகாதேவா தலைமையில் ஆச்சிரம மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

ஆச்சிரம வளர்ச்சி பற்றிய கருத்துரைகள் இடம்பெறுவதோடு நடப்பு வருட புதிய நிர்வாகசபை உறுப்பினர் தெரிவும் இடம்பெறவுள்ளது.

ஆச்சிரம நலன் விரும்பிகள், அங்கத்தவர்கள்,அடியார்கள் அனைவரையும் இக்கூட்டத்தில் கலந்து கொள்ளுமாறு குருபீடாதிபதி க்ணேஷானந்த மகாதேவா வேண்டுகோள் விடுத்துள்ளார். (10)

# இலத்திரனியல் கழிவு சேகரிக்கும் பணி


இலங்கை மத்திய சுற்றாடல் அதிகார சபையின் ஒழுங்கமைப்பில் முல்லைத்தீவு மாவட்டத்திலுள்ள நிறுவனங்கள் மற்றும் பொதுமக்கள் பாவனை செய்து அகற்றிய இலத்திரனியல கழிவுகளைச் சேகரிக்கும் நடவடிக்கை கரைதுறைப்பற்று பிரதேச சபை வளாகத்தில் கடந்த வியாழக்கிழமை இடம் பெற்றது.

தேசிய மின் மற்றும் இலத்திரனியல் கழிவு முகாமைத்துவ வாரம் கடந்த 26ஆம் திகதி முதல கடைபிடிக்கப்பட்டு வருகின்றது.

இதன் ஒரு நிகழ்வாகவே இந்த இலத்திரனியல் கழிவு சேகரிக்கும் நிகழ்வு இடம்பெற்றது.

இந்நிகழ்வில் முல்லைத்தீவு மாவட்ட அரசாங்க அதிபர் நா.வேதநாயகம், இலங்கை மத்திய சுற்றாடல் அதிகார சபையின் கிளிநொச்சி முல்லைத்தீவு உதவிப் பணிப்பாளர் துரைஜயா சுபோகரன் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர்.(90)

# சாதனை பெற்ற கலைஞர்களுக்கு விருது வழங்கிக் கௌரவிப்பு



(பொலிகண்டி)

பொலிகண்டி மக்கள் படிப்பகத்தினரால் பொலிகண்டி கிராமத்திலிருந்து பல்வேறு துறைகளில் சாதனைகளைப் பெற்று பெருமையை நிலை நாட்டிக் கொண்டிருப்பவர்களுக்கு கல்வி அறிவு கலை போன்ற சுடர் விருதுகள் வழங்கிக் கௌரவிக்கப்பட்டதுடன் கிராமத்தில் முன்னுதாரணமாக விளங்கிய முதியவர்களுககான கௌரவிப்பும் வழங்கப்பட்டுள்ளது.

பொலிகண்டி மக்கள் படிப்பகத்தின் முன்பள்ளி 2014 ஆம் ஆண்டுக்கான விளையாட்டுப் போட்டி கடந்த சனிக்கிழமை ஆலடிச் சந்திக்கருகா மையிலுள்ள மைதானத்தில் படிப்பகத்தலைவர் சி.குலவீரசிங்கம் தலைமையில் சிறப்பாக நடைபெற்றுள்ளது.

இதன்போதே மேற்படி கௌரவிப்பிற் கென அழைக்கப்பட்டவர்கள் விருந்தினர்களுடன் மாலை அணிவித்து படிப்பக முன்றலிலிருந்து மைதானத்துக்கு அழைத்து வரப்பட்டு சிறார்களின விளையாட்டு நிகழ்வுகள ஆரம்பமாகின. பின்னர் பரிசளிப்பு வைபவம் இடம்பெற்றபோதே இவர்களுக்கான கௌரவிப்பு விருதுகள் வழஙகப்படடன.

இதில் கல்விக்கான விருதில் 2013 ஆம் ஆண்டு உயர்கல்வியை பெற்ற நவரட்ணசாமி சங்கீதாவுக்கு கல்விச்சுடர் எனும் விருதும் 2013 ஆம ஆண்டு புலமை ப்ரிசில் பரீட்சையில் சிறப்புப் புள்ளியைப்பெற்ற அரிச்சந்திரன் கௌசலா மற்றும் திலகநாதன் ஜனனி ஆகியோருக்கு புலமை சுடர் எனும் விருதும் வழங்கப்பட்டிருந்ததுடன் அறிவுக்கான விருதில் 2012,2013 ஆம் ஆண்டுகளில் நடைபெற்ற அரச நாடக விழாவில் தேசிய மட்டத்திற்கு தெரிவாகி வெற்றி பெற்று மூன்று உயர்விருதுகளை தனதாக்கி கொண்ட யாழ். தேசிய கல்வியற்கல்லூரியின் விரிவுரையாளர கைலைநாதன் திலகநாதனுக்கு அறிவுச்சுடர் எனும் விருது வழங்கிக் கௌரவிக்கப்பட்டது. மேலும் கலைக்கான விருதினை 2014 ஆம் ஆண்டுக்கான தேசத்தின் மகுடம் கண்காட்சியை முன்னிட்டு தேசிய மட்டத்தில் நடாத்தப்பட்ட பாரம்பரிய கலைகளுக்கான போட்டியில் தோல் வாத்தியத்தில் முதலிடம் பெற்று ஜனாதிபதி விருதிணையும் பெற்ற பொலிகை மறவர கலை பண்பாட்டு மையத்தினைச் சேர்ந்த தில்லையம்பலம் தவராசா தலைமையிலான கந்தசாமி முருகதாஸ், மகாலிங்கம் ஜீவ்ரஞ்சன் தர்மகுலசிங்கம் நரேந்திரன் உள்ளிட்ட குழுவினருக்கு பொதுக் கலைச்சுடர் எனும விருதும் வழங்கப்பட்டது.

மேலும் தேசத்தின் மகுடம் தனிநபருக்கான கவிதைப் போட்டியில் முதலிடம் பெற்ற கந்தசாமி முருகதாஸ் ஜசிந்துதாஸன் தனிநபருக்கான கிராமியப்பாடலில் முதலிடமும் றபான வாத்தியப்பாடலில் இரண்டாமிடமும் பெற்ற தில்லையம்பலம் தவராசா தனித்தனி கலைச்சுடர விருதும வழங்கிக் கௌரவிக்கப்பட்டது.

அத்துடன பொலிகணடிக கிராமத்தில் முன்னுதாரணமாக விளங்கி முதுமை பெற்றுள்ள அருணாசலம் வேலும் மயிலும் மற்றும் மரியாம்பிள்ளை ஞானசீலி, செல்லக்கண்டு அம் மாஸ, ஆகியோரும் கௌரவிக்கப்பட்டிருந்தனர்.

மேற்படி கௌரவ விருதுகளினை விழாவில் கலந்து கொண்டிருந்த பிரதம விருந்தினர், சிறப்பு விருந்தினர், கௌரவ விருந்தினர்களினால் மாலை பதக்கம் அணிவித்து நினைவு சின்னங்களும் வழங்கிக கௌரவிக்கப்பட்டது. (116)





கொமர்ஷல் வங்கியின் அருணலு திட்டத்தின் மூலம் தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த 37 மாணவர்களுக்கு பரிசில்கள் வழங்கும் நிகழ்வு கடந்த சனிக்கிழமை நடைபெற்றது. இதில் கொமர்ஷல் வங்கியின் யாழ். கிளையின் வங்கி முகாமையாளர் தர்மலிங்கம் தேவராஜன் மாணவனுக்கு பரிசில் வழங்குவதையும் பரிசு பெற்ற மாணவர்களுடன் விருந்தினர்கள் அமர்ந்திருப்பதையும் காணலாம். (25)

# இலங்கையின் அரசியல் ஸ்திரத்தன்மை அச்சுறுத்தலாக இருக்கிறார் மோடி

## என்கிறார் விமல்

(கொழும்பு)

இந்தியாவின் புதிய பிரதமர் நரேந்திர மோடி இலங்கையின் அரசியல் ஸ்திரத் தன்மைக்கு ஒரு அச்சுறுத்தல் என அமைச்சர் விமல் வீரவன்ச தெரிவித்துள்ளார்.

மோடியும் அவரது புதிய அரசாங்கமும் 13 ஆவது அரசியல் அமைப்புத் திருத்தச் சட்டத்தை முழுமையாக அமுல்படுத்த வேண்டும் என அழுத்தம் கொடுத்துள்ளதுடன் இந்தப் பிரச்சினை தொடர்பில் இலங்கைக்கு அழுத்தங்களை பிரயோகித்து வருவதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.


பொரளை எல்விட்டிகல தொடர்மாடியில் நடைபெற்ற நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அமைச்சர் விமல் வீரவன்ஸ இவ்வாறு தெரிவித்துள்ளார்.

மோடி 13 ஆவது அரசியல் அமைப்புத் திருத்தச் சட்டத்திற்கு அப்பால் சென்று தீர்வை வழங்குமாறு கூறியுள்ளார். இதனால் அதனை அரசாங்கம் வழங்க வேண்டும். இல்லாவிட்டால் ஆட்சியை விட்டுச் செல்ல வேண்டிய நிலைமை ஏற்படும். இவற்றினால் மக்கள் மத்தியில் கிளர்ச்சிகள் ஏற்பட்டு அரசாங்கத்திற்கு பாதிப்புகள் ஏற்படும் என எதிர்க்கட்சிகள் எண்ணிக் கொண்டிருக்கின்றன. பிரதமர் மோடி இலங்கை தொடர்பில் சாதகமாக செயற்படுவார் எனச் சிலர் எண்ணுகின்றனர். போர் நடைபெற்ற காலத்தில் இந்தியாவில் பாரதீய ஜனதா ஆட்சியில் இருந்திருந்தால் போருக்கு எதிராக அழுத்தங்கள் அதிகரித்திருக்கும். காங்கிரஸ் ஆட்சியில் இருந்ததால் அழுத்தங்களை சமாளிக்க முடிந்தது.

எவ்வாறாயினும் இலங்கை மக்களே நாட்டுக்கு எது நல்லது என்பதையும் 13 ஆவது அரசியல் அமைப்புத் திருத்தச் சட்டத்தை அமுல்படுத்துவதா இல்லையா என்பதை தீர்மானிப்பார்கள் எனவும் வீரவன்ஸ கூறியுள்ளார்.

இந்தியா உட்பட ஏனைய நாடுகள் இலங்கையில் ஆட்சி மாற்றத்தை எதிர்பார்த்துள்ளன. அடுத்த ஜனாதிபதித் தேர்தலில் இந்த ஆட்சி மாற்றத்தை ஏற்படுத்த அந்த நாடுகள் முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றன.

தென்னாபிரிக்கா ஏற்கனவே



இலங்கைக்கான சிறப்புத் தூதுவர் ஒருவரை நியமித்துள்ளது. இந்தியாவும் இலங்கைக்கான சிறப்புத் தூதுவர் ஒருவரை நியமிக்கவுள்ளது. இந்தியா, தென்னாபிரிக்கா உட்பட ஏனைய நாடுகளை கையாளும் போது உரிய முனைப்புகளுடன் அரசாங்கம் செயற்பட வேண்டும் எனவும் வீரவன்ஸ கூறியுள்ளார்.

# கொள்கை பிரகடனம் வெளியிட ஹெல உறுமய அழைப்பு

(கொழும்பு)

நாட்டின் அனைத்துக் கட்சிகளையும் ஒரே மேடைக்கு அழைத்து கொள்கைப் பிரகடனம் ஒன்றை வெளியிடுவதற்கு ஜாதிக ஹெல உறுமய கவனம் செலுத்தியுள்ளது.

இதன்படி, அரசியலமைப்பு திருத்தத்தில் மேற்கொள்ளப்பட வேண்டிய மாற்றங்கள், சமகால அரசியல் செயற்பாடுகள், சக்தி வலு, விவசாயம், சுகாதாரம் மற்றும் கல்வி போன்ற துறைகள் தொடர்பாக கலந்துரையாடுவதற்கான மாநாடு ஒன்றுக்கு ஜாதிக ஹெல உறுமய அனைத்துக் கட்சிகளுக்கும் அழைப்பு விடுத்துள்ளது. தமது கொள்கை பிரகடன வெளியீட்டின் ஊடாக இதற்கான அழைப்பினை விடுத்துள்ளதாக கட்சியின் தலைவர் அத்துரலீய ரத்ன தேரர் தெரிவித்துள்ளார்.

கட்சி பேதமின்றி அனைவருக்கும் அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. ஆளும் கட்சியில் அங்கம் வகிக்கும் பங்காளிக் கட்சிகள் அனைத்திற்கும் திறந்த அழைப்பினை விடுத்துள்ளதாக ரத்ன தேரர் குறிப்பிட்டார்.

இதுதவிர, ஐக்கிய தேசிய கட்சி, ஜே.வி.பி மற்றும் ஜன நாயகக் கட்சி ஆகியவற்றிற்கும் சந்திப்பில் கலந்து கொள்ளுமாறு தாம் அழைப்பு விடுத்துள்ளதாக அவர் தெரிவித்தார்.

# டெங்குநோயை தடுக்க களத்தில் இராணுவத்தினர்

(கொழும்பு)

டெங்கு நோய் பரவுவதைத் தடுக்கும் நடவடிக்கைகளில் இராணுவத்தினரை ஈடுபடுத்தவுள்ளதாக இராணுவத் தளபதி லெப்டினன்ட் ஜெனரல் தயா ரட்நாயக்க தெரிவித்தார்.

புத்தளம் முதல் மேல் மாகாணப் பிரதேசங்களில் இந்த தடுப்பு நடவடிக்கை மேல் மாகாண பாதுகாப்பு படைத் தளபதி மேஜர் ஜெனரல் யூ.ஏ.பி மெதிவலயின் மேற்பார்வையில் நேற்று முதல் முன்னெடுக்கப்படுவதாக அவர் கூறினார். பிரதேச பொதுச் சுகாதார அதிகாரிகளுடன் இராணுவத்தினர் இணைந்து நுளம்புகள் பெருகும் பிரதேசங்களில் ஆய்வுகளை மேற்கொள்வர்.

அதன் அடிப்படையில்



நோய்த்தடுப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்றும் அவர் கூறினார்.

டெங்கு நோய்த் தடுப்பு நடவடிக்கைகளுக்கு ஒத்துழைப்பு வழங்குமாறு சகல பாதுகாப்பு படைத் தலைமையகங்களுக்கும் இராணுவத் தளபதி உத்தரவு பிறப்பித்துள்ளார்.

## விபத்தில் மூவர் மரணம்

(கொழும்பு)

அரலகங்வில பகுதியில் நேற்றுக் காலை மரமொன்றுடன் லொறியொன்று மோதி விபத்திற்குள்ளானதில் 03 பேர் மரணமடைந்துள்ளதுடன், 11 பேர் காயமடைந்துள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இவ்விபத்தில் காயமடைந்தவர்கள் பொலனறுவை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாகவும் பொலிஸார் கூறினர்.

# மீட்புப் பணிகளில் ஹெலி கொப்டர்கள்



கடும் மழையுடன் கூடிய வானிலையால் ஏற்பட்ட அனர்த்தங்களில் சிக்கியுள்ளவர்களை மீட்கும் பணிகளுக்காக இரண்டு ஹெலிகொப்டர்களை களுத்துறை பகுதிக்கு அனுப்பிவைத்துள்ளதாக விமானப் படை அறிவித்துள்ளது.

பெல் 412 மற்றும் 212 ஆகிய ரகங்களைச் சேர்ந்த இரண்டு ஹெலிகொப்டர்களே அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக விமானப் படையின் பேச்சாளர் வின்ங் கொமான்டர் கிஹான் செனெவிரத்ன தெரிவித்தார்.

மீட்புப் பணிகளில் ஈடுபடுத்துவதற்காக மேலும் சில கடற்படையினரையும் தயார் நிலையில் வைத்துள்ளதாக கடற்படையின் பேச்சாளர் கொமாண்டர் கோசல வர்ணகுலசூரிய தெரிவித்தார்.

# தாம் வெளியிட்ட கருத்துகளுக்கு சேறு பூசுகின்றது அரசு

## ரணில் குற்றச்சாட்டு

(கொழும்பு)

கல்வியமைச்சிற்கான நிதியொதுக்கீடுகள் மட்டுப்படுத்தப்பட்டமை தொடர்பில் தாம் வெளியிட்ட கருத்துக்களுக்கு அரசாங்கம் சேறு பூசி வருவதாக எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க குற்றம் சுமத்தியுள்ளார்.

மொனராகலையில் நேற்று முன்தினம் இடம்பெற்ற செய்தியாளர சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றிய அவர், சர்வதேச நாணய நிதியத்துடன் செலவின கட்டுப்பாட்டு உடனபடிக்கையில் அரசாங்கம் கைச்சாத்திட்டமையே இதற் கான காரணம் என்று குறிப்பிட்டார்.


அரசாங்கத்தின் வரவு செலவுத திட்டத்தில் கல்விக்கான நிதியொதுக்கீட்டை நீக்கி, பொது மக்களின் வரவு செலவு திட்டத்தில் புகுத்துவதற்கு முயற்சிக்கப்பட்டுள்ளது.

இலவசக் கல்வியை பலமிழக்கச் செய்வதே இதன் நோக்க மாகும்.

தனது பேச்சுக்களுக்கு சேறுபூசவேண்டிய தேவையில்லை என்று குறிப்பிட்ட அவர், பாதிக்கப்பட்ட மாணவர்கள் மீள்வதற்கான வாய்ப்புகள் பற்றியே தாம் பேசியதாக தெரிவித்தார்.

தேசத்துரோகி என்றும், புலி என்றும் தன் மீது சேறுபூசப்பட்டாலும் இலவசக் கல்வியை பாதுகாக்க முயற்சி எடுக்கப்படும் என்று எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க குறிப்பிட்டார். இந்தநிலையில், நேற்று முன்தினம் அம்பலாங்கொடையில் இடம்பெற்ற நிகழ்வில் உரையாற்றிய அனர்த்த முகாமைத் துவ அமைச்சர் மகிந்த அமரவீர, சர்வதேச நாணய நிதியம் தொடர்பான நிலைப்பாட்டை வெளியிட்டார்.

கிராமத்து பாடசாலைகள் தற்போது கொழும்பில் உள்ள முன்னணி பாடசாலைகளை விட முன்னேற்றமடைந்துள்ளதாக அவர் தெரிவித்தார். சர்வதேச நாணய நிதியத்துடன் ஒப்பந்தம் மேற்கொண்டு அரசாங்கம் கல்விக்கான நிதியைக் குறைத்து வருவதாக எதிர்க்கட்சித் தலை



வர் குற்றம்சுமத்துகிறார்.

ஆனால், இந்த அரசாங்கம் பிற நாட்டுக்கோ, சர்வதேச நாணய நிதியத்திற்கோ கட்டுப்பட்டு செயற்படவில்லை என்று அனர்த்த முகாமைத்துவ அமைச்சர் தெரிவித்தார்.

# தொழிற்சங்க தலைவர்களுக்கு கோட்டை நீதிமன்றம் பிணை

நீதிமன்ற உத்தரவை மீறி, கடந்த மே முதலாம் திகதி கொழும்பு, ஹைட்பார்க் மைதானத்தை நோக்கி ஊர்வலம் சென்றார்கள் என்று குற்றஞ்சாட்டப்பட்ட தொழிற்சங்கங்களின் தலைவர்கள் மூவரை தலா 5 இலட்சம் ரூபா பெறுமதியான சரீரப் பிணைகளில் செல்ல கொழும்பு, கோட்டை நீதவான் நீதிமன்றம் இன்று உத்தரவிட்டது.

இலங்கை ஆசிரியர் சங்கத்தின் செயலாளர் ஜோசப் ஸ்டாலின், அரச தாதியர் உத்தியோகஸ்தர் சங்கத்தின் தலைவர் சமன் ரத்னப்பிரிய மற்றும் தொழிற்சங்க இணைப்பாளரான ஆர்.டீ.சிறிசேன ஆகியோரையே பிணையில் செல்ல கோட்டை நீதவான் திலன கமகே அனுமதியளித்தார்.

இதேவேளை, நீதிமன்ற உத்தரவை மீறுபவர்களுக்கு எதிராக கடுமையான சட்ட நடவடிக்கை எடுக்குமாறு பொலிஸாருக்கு நீதவான் அறிவித்தல் விடுத்தார்.

## விசேட வேலைத்திட்டம்

அதிக மழை காரணமாக பாதிக்கப்பட்ட களுத்துறை மாவட்ட மக்களுக்கு உதவுவதற்காக விஷேட வேலைத்திட்டம் ஒன்று முப்படையினரால் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இதன்படி பெலவத்தை, மதுகம, பாலிந்தநுவர, அகலவத்தை, வெலிபென்ன, பவருல்ல ஆகிய பிரதேசங்களில் இந்த வேலைத்திட்டம் மேற்கொள்ளப்படுவதாக இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் ருவன் வணிகசூரிய குறிப்பிட்டுள்ளார்.

# நிவாரணம் வழங்குமாறு ஐ.தே.க. கோரிக்கை



(கொழும்பு)

சீரற்ற காலநிலையுடன் ஏற்பட்டுள்ள வெள்ளப்பெருக்கு காரணமாக பாதிப்புக்கு உள்ளான மக்களுக்கு விரைவில் நிவாரணம் வழங்க அரசாங்கம் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என ஐக்கிய தேசியக் கட்சி கோரிக்கை விடுத்துள்ளது.

கட்சியின் ஊடகப் பேச்சாளர் கயந்த கருணாதிலக்க இந்தக் கோரிக்கையை விடுத்துள்ளார்.

கொழும்பில் நேற்று இடம் பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

28. மைதானம் ஒன்றின் ஒரு நிரையில் சிவப்பு, மஞ்சள், நீலம் ஆகிய நிறங்களையுடைய கொடிகள் பறக்கவிடப்பட்டிருந்தன. சிவப்பு நிறத்தை அடுத்து மஞ்சள் நிறமும், மஞ்சள் நிறத்தை அடுத்து நீல நிறமும் என்ற ஒழுங்கில் இவை பறக்க விடப்பட்டிருப்பதால் 25 ஆவதாகப் பறக்க விடப்பட்ட கொடியின் நிறம் யாது?
(1) சிவப்பு (2) மஞ்சள் (3) நீலம்

29. ஐம்பதாவது ஆண்டு நிறைவின் போது கொண்டாடப்படும் விழா,
(1) பொன் விழா (2) பவள விழா (3) மணி விழா

30. ஒரு வரிசையில் குமார் 14ஆவது ஆளாக நின்றான். அவனுக்குப் பின்னால் 9 பேர் நின்றனர் எனில், அவ்வரிசையில் நின்றவர்களின் எண்ணிக்கை,
(1) 21 (2) 23 (3)25

31. "பாலைப் போல் நிலவு வானில் பவனி வரப்போகுது" இப் பாடலில் இடம்பெற்றுள்ள உவமானம் யாது?
(1)நிலவு வானில் (2) பால் (3) பவனி வரப்போகுது

32. "குமரன்" என்னும் பெயரை □ ⊠ ⊟ ◫ என்று எழுதினால், விதுரன் என்னும் பெயரை எவ்வாறு எழுதலாம்?
(1) ⊠ ⊡ ⊟ ◫ (2) ⊡ ⧅ ⊟ ◫ (3) ⊡ ⧅ ◫ ⊟

33. எமது நாட்டின் மிருகக் காட்சிச்சாலை அமைந்துள்ள இடம் எது?
(1) கண்டி (2) நுவரெலியா (3) தெகிவளை

34. கீழ்வருவனவற்றுள் நரம்புக்கருவி அல்லாதது?
(1) மேளம் (2) வீணை (3) யாழ்

**பின்வரும் வினாக்கள் ஒவ்வொன்றிலும் ஆரம்பம் முதல் இறுதி வரையான 5 நிலைகளைப் படிமுறையில் காட்டும் ஒரு விடையுள்ளது. அவ்விடையினைத் தெரிந்து அதன் கீழ்க் கோடிடுக.**

35.
(1) காய், பூ, மரம், கன்று, விதை
(2) விதை, கன்று, மரம், பூ, காய்
(3) காய், விதை, மரம், பூ, கன்று

36.
(1) காலை, மத்தியானம், மாலை, இரவு, நள்ளிரவு
(2) மத்தியானம், மாலை, காலை, இரவு, நள்ளிரவு
(3) இரவு, நள்ளிரவு, காலை, மாலை, மத்தியானம்

37. ஒலிம்பிக் விளையாட்டு எத்தனை வருடங்களுக்கு ஒரு முறை நடைபெறும்
(1) 4 (2) 8 (3) 3

38. டெங்கு நோயை ஏற்படுத்தும் நுளம்பு,
(1) அனோப்பிலிஸ் (2) கியூலெக்ஸ் (3) ஈடிஸ் வகை

39. சிறிய ஒலிகளைக் கேட்கும் தன்மையுள்ள பிராணி எது?
(1) மாடு (2) ஆடு (3) முயல்

40. இலவசக் கல்வியின் தந்தை எனப் போற்றப்படுபவர்?
(1) சி.டபிள்யு.டபிள்யு. கன்னங்கரா
(2) ஆதர்.சி. கிளாக்
(3) கலாநிதி ஆனந்தகுமாரசாமி

இவ் வினாத்தாளுக்குரிய விடைகள் எதிர்வரும் சனிக்கிழமை வெளியாகும்



# தரம் - 5 புலமைப் பரிசில் பரீட்சை - 2014

பகுதி - I
1 மணி 15 நிமி

# கல்வி முரசு



**சரியான விடையின் கீழ்க் கோடிடுக.**



84 88 92 □ 100

01. எண் கோல ஒழுங்கில் அமைந்த மரங்களின் வரிசையில் நான்காவது மரத்திற்கு வரவேண்டிய எண் யாது?
(1) 87 (2) 98 (3) 96

**மாணவர்கள் நான்குபேர் கிரிக்கெட் விளையாட்டில் பெற்ற ஓட்டங்கள் பின்வருமாறு**

| | |
|---|---|
| மோகன | 190 |
| கமால் | 175 |
| அன்வர் | 185 |
| குமார் | 200 |


02. இதில் முதலாம் இடத்தினைப் பெற்ற மாணவரதும் மூன்றாம் இடத்தினைப் பெற்ற மாணவரதும் மொத்த ஓட்டங்கள்
(1) 385 (2) 390 (3) 375

03. கீழே தரப்பட்டுள்ள கோலத்தை அவதானித்து ? அடையாளம் இடப்பட்டுள்ள இடத்திற்கு பொருத்தமான எண்ணை எழுதுக.

```
[3] → [2] → [5]
 |     |     |
[5] → [4] → [9]
 |     |     |
[8] → [6] → [?]
```

(1) 12 (2) 14 (3) 16

04. இந்தக் கடிகாரமுகம் காட்டும் நேரம் ஒரு நாளின் எந்தச் சந்தர்ப்பமாக இருக்கலாம் எனக் காண்க.




(1) பகல் நேரத்தில் அல்லது இரவு நேரத்தில் ஒரு சந்தர்ப்பமாகும்.
(2) காலை நேரத்தில் அல்லது மாலை நேரத்தில் ஒரு சந்தர்ப்பமாகும்.
(3) இரவு நேரத்தில் அல்லது காலை நேரத்தில் ஒரு சந்தர்ப்பமாகும்.

**ஒரு பிள்ளையிடம் உள்ள மாபிள்களின் விபரம் பின்வருமாறு.**

பச்சை நிற மாபிள்கள் 8, பச்சை நிறமல்லாத மாபிள்கள் 10, சிவப்பு நிற மாபிள்கள் 5

05. அதன்படி, அவரிடமுள்ள சிவப்பு நிறமல்லாத மாபிள்களின் எண்ணிக்கை.
(1) 15 (2) 18 (3) 13

**கீழே காணப்படும் உருவின்படி வினவப்பட்டுள்ள ஒவ்வோர் வினாவுக்கும் பொருத்தமான விடையைத் தந்துள்ள விடைகளில் இருந்து தெரிந்து அதன் கீழ்க் கீறிடுக.**




06. உருவின்படி இங்குள்ள ரோஜாப் பூக்களின் எண்ணிக்கை யாது?
(1) 7 (2) 2 (3) 11

07. உருவின்படி ரோஜாப்பூக்கள் அல்லாத பூக்களின் எண்ணிக்கை யாது?
(1) 2 (2) 5 (3) 4


08. மிகக் குறைந்த எண்ணிக்கையில் உள்ளவை.
(1) பூக்கள் (2) சிவப்பு ரோஜாப்பூக்கள் (3) ரோஜாப்பூக்கள்

09. தோட்டமொன்றின் நீளம் 10 மீற்றர். அகலம் நீளத்திலும் அரைவாசியாகும். தோட்டத்தின் பரப்பளவு யாது?
(1) $20m^2$ (2) $50m^2$ (3) $40m^2$


10. 2008ம் ஆண்டு லீப் வருடம் ஆகும். இதன்படி அடுத்து வரும் லீப் வருடம் எது?
(1) 2016 (2) 2012 (3) 2004

**பின்வரும் வினாக்கள் ஒவ்வொன்றிலும் தரப்பட்டுள்ள கோலத்திற்கு ஏற்ப வெற்றிடமாயுள்ள இடத்திற்குப் பொருத்தமான விடையைத் தெரிந்து அதன் கீழ் கீறிடுக.**


11.




12.




13. பின்வரும் எண்கோலத்தை அவதானித்து வெற்றிடத்துக்குப் பொருத்தமான பெறுமானத்தை தெரிவு செய்து அதன் கீழ் கோடிடுக.




(1) 39 (2) 42 (3) 46



14. ஒரு பெட்டியில் 2 டசின் பென்சில்கள் இருந்தன. இவற்றில் 3/4 பங்கு பென்சில்களை விற்றால் மிகுதியா இருக்கும் பென்சில்கள் எத்தனை?
(1) 6 (2) 24 (3) 12

15. 10 என்னும் எண்ணை உரோமன் இலக்கத்தில் அமைக்க 2தீக்குச்சிகள் தேவை. 4 என்னும் எண்ணை உரோமன் இலக்கத்தில் அமைக்கத் தேவையான தீக்குச்சிகளின் எண்ணிக்கை எத்தனை?
(1) 2 (2) 3 (3) 4

16. தமிழ் நெடுங்கணக்கிலுள்ள உயிரெழுத்துக்களின் எண்ணிக்கை யாது?
(1) 13 (2) 12 (3) 18

**கீழே தரப்பட்டுள்ள விபரங்களின்படி ஒவ்வோர் வினாவுக்கும் பொருத்தமான விடையைத் தெரிந்து அதன் கீழ் கோடிடுக.**

*நீலா, கமலாவின் தங்கையாவார். கமலா, சித்திராவின் தங்கையாவார். நீலா ரமணியின் அக்காவாவார்*

17. மிக இளைய சகோதரி யார்?
(1) நீலா (2) ரமணி (3) கூற முடியாது

18. எல்லோரையும் விட வயதில் மூத்த சகோதரி யார்?
(1) சித்திரா (2) கமலா (3) நீலா

19. நீலாவுக்கு எத்தனை அக்கா உள்ளனர்?
(1) மூன்று (2) ஒன்று (3) இரண்டு

**கீழே தரப்பட்டுள்ளவற்றிற்கு பொருத்தமான பழமொழியைத் தெரிவு செய்து கோடிடுக.**

20. எதையும் சரியான திட்டத்துடன் எதிர்காலம் கருதி செய்ய வேண்டும்
(1) இளமையில் சோம்பல் முதுமையில் வறுமை
(2) வெள்ளம் வருமுன் அணைகட்ட வேண்டும்
(3) ஐந்தில் வளையாதது ஐம்பதில் வளையுமா

21. சிறுவயதில் பழகும் பழக்கம் முதுமை வரை நிலைத்திருக்கும்
(1) இளமையில் கல்வி சிலையில் எழுத்து
(2) தொட்டிற்பழக்கம் சுடுகாடு வரை
(3) விளையும் பயிரை முளையில் தெரியும்


22. பின்வருவனவற்றுள் இரட்டைக் கிழவியாக அமைந்த சொல்
(1) மெல்ல மெல்ல (2) கடகட (3) சீரும் சிறப்பும்

23. நாய்க்கு குட்டி போல யானைக்கு
(1) பேத்தை (2) குட்டி (3) போதகம்

24. பூனைக்கு கடுவன் போல குதிரைக்கு
(1) குண்டு (2) வடவை (3) குட்டி

25. ஒருவரல்லது ஒரு பொருள் தானே தன் கதையைக் கூறுவது
(1) சுயநலவாதி (2) அணிந்துரை (3) சுயசரிதை

26. உருவில் உள்ள சதுரங்களின் எண்ணிக்கை எத்தனை?
(1) 12 (2) 14 (3) 9



**பின்வரும் வினாக்களுக்கான விடையைத் தெரிந்து கீறிடுக.**

27. மகனின் தற்போதைய வயது தந்தையின் வயதின் $1/5$ பங்கு ஆகும். 5 வருடங்களுக்கு முன்னர் மகனின் வயது 5 வருடங்கள் எனின், தந்தையின் தற்போதைய வயது யாது?
(1) 25 வருடங்கள் (2) 30 வருடங்கள் (3) 50 வருடங்கள்



யாழ்.வேலணை மத்திய கல்லூரியில் நிர்மாணிக்கப்பட்ட மகிந்தோதய ஆய்வுகூட திறப்பு விழா நிகழ்வின் போது கராத்தே போட்டியில் தேசிய மட்டத்தில் 3 ஆம் இடம்பெற்ற மாணவிக்கு வடமாகண ஆளுநர் ஜீ.ஏ சந்திரசிறி விருது வழங்குவதையும் இதில் நாடாளுமன்ற உறுப்பினர் சில்வேஸ்திரி அலன்ரின் கலந்துகொண்டிருப்பதையும் மாணவர்களின் நடன நிகழ்வினையும் நிகழ்வில் கலந்துகொண்டவர்களையும் காணலாம். (25)

# மின்சாரம் பெறுகிறது முகமாலை கிராமம்

கடந்தகால யுத்தத்தால் முற்றாக அழிவடைந்த கிளிநொச்சி மாவட்டத்தின் முகமாலை கிராமத்துக்கான மின்சாரம் வழங்குவதற்கான மின்மாற்றி கடந்த மார்ச் மாதம் அமைச்சர் டக்[illegible] தேவானந்தாவினால் தி[illegible] வைக்கப்பட்டது.

அன்றைய தினம் கிராம மக்களினால் கேட்டுக்கொண்டதுக்கு அமைவாக.முகமாலை வடக்கு பகுதியில் தற்காலிக வீடுகளில் குடியேறியுள்ள மக்களுக்கு பாதுகாப்பான மின்னிணைப்பினை செய்து கொள்ள ஆலோசனை வழங்கி வடக்கின் வசந்தத் திட்டம் ஊடாக உடன் வேலைகளை ஆரம்பிக்குமாறு சாவகச்சேரி மின் பொறியியலாளருக்கு ஆலோசனை கூறப்பட்டது.

இதற்கமைவாக பாதுகாப்பான இணைப்பு வேலைகள் யாவும் மக்களால் செய்து முடிக்கப்பட்டு மின்னிணைப்பு பெறுவதற்கான விண்ணப்பங்களும் ஏற்றுக்கொள்ளப்பட்டு நேற்றைய தினம் இக்கிராமத்துக்கு மின்னிணைப்பு வழங்கப்பட்டுள்ளது.

இம்மின்சாரம் விரைவாக கிடைக்க உதவிய அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா மாவட்ட ஒருங்கிணைப்பு குழுத்தலைவர் நாடாளுமன்ற உறுப்பினர் முருகேசு சந்திரகுமார். சாவகச்சேரி மின்பொறியியலாளர். பிரதேச செயலர்.மற்றும் அனைவருக்கும் கிராம மக்கள் தமது மன மகிழ்ச்சியினையும் நன்றியினையும் தெரிவிக்கின்றனர்.

# கொழும்பு சமுர்த்தி பிரிவுக்கு 300 மில்லியன் ஒதுக்கீடு

(கொழும்பு)

[illegible]விநெகும் திட்டத்தின் கீழ் கொழும்பு மாவட்ட செயலகத்தின் சமுர்த்தி பிரிவிற்கு 300 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது என்று கொழும்பு மாவட்ட உதவி சமுர்த்தி ஆணையாளர் ஹர்ஷினி சிறினாம தெரிவித்தார்.

கொழும்பு மாவட்ட மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தும் நோக்கில் இந்நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.


ஒரு தேர்தல் ஆசன அபிவிருத்திக்கு தலா 20 மில்லியன் ரூபா வீதம் 15 தேர்தல் ஆசனங்களுக்கு நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

இந்நிதியினூடாக விவசாய நடவடிக்கைகள்- கால்நடை வளர்ப்பு- மீன்பிடி- விற்பனை சேவை ஆகிய நான்கு துறைகள் அபிவிருத்திச் செய்யப்படவுள்ளன.

கொழும்பு மாவட்டத்தில். நடத்தப்படும் சமுர்த்திச் சங்கம் மற்றும் நடமாடும் சேவையினூடாக மக்களின் தேவைகள் இனங்காணப் படவுள்ளன.

# இலங்கை அரசுடன் பேசித்தான் நாம் தீர்வைப் பெறவேண்டும்

## முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் கே.வி.குகேந்திரன்



1996ஆம் ஆண்டிலிருந்து இன்றுவரை நாம் செய்துவரும் அபிவிருத்திகளை தமிழ்த் தேசியம் பேசி அரசியல் பலம் பெற்றுள்ளவர்கள் ஏன் செய்யாதுள்ளனர் என்ற தெளிவு உங்களுக்கு வரவேண்டும்.

பிரச்சினை களைத் தூக்கிப் பிடித்து குழப்பத்தை ஏற்படுத்தும் அரசியல் நகர்வை செய்யும் இவர்களது தவறான செய்திகளைத்தான் இங்குள்ள ஊடகங்களும் மிகைப்படுத்தி எழுதி மக்களை தவறான வழிக்கு இட்டுச் செல்கின்றன. இந்த செயற்பாடானது மீண்டும் ஒரு அழிவைத்தான் எம்மக்களுக்கு ஏற்படுத்தும். எமக்கான எத்தனையோ தீர்வுகள் கிடைத்த போதும் அத்தனையையும் சுயனலப் போக்கால் தவறவிட்டுவிட்டனர்.

உலக நாடுகள் எந்த தீர்வை முன்வைத்தலும் இலங்கை அரசுடன் பேசித்தான் நாம் தீர்வைப் பெறவேண்டும் என்பது தான் உண்மை என முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும் அமைச்சரின் யாழ்.மாவட்ட ஒருங்கிணைப்பாளருமான கே.வி.குகேந்திரன் தெரிவித்தார்.

நல்லூர் பிரதேச சபைக்குட்பட்ட வாழ்வாதாரம் குறைந்த மக்களின் அபிவிருத்தியை மேம்படுத்துவதற்காக அப் பகுதியில் உள்ள சமுர்த்தி உத்தியோகத்தருடனான சந்திப்பொன்று நல்லூர்ப் பகுதி ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சி அலுவலகத்தில் நடைபெற்றது.

மக்களுக்கு வழங்கப்படும் வாழ்வாதார உதவிகள் யாவும் உரிய பயனாளிகளிடம் சென்றடையாமையால் பல்வேறுபட்ட பிரச்சினைகளுக்கு இப் பகுதி மக்கள் உள்ளாகி வருகின்றமையை நிவர்த்தி செய்யவே அமைச்சரின் யாழ். மாவட்ட ஒருங்கிணைப்பாளரும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான கே.வி.குகேந்திரன் (ஜெகன்) சமுர்த்தி உத்தியோகத்தருடனான சந்திப்பை மேற்கொண்டார். இங்கு அவர் மேலும் கூறுகையில்-

தமிழ்த் தேசிய விதண்டாவாதம்பேசுவது தான் தமிழர் பிரச்சினைக்குத் தீர்வு காணும் சந்தர்ப்பங்கள் எல்லாம் கலைந்து போனதுக்கு காரணமாகின. தேர்தல் காலத்தில் மட்டும் உங்களிடம் வருபவர்கள் நாமல்லர்.

நாம் எந்தச் சந்தர்ப்பத்திலும் உங்களை விட்டுச் சென்றதில்லை ஈழ மக்கள் ஜனநாயக் கட்சியின் எதிர்கால செயற்பாடு யாவும் இனிவரும்காலத்தில் அடிமட்டக் கிராமங்களினூடாகவே செயற்படவுள்ளது. மக்கள் மயப்படுத்தப்பட்ட கட்சியாக எமது கட்சியை மாற்றி அபிவிருத்தியூடான அரசியல்த் தீர்வை நோக்கியதாகவே அமையவுள்ளது.எனவே தொடர்ந்தும் எங்களை ஏமாற்றாது வருங் காலத்தில் எங்களை உங்கள் ஏகபிரதிநிதிகளாக பேரம் பேசக்கூடிய அரசியல்பலத்தை தாருங்கள் -என்றார்.

இச்சந்திப்பின் போது வருங்கால சமூக அபிவிருத்திகள், சமூகபிரச்சினைகள், சமுர்த்தி உத்தியோகத்தர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் போன்ற விடயங்கள் ஆராயப்பட்டன.

வாடமாகாண எதிர்க் கட்சித் தலைவர் தவராசா, அமீன், ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் நல்லூர் பொறுப்பாளர் ரவீந்திரன், கல்விப் பணிப்பாளர் மாணிக்கராசா, நல்லூர்த் தொகுதி சமுர்த்தி உத்தியோகத்தர்கள், கிராம உத்தியோகத்தர்கள் மற்றும் அபிவிருத்திக் குழு உறுப்பினர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

# யாழ்.பல்கலைக்கழகத்தில் மனைப்பொருளியல் கண்காட்சி

(யாழ்ப்பாணம்)

பொதுமக்கள் மற்றும் மாணவர்களிடையே மனைப் பொருளியல் தொடர்பான விளக்கங்களை வழங்கும் வகையில் யாழ்ப்பாண பல்கலைக்கழக மனைப்பொருளியல் பிரிவின் ஏற்பாட்டில், கலைப் பீட கட்டடத் தொகுதியில் கண்காட்சி நடத்தப்படவுள்ளதாக மனைப்பொருளியல் பிரிவின் விரிவுரையாளர் பி.குலராஜசிங்கம் தெரிவித்தார்.

பல்கலைக்கழக மனைப் பொருளியல் பிரிவில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர்கள் சந்திப்பிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தில் மனைப்பொருளியல் என்று 04 வருடக் கற்கைநெறி இருக்கின்றபோதும், அது தொடர்பில் போதிய விளக்கங்கள் மாணவர்களிடையே இல்லாத காரணத்தினால் அதனைக் கற்பதற்கு மாணவர் கள் அதிகம் ஆர்வம் காட்டவில்லை.

யாழ்ப்பாண பல்கலைக்கழக மனைப்பொருளியல் பிரிவில் நிரந்தர விரிவுரையாளராக தானும் தற்காலிக விரிவுரையாளர் ஒருவரும் கடமையாற்றுவதுடன், இங்கு 20 மாணவர்கள் மட்டுமே மனைப் பொருளியல் கற்கைநெறியினை கற்கின்றனர்.அதிலும் 12 மாணவர்கள் முஸ்லிம்கள் ஆவர்.

எமது சமூகத்தில் மனைப் பொருளியல் தொடர்பில் இழிவான ஒரு நோக்கே காணப்படுகின்றது.

குறிப்பாகச் சொன்னால் சமைப்பது எப்படி எனப் படிப்பது என்பார்கள்.

ஆனால், மனைப்பொருளியல் என்பது அதுவல்ல. அது குடும்பப் பொருளாதாரம் என்ற விடயத்தினைச் சார்ந்ததென்பதுடன், அதனைக் கற்பதன் மூலம் மாணவர்கள் சுயதொழில்களில் ஈடுபடவும் அவர்களாக புதிய விடயங்களை ஏற்படுத்திக் கொள்ளவும் முடியும்.

இந்நிலையில் மனைப் பொருளியல் தொடர்பில் சிறந்த விளக்கங்களை அளிக்கும் நோக்குடனும், சமூகத்திற்கு விழிப்புணர்வு ஏற்படுத்த வேண்டும் என்ற நோக்குடனும் இந்தக் கண்காட்சி ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது. (பா)

## வாழ்க வளமுடன்

சிறாரின் பெயர் :- ...................................

முகவரி :- ...................................

பிறந்த ஆண்டு :- ...................................

கூப்பன் ஐந்தும், புகைப்படமும்

...................................

பெற்றோர் கையொப்பம்

# தென்கிழக்காசிய நாடுகளின் அமைதியை சீர்குலைக்கும் சீனா

## — எச்சரிக்கிறது அமெரிக்கா

(சிங்கப்பூர்)

மற்ற ஆசிய நாடுகளின் பாதுகாப்புக்கு அச்சுறுத்தலாக சீனா நடக்கக் கூடாது. தென் கிழக்கு ஆசிய நாடுகளின் அமைதியை சீர்குலைக்க முயற்சிக்கும் அத்துமீறல் நடவடிக்கைகளை சீனா நிறுத்திக் கொள்ள வேண்டும் என்று சீனாவுக்கு முதன் முறையாக அமெரிக்கா பகிரங்க எச்சரிக்கை விடுத்துள்ளது. தெற்காசிய நாடுகளில் சீனா தன் அதிகாரத்தைக்காட்டி, அந்த நாடுகளின் சர்வதேச கடற் பகுதிகளில் அத்துமீறல் நடவடிக்கைகளை செய்து வருகிறது என்ற குற்றச்சாட்டுள்ளது. குறிப்பாக, கிழக்கு, தெற்கு சீனக் கடற்பகுதியில், மற்ற ஆசிய நாடுகளின் கடல் எல்லைக்குள் எண்ணெய், காஸ் வளங்களை ஆக்கிரமிக்க முயற்சி செய்கிறது என்றும் ஜப்பான் உட்பட சில தெற்காசிய நாடுகள் பகிரங்கமாகவே சமீப காலமாக கூறி வருகின்றன.

இந்த நிலையில், சிங்கப்பூரில் ஆசிய நாடுகளின் பாதுகாப்பு மாநாடு நேற்றுமுன்தினம் நடந்தது. இதில் ஜப்பான், சீனா உட்பட தெற்காசிய நாடுகளின் பிரதிநிதிகள் பங்கேற்றனர். அமெரிக்காவின் இராணுவ அமைச்சர் சக் ஹேகல் கலந்து கொண்டார். இவர் பேச்சுத்தான் பலரையும் திகைக்க வைத்துள்ளது.

இக் கூட்டத்தில் அமெரிக்க இராணுவ அமைச்சர் ஹேகல் பேசியதாவது,

தெற்காசியா உட்பட ஆசிய நாடுகளிடையே அமைதி நீடிக்க வேண்டும் நட்புறவு தழைக்க வேண்டும் என்பதிலும் அமெரிக்கா முழு ஒத்துழைப்பு தர உள்ளது. இது சர்வதேச நடைமுறையும் கூட. இந்த நடைமுறைக்கு பங்கம் விளைவிக்கும் எந்த செயலையும், எந்த ஒரு நாடும் செய்ய அமெரிக்கா ஒருபோதும் அனுமதிக்காது. சமீப காலமாக தெற்கு சீனக் கடலில் சீனாவின் அத்துமீறல் அதிகரித்து வருகிறது அதனால், அந்த தென்கிழக்காசிய மண்டலத்தில் உள்ள நாடுகளின் அமைதிக்கு அச்சுறுத்தலாக இருக்கிறது. இதைச் சீனா உணர வேண்டும். அமைதியை நிலைகுலைய வைக்கும் எந்த முயற்சியிலும் சீனா ஈடுபடக் கூடாது. இவ்வாறு ஹேகல் காரசாரமாக பேசினார்.

## குட்டை ஆடை அணியக்கூடாது அதிபருக்கு பாடம் புகட்டிய மாணவி



கனடா நாட்டில் பள்ளிக்கூடத்தில் படித்து வரும் மாணவி ஒருவரை குட்டை ஆடை அணிந்து வந்ததாகக் கூறி வெளியே அனுப்பிய பாடசாலை அதிபருக்கு நல்ல பாடம் புகட்டியுள்ளார்.

ஸ்டாகர் (15) என்ற மாணவி மாண்ட்ரியல் பள்ளியில் 11ஆம் வகுப்பு படித்து வருகிறார். இவர் குட்டை ஆடை அணிந்திருப்பதாகக் கூறி பாடசாலை அதிபர் இவரை வெளியே அனுப்பியுள்ளார்.

இதனால் கோபம் கொண்ட ஸ்டாகர் ஏன் என்று கேள்வி எழுப்புகையில் இது பாடசாலையின் விதிமுறைக்கு அப்பாற்பட்டது எனக் கூறியுள்ளார்.

இதன்னால் ஸ்டாகர் பள்ளி முழுவதும் போஸ்டர்கள் அடித்து ஒட்டியுள்ளார்.

மாணவிகள் அணிவதில் எந்த வித குற்றமும் இல்லை, ஆனால ஆண்கள் பார்ப்பதில் தான் குற்றம் உள்ளது எனக்கூறியுள் ளார்.மேலும் சக மாணவிகளும் இவருக்கு ஆதரவு தெரிவித் துள்ளனர்.

உலகச் செய்திகள்

## சொக்லெட்டில் பன்றிக்கொழும்பு நாடுகளில் பரிசோதனை



(ரியாத்)

பிரபல சொக்லெட் தயாரிப்பு நிறுவனத்தின் சொக்லெட்டுகளில்,பன்றி இறைச்சி கலந்திருக்கலாம் என்ற சந்தேகம், சவுதி அரேபியா, மலேசியா, இந்தோனேசியா போன்ற நாடுகளில், அதிர்ச்சியை ஏற்படுத்தி உள்ளது. பிரிட்டனைச் சேர்ந்த, "காட்பரிஸ்" சொக்லெட் நிறுவனத் தயாரிப்புக்கள், உலகம் முழுவதும் பிரசித்தி பெற்றவை. அந்த சொக்லெட்டில், பன்றி கொழுப்பின் மூலக்கூறுகள் இருப்பதாக எழுந்த சந்தேகத்தை அடுத்து, முஸ்லிம்கள் அதிகம் நிறைந்த மலேசிய நாட்டில், அந்த சாக்லெட் ஆய்வுக்குட்படுத்தப்பட்டது. அது போல், முஸ்லிம்கள் அதிகமுள்ள இந்தோனேசிய நாட்டிலும், ஆய்வுக்குட்படுத்தப்பட்டது. இந்நிலையில், இஸ்லாமிய சட்டங்கள் பின்பற்றப்படும் சவுதி அரேபியாவிலும், அந்த நிறுவன சொக்லெட்டுகளில், பன்றி கொழுப்பு கலந்திருக்கிறதா என, ஆய்வுக்கு உத்தரவிடப்பட்டுள்ளது.

## முதல்வரானார் சந்திரசேகரராவ்

(புதுடில்லி)

நாட்டின், 29ஆவது மாநிலமாக, தெலுங்கானா நேற்று உதயமானது. இதன், முதல் முதல்வராக, டி.ஆர்.எஸ்., கட்சித் தலைவர் சந்திரசேகரராவ், பதவியேற்றார். ஐதராபாத் நிஜாம ஆளுகைக்குட்பட்ட பகுதி யாக இருந்த ஐதராபாத் மாகா ணம், நாடு விடுதலை அடைந் ததும், மொழிவாரி மாநிலங்கள் அமைக்கப்பட்ட போது, ஆந்திராவுடன் இணைக்கப்பட்டது.

இதையடுத்து, கடந்தாண்டு டிசம்பரில், காங்., தலைமையிலான மத்திய அரசு, தெலுங்கானா தனி மாநிலம் அமைக்க ஒப்புதல் அளித்தது. மார்ச் முதல், அங்கு ஜனாதிபதி ஆட்சி அமுல்படுத்தப்பட்டுள்ளது. சமீபத்தில், ஆந்திரா, தெலுங்கானா ஆகிய பகுதிகளில் சட்டசபை தேர்தல்கள் நடந்து முடிந்துள்ளன. தெலுங்கானாவில், மொத்தம் உள்ள, 119 தொகுதிகளில், 63 தொகுதிகளில், டி.ஆர்.எஸ்., வெற்றி பெற்றது. அந்த கட்சித் தலைவர் சந்திரசேகரராவ் தலைமையிலான, டி.ஆர்.எஸ்., அரசு, நேற்று பதவியேற்றது.

முன்னதாக நேற்றுக் காலை தெலுங்கானா முதல் கவர்னராக நரசிம்மன் பதவி ஏற்றுக்கொண்டார்.

தெலுங்கானா மாநிலத்தின் முதல் முதல்வர் என்ற பெருமை, சந்திரசேகரராவுக்கு கிடைத்துள்ளது. நாட்டின், 29ஆவது மாநிலமாக, தெலுங்கானா, முறைப்படி உதயமாகிறது. இதைத்



தொடர்ந்து, அங்கு அமுலில் உள்ள ஜனாதிபதி ஆட்சி, முதல் வாபஸ் பெறுகிறது. தெலுங்கானா அல்லாத ஆந்திர மாநிலத்தில், சந்திரபாபு நாயுடு தலைமையிலான, தெலுங்கு தேசம் கட்சியின் அரசு, ஒரு வாரத்துக்கு பின்பே, பதவியேற்கவுள்ளது.புதிய அரசின் பதவியேற்பு விழா, ஐதராபாத்தில் உள்ள கவர்னர் மாளிகையில், நேற்றுக்காலை, 8:15இற்கு நடந் தது. ஐதராபாத் நகரமே டி.ஆர். எஸ்., கட்சி கொடியின் இளம் சிவப்பு நிறத்தில் ஜொலிக் கிறது.

## இன்றுள்ள....

மேற்படி பொருளாதாரப் பிரச்சினைகளில் இருந்தே சமூகத்தின் கலாசார, பண்பாட்டு அமைதியும், இருப்பும் சிதைவடைந்து, பல்வேறுதர வாழ்க்கை நிலையில் வாழும் சமூகத்தின் பெண்கள், இளைஞர்கள், யுவதிகள், தாய்மார்கள் மத்தியில் விரக்தியையும், வெறுமையையும், உளவியல் பாதிப்புகளையும் ஏற்படுத்துவதாக இருப்பதுடன், தற்கொலை, கொலை, விபசாரம், சிசுக்கொலை, விவாகரத்து, முறையற்ற திருமண உறவுகள், பரஸ்பர அவநம்பிக்கை, பாலியல் துன்புறுத்தல்கள், ஊழல், அதிகார துஷ்பிரயோகம், சட்டம் ஒழுங்கை மதிக்காமை, விழுமியங்களையும், சிறந்த வழிகாட்டல்களையும் முன்வைக்க முடியாமை என எண்ணிலடங்கா சமூகப் பிரச்சினைகளுக்கு இடமளிப்பதாயுள்ளது.

சமூக விடயங்களில் அக்கறை கொள்ளக் கூடிய தரப்பினர் என்ற ஒரு குழாத்தினர் உருவாகி சமூக சீர்திருத்தங்களையும், ஒழுங்கையும் ஏற்படுத்தக்கூடிய வாய்ப்புக்கள் எதுவும் இல்லையென்றே கூற முடியும். சமூகத்தில் மக்களுக்கு வழிகாட்டக்கூடிய கண்ணியம் மிக்க தலைவர்கள் என எவரையும் கௌரவிக்கும் நிலை இல்லாதுள்ளது.

பத்திரிகைகள் தானும் இத்தகைய வழிகாட்டல்களைச் செய்வனவாக இல்லை. பத்திரிகைகளில் செய்திகள், அபிப்பிராயங்கள் வெளியிடப்படும்போது இன, மத, பால் அடிப்படையிலான குரோதங்களைத் தணிக்கக்கூடிய வகையில் அமைவது விரும்பத்தக்கதாகும். நாகரீகமான மனித சமூதாயத்தைக் கட்டமைக்கக்கூடிய பத்திரிகைகள் உருவாவது சிறந்த பயனளிக்கும்.

பொதுநல நோக்கு, கூட்டுறவு போன்ற அம்சங்கள் மறைந்துவிட்டன. யாரும் நம்பிக்கை, மரியாதை செலுத்தக்கூடியவர்கள் என்ற நிலை அருகியுள்ளதுடன் ஒவ்வொருவரும் அடுத்தவரைச் சந்தேகத்துடன் பார்க்கும் நிலையே அதிகரித்துள்ளது. இத்தகைய நிலை நீடித்தால் நல்லதல்ல.

ஒட்டு மொத்தமாகப் பார்க்கும்போது போர்க் காலத்தில் நிலவிய சூழலை விடவும் அபாயகரமான ஒரு ஆட்சியறவு நிலையிலும், அராஜக நிலையிலும் வாழும் சூழலே நிலவுகிறது.

இந்த நிலையை நீடிக்கவிடாது கவனம் செலுத்தி வாழ்வுக்கான நம்பிக்கையையும், உத்தரவாதத்தையும், பாதுகாப்புச் சூழலையும், உறுதிப்படுத்த வேண்டிய பொறுப்பு அரசுக்கு உள்ளது.

சிறந்த விழுமியங்களை நிலை நிறுத்துவதற்கான வழிவகைகளையும், வழிகாட்டல்களையும் அரசியலற்ற தலைவர்களும், கல்விகற்ற சமூகத்தினரும், சமய வழிகாட்டிகளும் பொது நன்மை விரும்பிகளும் என சமூகத்தின் அனைத்து தரப்பினரும் ஈடுபாட்டுடன் சிந்தித்து தகுந்த திட்டங்களை உருவாக்கிச் செயற்படுத்த வேண்டியது அவசியமானதாகும். இல்லையேல், ஒரு நலிவுற்ற சமூகத்தின் பிரதிநிதிகளாக எம்மை நாம் அடையாளப்படுத்த வேண்டியவர்களாவர்.

இனங்களுக்கிடையில் ஒருமைப்பாட்டை ஏற்படுத்துவதிலும், இணக்கப்பாட்டை வளரச் செய்வதிலும் மத நிறுவனங்களுக்கும், மதத் தலைவர்களுக்கும் கடமைப்பாடுள்ளது.


அத்தகைய நிலை இல்லாது மத நிறுவனங்களும், மதத் தலைவர்களும், மத குருமார்களும் மதவாதிகளாகச் செயற்படுவதும், மதத்தின் பெயரால் வியாபாரமும், அரசியலும் செய்வதும் ஆரோக்கியமான சமூக நிலைப்பிற்கும் உறுதிப்பாட்டிற்கும் உதவமாட்டாது.

ஒட்டு மொத்தமாக இன்றுள்ள நெருக்கடி நிலையில் இருந்து மக்களை மீட்டெடுக்கக் கூடிய ஒரே வழியாக அமையக்கூடியது அரசியல், சமூக, பொருளாதார பண்பாட்டு அம்சங்களை மீள்பார்வை செய்து சிறந்த கொள்கைகளை வகுத்துச் செயற்படுத்தக் கூடிய வலுவான கருத்து உருவாக்கமும், அதற்கான தலைமைத்துவமும், செயற்பாடுகளுமெனலாம்.

(நன்றி: மாற்றம் இணையம்)

## ஈரானில் கடும்மழையால் 3 பெண்கள் பலி

### 600பேர் உயிருடன் மீட்பு



(டெஹ்ரான்)

ஈரானின் வடகிழக்கு பகுதிகளில் புயற் காற்றுடன் பலத்த மழை பெய்து வருகிறது. இதனால் பல்வேறு பகுதிகளில் நிலச்சரிவு ஏற்பட்டு 3 பெண்கள் பலியானார்கள். 600 பேர் உயிருடன் மீட்கப்பட்டனர். ஈரானின் வடகிழக்கே கோராசான் மற்றும் கோலேஸ்தான் பிராந்தியங்களில் கடந்த சில வாரங்களாக பலத்த சூறை காற்றுடன் மழை பெய்து வருகிறது. இதனால் பல்வேறு பகுதிகளில் மழை வெள்ளம் சூழ்ந்துள்ளது. ஏராளமான வீடுகள் மழை வெள்ளத்தில் அடித்து செல்லப்பட்டன. வெள்ளத்தால் பல்வேறு பகுதிகளில் கடந்த சனிக்கிழமை கடும் நிலச்சரிவு ஏற்பட்டது.

இந்த நிலச்சரிவில் சிக்கி 3 பெண்கள் பலியானார்கள். இதுகுறித்து தகவல் அறிந்ததும் ஈரான் மீட்பு குழுவினர் விரைந்து வந்து மீட்பு பணிகளில் ஈடுபட்டனர். அப்போது 600 பேரை உயிருடன் மீட்டனர். மழை வெள்ளத்தில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உணவு உட்பட அத்தியாவசிய பொருட்கள் வழங்கப்பட்டு வருகிறது என்று மீட்புத்துறை மேலாண்மை அதிகாரி ஹோஜாத் அலி ஷியான்பர் நேற்று முன்தினம் தெரிவித்தார். நிலச்சரிவில் கோலேஸ்தான் பிராந்தியத்தில் மட்டும் ரூ.2 ஆயிரம் கோடிக்கு மேல் சேதம் ஏற்பட்டுள்ளதாக கவர்னர் ஹசன் சாதிக் கூறினார்.

# கைவிடப்பட்டது போராட்டம் இடமாற்றம் வழங்க உறுதிமொழி

## மாகாணக் கல்வி அமைச்சு ஏற்பாடு

கஷ்ரப்பிரதேசத்தில் சேவைக காலத்தினை நிறைவு செய்து, யாழ். வலயத்திற்குள் இடமாற்றம் வழங்குமாறு வலியுறுத்திய ஆசிரியர்களுக்கு யாழ். வலயத்திற்குள் இடமாற்றம் வழங்க வடமாகாண கல்வி மற்றும் பண்பாட்டு அலுவல்கள் அமைச்சின் செயலாளர் எஸ்.சத்தியசீலன் உறுதியளித்துள்ளதாக இலங்கை ஆசிரியர் சங்கத்தின் யாழ். மாவட்ட தலைவர் தேவராசா செந்தூரன் நேற்றுத் தெரிவித்தார்.

வடமாகாண கல்வி அமைச்சின் செயலகத்தில் நேற்றுக் காலை நடைபெற்ற சந்திப்பின் போதே அவர் இவ்வாறு வாக்குறுதி அளித்துள்ளார்.

வடமாகாணத்தின் கஷ்ரப் பிரதேசத்தில் ஆசிரியர் சேவைக் காலத்தினை நிறைவு செய்த ஆசிரியர்களுக்கான இடமாற்றம் இதுவரையில் வழங்கப்படவில்லை என்றும் தமக்கான இடமாற்றத்தினை வழங்குமாறு கோரி கடந்த மாதம் இலங்கை ஆசிரியர் சங்கத்தின் ஏற்பாட்டில் ஆசிரியர்கள் ஆர்ப்பாட்டம் ஒன்றினை முன்னெடுத்தனர்.

அந்த ஆர்ப்பாட்டத்தின் பின்னர் வடமாகாண கல்வி மற்றும் பண்பாட்டு அலுவல்கள் அமைச்சின் செயலாளர் சத்தியசீலனுடனான சந்திப்பின் போது, யூன் மாதத்திற்குள் இடமாற்றம் வழங்குவதாக வாக்குறுதி அளித்திருந்தார்.

அதனடிப்படையில், பதில் எதுவும் கிடைக்கப்படாத நிலையில், நேற்று இந்த ஆசிரியர்கள் ஆர்ப்பாட்டத்தினை முன்னெடுக்க இருந்த நிலையில் யாழ். வலயத்திற்குள் இடமாற்றம் வழங்குமாறு கோரிய ஆசிரியர்கள் 22 பேருக்கு யாழ். வலயத்திற்குள் இடமாற்றம் வழங்குவதாக வாக்குறுதி அளித்துள்ளார்.

அந்தவகையில், ஆசிரியர்களுக்கான இடமாற்றக் கடிதத்தினை யாழ். வலயத்திற்கு அனுப்பி வைக்குமாறு மாகாண கல்விப் பணிப்பாளருக்கு அறிவித்ததாகவும் அவர் கூறினார்.

அந்தவகையில் இன்று முதல் யாழ். வலய பாடசாலைகளில், ஆசிரியர்களுக்கு பொருத்தமான பாடசாலைகளில் கடமையாற்ற முடியுமென்றும் இலங்கை ஆசிரியர் சங்கத்தின் யாழ். மாவட்ட தலைவர் மேலும் கூறினார். (25,17)

## யாழ். நகரில்...

மகிந்த ராஜபக்ஷவுக்கும், பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பசில் ராஜபக்ஷவுக்கும் நன்றிசொல்ல கடமைப்பட்டுள்ளேன்.

இணக்க அரசியலுக்கு ஊடாகவும் அரசுக்கும் எனக்குமுள்ள புரிந்துணர்வுக் கூடாகவும் நாம் பல்வேறுபட்ட அபிவிருத்தி செயற்திட்டங்களை முன்னெடுத்து வரும் நிலையில் எதிர்காலத்திலும் முன்னெடுக்கவுள்ளோம்.

2010 ஆம் ஆண்டு யூன் மாதம் ஜனாதிபதியுடன் நான் இந்தியாவிற்குச் சென்றிருந்த வேளை, 3000 கோடி ரூபா பெறுமதியான 50 ஆயிரம் வீடுகளை தன்னுடைய முயற்சியின் பயனாகவே கிடைக்கப் பெற்றதாகவும் சுட்டிக்காட்டிய அமைச்சர், 35 கோடி ரூபா பெறுமதியில் குருநகர் வடகடல் நிறுவனத்திற்கு இயந்திர உபகரணங்களும் மூலப்பொருட்களும் கிடைக்கப்பெற்றதாகவும் தெரிவித்தார்.

அத்துடன், அச்சுவேலி கைத்தொழிற்பேட்டை உட்கட்டுமானப் பணிகளுக்கென 50 கோடி ரூபாவும், பனை அபிவிருத்தி சபையின் [illegible]தடியிலுள்ள பனை ஆராய்ச்சி நிறுவனத்திற்கு 15 கோடி ரூபா இயந்திர உபகரணங்களும் தளபாடங்களும் கிடைக்கப் பெற்றதாகவும் வடமாகாண புகையிரத சேவை பாதைக்காக 10 ஆயிரம் கோடி ரூபாவை இந்திய அரசு வழங்கியுள்ளதையும் இதன்போது தெரிவித்தார்.

பனை அபிவிருத்தி சபையின் ஊடாக மக்களது வாழ்வாதாரத்தையும் உயர்த்துவதில் முன்னின்று உழைத்த அமரர் கே.சி நித்தியானந்தா அச்சபையின் முன்னேற்றத்துக்காக அரும்பாடுபட்டு உழைத்தவர் என்றும் அவரது காலத்தில் அச்சபையில் தாம் ஊழியராக இருந்ததையும் நினைவு கூர்ந்த அமைச்சர், தற்போது சபைக்காகவும் மக்களுக்காகவும் உழைத்து வரும் பசுபதி சீவரத்தினம் இருவரும் மக்களது வாழ்வாதாரத்தை உயர்த்துவதில் முன்னின்று உழைத்தவர்கள் என்றும் சுட்டிக்காட்டினார்.

பனை அபிவிருத்தி சபையின் தலைவர் பசுபதி சீவரத்தினம் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் இந்திய துணைத் தூதரகத்தின் பிரதம செயலாளர் ஜஸ்ரின் மோகன், மாவட்ட அரசாங்க அதிபர் சுந்தரம் அருமைநாயகம், யாழ்.மாநகர முதல்வர் திருமதி யோகேஸ்வரி பற்குணராசா, அமைச்சின் செயலாளர் சிவஞானசோதி ஆகியோர் உரையாற்றினர்.

தொடர்ந்து பனைசார்ந்த உணவு மற்றும் உணவல்லாத உற்பத்திகளது ஆராய்ச்சி மற்றும் ஆய்வுகள் தொடர்பான ஆய்வறிக்கைகள் சமர்ப்பிக்கப்பட்டன.

நிகழ்வில் ஆராய்ச்சி கட்டுரைகளை சமர்ப்பித்த ஆராய்ச்சியாளர்களுக்கு சான்றிதழ்களும் கேடயங்களும் வழங்கி கௌரவிக்கப்பட்ட அதேவேளை இம்மாநாட்டை சிறப்புற ஏற்பாடு செய்த பனை ஆராய்ச்சி நிறுவன முகாமையாளர் சிறி விஜேந்திரனுக்கு அமைச்சர் தமது வாழ்த்துக்களையும் பாராட்டுக்களையும் தெரிவித்துக் கொண்டார்.

இதனிடையே பனை அபிவிருத்தி சபையில் சமயாசமய ஊழியர்களுக்கான நிரந்தர நியமனங்களும் இதன்போது வழங்கி வைக்கப்பட்டன.

அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் ஆலோசனை மற்றும் வழிகாட்டலுக்கு அமைவாக பனை அபிவிருத்தி சபையின் கீழான பனை ஆராய்ச்சி நிறுவனத்தினால் இம்மாநாடு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

இந்நிகழ்வில் விசேட அம்சமாக பனை அபிவிருத்தி சபையின் முதலாவது தலைவர் கே.சி நித்தியானந்தாவின் உருவப்படத்திற்கு அமைச்சர் மாலை அணிவித்து வணக்கம் செலுத்தினார்.

பனை வள ஆராய்ச்சி ஊடாக பனைவளம் சார்ந்த கைத்தொழில்களை அபிவிருத்தி செய்தல் என்ற தொனிப் பொருளில் நடைபெற்ற இம்மாநாட்டில் பனை அபிவிருத்தி சபையின் பொதுமுகாமையாளர் லோகநாதன், வாழ்நாள் பேராசிரியர் பாலசுந்தரம்பிள்ளை, அமைச்சரின் ஆலோசகர் சுந்தரம் டிவகலாலா மற்றும் துறைசார்ந்த பேராசிரியர்கள், கல்வியலாளர்கள், தொழிற்துறைசார்ந்தோர், நலன்விரும்பிகள், பாடசாலை சமூகத்தினர், பொதுமக்கள் என பெருந்திரளானோர் கலந்து கொண்டனர்.

## முதலமைச்சரை...

தெரிவித்த கிராம மக்கள், முதலமைச்சர் பயணித்த வாகனத்தை இடைமறித்து எதிர்ப்பை வெளியிட்டனர்.

இதேவேளை, கிராமத்தின் மக்கள் பிரதிநிதிகள் சிலரை வடமாகாண சபைக்கு வருகை தந்து, கோரிக்கையை முன் வைக்குமாறு கோரப்பட்டதைத் தொடர்ந்து, ஆர்ப்பாட்டக்காரர்கள் அங்கிருந்து கலைந்து சென்றனர்.

## முல்லையில்...

மற்றுமொருவர் வைத்திய சாலையில் சிகிச்சை பெற்று வருகின்றார். குடும்பத் தகராறு காரணமாக ஏற்பட்ட மோதலே கத்திக்குத்து வரை போய் முடிந்துள்ளது என பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேகநபர்களை கைது செய்வதற்கான விசாரணைகளை முள்ளியவளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

## யாழ். நகரில்...

பொலிஸாருக்கு தகவல் கொடுத்தனர்.

இதனைத் தொடர்ந்து அங்கு விரைந்த விசேட பொலிஸ் அணியினர் அந்த விமானத்தை மீட்டு பொலிஸ் நிலையத்திற்கு எடுத்துச் சென்றனர். இதனால் யாழ். நகரில் பரபரப்பு ஏற்பட்டது.

பின்னர் இந்த விமானத்தை இயக்கிய நிறுவனம் ஒன்றின் அதிகாரிகள் அதனை தேடி அங்கும் இங்கும் ஓடித்திரிந்தனர். பொலிஸ் பாதுகாப்பில் விமானம் இருப்பது மாலையில்தான் அவர்களுக்கு தெரியவந்தது. அதை மீட்டெடுக்க பொலிஸ் நிலையம் சென்ற மேற்படி அதிகாரிகளுக்கு அங்கு அதிர்ச்சி காத்திருந்தது.

அந்த விமானத்தில் சக்தி வாய்ந்த புகைப்படக்கருவி இருந்ததால் அதன்மூலம் பதிவாகிய படங்கள் ஆய்வுக்குட்படுத்தப்பட வேண்டும் என்றும் பாதுகாப்புத் தரப்பின் அனுமதி உட்பட பல கேள்விகளுக்கு அவர்கள் பதில் வழங்க வேண்டியிருந்தது. (25)

# இந்தியாவிலிருந்து மருத்துவர்கள்; சிவாஜிலிங்கம் கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

இந்தியாவில் இருந்து தமிழ் பேசும் மருத்துவர்கள் மற்றும் ஆசிரியர்களை இலங்கையில் கடமையாற்றுவதற்காக அனுப்பிவைக்க ஆவன செய்யுமாறு இலங்கை அரசாங்கத்தினூடாக இந்திய அரசாங்கத்திடம் வடமாகாண சபை உறுப்பினர் கே.சிவாஜிலிங்கம் கோரிக்கை விடுத்துள்ளார்.

இலங்கையின் வடக்கு, கிழக்கு மாகாணங்களில், மருத்துவர்கள் மற்றும் ஆசிரியர்கள், தகவல் தொழில்நுட்ப ஆசிரியர்களின் பற்றாக்குறை நிலவுகின்றது.

அந்த வகையில், எதிர்வரும் 2 வருடங்களுக்கு வடக்கு, கிழக்கு மாகாணங்களில் தமிழ் பேசும் மருத்துவர்களை இலங்கையில் கடமையாற்றுவதற்கு அனுப்பி வைக்குமாறு இந்திய அரசு மற்றும் தமிழ்நாட்டு அரசு, மற்றும் இலங்கை அரசாங்கத்திடம் கோரிக்கை விடுப்பதாகவும் அவர் கூறினார்.

கடந்த மே மாதம் 22 ஆம் திகதி வடமாகாண சபை கூட்டத்தில் இத்தீர்மானம் நிறைவேற்றப்பட்டதாக குறிப்பிட்டதுடன், இந்தியாவில் இருந்து தமிழ் பேசும் ஆசிரியர்களை இலங்கையின் வட, கிழக்கு பகுதிகளில் சேவையாற்ற அனுப்பி வைத்தால் வட, கிழக்கில் நிலவும் மருத்துவர்கள் மற்றும் ஆங்கில ஆசிரியர்கள், தகவல் தொழில்நுட்ப ஆசிரியர்களின் பற்றாக்குறையினை நிவர்த்தி செய்ய முடியுமென்றும் அவர் மேலும் கூறினார். (25)

# ஜனாதிபதி தேர்தலில் போட்டியிடும் எண்ணம் இல்லை

### சொல்கிறார் சந்திரிக்கா

(கொழும்பு)

ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடும் எந்த எண்ணமும் தனக்கு கிடையாது என முன்னாள் ஜனாதிபதி சந்திரிக்கா பண்டாரநாயக்க குமாரதுங்க அறிவித்துள்ளதாக ஐக்கிய தேசியக் கட்சியின் தகவல்கள் தெரிவிக்கின்றன.

தனது தந்தையால் ஆரம்பிக்கப்பட்டு, தாயாரால் பாதுகாக்கப்பட்டு, 1994 ஆம் ஆண்டு தன்னை மீண்டும் ஆட்சி பீடம் ஏற்றிய ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிக்கு ஏற்பட்டுள்ள அவலமான நிலையில் இருந்து, கட்சியை மீட்டு கட்சியின் உரிமையாளர்களான பஞ்ச மகா சக்திகளிடம் அதனை ஒப்படைப்பது தனது ஒரே எதிர்பார்ப்பு எனவும் சந்திரிக்கா குறிப்பிட்டுள்ளார்.

அதற்காக எந்த அர்ப்பணிப்புகளையும் செய்யத் தயாராக இருப்பதாகவும் அவர் கூறியுள்ளார்.

எவ்வாறாயினும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியை பாதுகாக்கும் நோக்கில், அநீதிக்கு உள்ளாகியிருக்கும் கட்சியின் சிரேஷ்ட தலைவர்கள் எடுக்கும் எந்த நடவடிக்கைக்கும் தனது பங்களிப்பு வழங்கப்படும் எனவும் முன்னாள் ஜனாதிபதி மேலும் தெரிவித்துள்ளார்.

## ஓய்வுபெறுகிறார்...

நவநீதம்பிள்ளையின் பதவிக்காலம் ஆகஸ்ட் மாதம் முடிவடையவுள்ள நிலையில், மனித உரிமை ஆணையாளர் பதவிக்கு பரிந்துரைக்கப் பட்டவர்களில் தருஸ்மன் முன்னணியில் இருக்கின்றார்.

இலங்கையின் போர்க் குற்றங்கள் மற்றும் மனித உரிமை மீறல்கள் தொடர்பாக ஐக்கிய நாடுகள் செயலாளர் நாயகம் பான் கீ மூன் தனக்கு அறிக்கையொன்றை பெறுவதற்காக நியமித்த நிபுணர்கள் குழுவின் தலைவராக தருஸ்மன் செயற்பட்டார். இந்த நிபுணர்கள் குழு இலங்கைக்கு வர அரசாங்கம் அனுமதிக்கவில்லை என்பதுடன் அது பற்றி இராஜதந்திர ரீதியில் பரவலாக பேசப்பட்டு வந்த விடயமாக இருந்தது.

இந்தோனேஷியாவின் பிரபலமான அரசியல்வாதியான மர்சுகி தருஸ்மன், அந்த நாட்டின் முன்னாள் ஜனாதிபதி சுகாட்டோவின் லோக்கார் கட்சியின் முக்கிய உறுப்பினராவார்.

இதனைத் தவிர தேசிய மற்றும் சர்வதேச மனித உரிமை ஆணைக்குழு உட்பட பலவற்றில் உயர் பதவிகளை வகித்துள்ள தருஸ்மன், ஆசிய மனித உரிமை வள மத்திய நிலையத்தின் ஆரம்பகர்த்தா என்பதும் குறிப்பிடத்தக்கது.

## தீவகத்தில்...

அபிவிருத்தி வேலைத்திட்டத்தில் மகிந்தோதய தொழில்நுட்ப பீட ஆய்வுகூடத்திற்காக சுமார் 60 மில்லியன் ரூபாவில் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

வடமாகாணத்தில் மகிந்தோதய தொழில்நுட்ப பீட ஆய்வு கூடம் அமைப்பதற்கு 16 பாடசாலைகள் தெரிவு செய்யப்பட்டுள்ளதில் முதன் முதலாக நேற்று யாழ். வேலணை மத்திய கல்லூரிக்கான மகிந்தோதய தொழில்நுட்ப ஆய்வுகூடத்திற்கான அடிக்கல் நாட்டி வைக்கப்பட்டமையும் குறிப்பிடத்தக்கது.

யாழ். வேலணை மத்திய கல்லூரிக்கான மகிந்த சிந்தனையின் மகிந்தோதய தொழில்நுட்ப ஆய்வு கூடமும் நேற்று திறந்து வைக்கப்பட்டது.

யாழ். வேலணை மத்திய கல்லூரி அதிபர் எஸ். கிருபாகரன் தலை மையில் ஆய்வுகூட திறப்பு விழா நிகழ்வு நடைபெற்றது.

இப்பாடசாலையில் புதிதாக நிர்மாணிக்கப்பட்ட தொழில்நுட்ப ஆய்வு கூடத்தினை வடமாகாண ஆளுநர் ஜி.ஏ.சந்திரசிறி மற்றும் ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சில்வேஸ்திரி அலன்ரின் ஆகியோர் நாடா வெட்டித் திறந்து வைத்ததுடன், ஆய்வுகூடத்தினையும் பார்வையிட்டனர்.

மகிந்த சிந்தனையின் மகிந்தோதய 1000 இடைநிலை பாடசாலைகளின் அபிவிருத்தி வேலைத்திட்டத்தில் தெரிவு செய்யப்பட்ட பாடசாலைகளின் ஆய்வுகூடங்கள் தற்போது திறந்து வைக்கப்பட்டு வருகின்றன.

9.8 மில்லியன் ரூபா பெறுமதியில் இப்பாடசாலைக்கான ஆய்வுகூடம் நிர்மாணிக்கப்பட்டுள்ளது.

இந்நிகழ்வில், வடமாகாண பிரதம செயலாளர் விஜயலக்சுமி ரமேஷ், வேலணை பிரதேச சபைத் தலைவர் சி.சிவராசா மற்றும் வடமாகாண கல்வி அமைச்சின் செயலாளர் ச.சத்தியசீலன் மற்றும் தீவக வலயக் கல்விப் பணிப்பாளர் திருஞானம் குயின்ரஸ் மற்றும் தீவக பாடசாலை அதிபர்கள், ஆசிரியர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர். (25)

# நூலக உதவியாளர்களுக்கு அமைச்சர் டக்ளஸ் அறிவுரை



யாழ்.மாநகர சபை எல்லைக்குட்பட்ட நூலகங்களுக்கு நூலக உதவியாளர்களாக நியமனம் பெற்றுக் கொண்டவர்கள் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவைச் சந்தித்து ஆசிபெற்றுள்ளனர்.

யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள அமைச்சரின் செயலகத்தில் நேற்று நூலக உதவியாளர்கள் அமைச்சரைச் சந்தித்து கலந்துரையாடியுள்ளனர்.

இதன்போது கருத்துத் தெரிவித்த அமைச்சர் நீங்கள் பணிபுரியும் தாபனங்களில் விசுவாசமாகவும், உண்மையுடனும் பணிபுரிய வேண்டும். மக்களுக்கான சேவைகளை உணர்ந்து கொண்டு எதிர்கால வளமானதொரு சமூகத்தைக் கட்டியெழுப்பும் நோக்கிலும் உங்கள் பணி அமையப் பெறுதல் வேண்டும்.

அதுமட்டுமல்லாமல் நீங்களும், நீங்கள் சார்ந்து வாழும் சமூக முன்னேற்றத்தையும் கருத்தில் கொண்டு மக்களைச் சரியான வழியில் வழிநடத்த வேண்டிய பொறுப்பு உங்களுடையதாகும் என்றும் சுட்டிக்காட்டினார்.

கடந்த 30 ஆம் திகதி யாழ். மாநகர சபையில் நியமனம் பெற்றுக் கொண்ட இவர்கள் நேற்றுத் தத்தமக்குரிய நூலகங்களில் தமது பணிகளை ஆரம்பிக்கின்றனர்.

இவ்வாறு, 12 பேர் யாழ். மாநகரசபை எல்லைக்குட்பட்ட ஒரு பிரதான நான்கு கிளை நூலகங்களுக்குமாக ஐந்து நூலகங்களில் பணிபுரியவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இதன்போது நியமனம் பெற்றுக் கொண்ட நூலக உதவியாளர்களுக்கு அமைச்சர் தனது வாழ்த்துக்களையும், பாராட்டுக்களையும் ஆசிகளையும் தெரிவித்துக் கொண்டார்.

இதன்போது அமைச்சரின் யாழ்.மாவட்ட ஒருங்கிணைப்பாளர் கே.வி.குகேந்திரன் (ஜெகன்) உடனிருந்தார்.

# உருத்திரபுரத்துக்கு மின்சாரம் எப்போது?

(யாழ்ப்பாணம்)

கிளிநொச்சி உருத்திரபுரம் பிரதேசத்திற்கு இதுவரை மின்சாரம் வழங்கப்படவில்லையென அப்பிரதேச மக்கள் ஈ.பி.டி.பி. யின் நாடாளுமன்ற உறுப்பினர் சந்திரகுமாரின் கவனத்திற்கு கொண்டு வந்துள்ளனர்.

கிளிநொச்சி மீள்குடியேற்ற பிரதேசத்திற்கு மின்விநியோகம் இடம்பெற்று வருகின்றது.

எனினும், கிளிநொச்சி நகரை அண்மித்த உருத்திரபுரம் 3, 4ஆம் குறுக்குத் தெருவில் உள்ள 300 இற்கும் மேற்பட்ட குடும்பங்கள் மின்சாரம் இன்றி இருளில் உள்ளதாக நாடாளுமன்ற உறுப்பினர் சந்திரகுமாரின் கவனத்திற்கு கொண்டு வந்துள்ளனர்.

இதனால் மாணவர்கள் கல்வி கற்க முடியாத நிலை உள்ளதாகச் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது. (92)

# வெடிபொருள் அகற்ற கிளாலியில் ஏற்பாடு

(யாழ்ப்பாணம்)

கிளாலிப் பிரதேசத்தில் வெடி பொருட்கள், மிதி வெடிகள் உள்ள பிரதேசங்கள் படையினரால் இனங்காணப்பட்டு வெடிப் பொருட்கள் செயலிழக்கச் செய்யப்பட்டு வருகின்றன.

கடந்த மாதம் மர்ம வெடிப் பொருள் ஒன்று வெடித்து குடும்பஸ்தர் ஒருவர் படுகாயமடைந்தார்.

இதனைத் தொடர்ந்து பாதுகாப்பு படையினர் மிதிவெடிகளைக் கண்டுபிடித்து செயலிழக்கச் செய்யும் சாதனங்களைப் பயன்படுத்தி தேடுதலில் ஈடுபட்டு வருகின்றனர்.

மேற்படி விடயம் தொடர்பாக படையினர் தென்மராட்சி பிரதேச செயலரின் கவனத்திற்கு கொண்டு வந்துள்ளனர். (92)

# புகைத்தல் எதிர்ப்பு தினம் விழிப்புணர்வு கருத்தரங்கு

சர்வதேச புகைத்தல் எதிர்ப்பு தினத்தையொட்டி வவுனியா பிரதேச செயலகமும் வாழ்வின் எழுச்சித் திணைக்களமும் இணைந்த ஏற்பாட்டில் வவுனியா பிரதேசத்துக்குட்பட்ட மக்களுக்கு விழிப்புணர்வு கருத்தரங்கொன்றை நேற்று நடத்தியிருந்தனர்

வாழ்வின் எழுச்சி திணைக்களத்தின் தலைமைப்பீட முகாமையாளர் திருமதி சந்திரகுமார் தலைமையில் இடம்பெற்ற இன் நிகழ்வில் பிரதேச செயலர் க. உதயராசா, சமுர்த்தி உதவி ஆணையாளர் பி.எம். கேவீர சிங்க, சமுர்த்தி தலைமைபீட முகாமையாளர் திரு எஸ்.வில்வராசா, சமுர்த்தி தலைமைபீட முகாமையாளர் எஸ்.பாலசேகர், வவுனியா மதுவரித் திணைக்களத்தின் தலைமை அதிகாரி மற்றும் கிராமமட்ட சங்கங்களின் தலைவர்கள் நிகழ்வில் கலந்து கொண்டிருந்தனர். (70)

# கடன் செலுத்தும் தொகை இப்போது அதிகரிப்பு

இலங்கை வெளிநாடுகளில் பெற்ற கடன் மற்றும் வட்டிக்காக செலுத்தும் தவணைக் கட்டணம் 43 வீதமாக அதிகரித்துள்ளது.

2 ஆயிரத்து 673 மில்லியன் அமெரிக்க டொலர்களாக இருந்த இந்த தொகை 3 ஆயிரத்து 818 மில்லியன் அமெரிக்க டொலர்களாக அதிகரித்துள்ளது. இது 42.08 வீத அதிகரிப்பாகும். இலங்கை மத்திய வங்கி சுட்டிக்காட்டுவது போல் கடன் தவணை 50.02 வீதமாகவும் வட்டி 27.08 வீதமாகவும் அதிக ரித்துள்ளது. இதன் காரணமாக இலங்கையின் ஏற்றுமதி வருமானத்தில் 25.03 வீதம் வெளிநாட்டு கடனை செலுத்துவதற்காக ஒதுக்கப்பட்டுள்ளது.



சாவகச்சேரி பிரதேச இளைஞர் கழக சம்மேளனத்தினால் நேற்று முன்தினம் சாவகச்சேரி பிரதேச இளைஞர் கழக சம்மேளன அலுவலக வளாகம், சாவகச்சேரி பிரதேச இளைஞர் கழக சம்மேளன உறுப்பினர்களால் சிரமதானம் மேற்கொள்ளப்படுவதைக் காணலாம். (48)

# வடமாகாண சபைக்கு பூரண ஒத்துழைப்பு வெள்ளிக் கருத்துக்களம் கூற்றுக்கு கண்டனம்

(யாழ்ப்பாணம்)

புலமையாளர்களும், ஆய்வறிவாளர்களும் அங்கத்து வம் வகிக்கின்ற வெள்ளிக் கருத்துக் களம் கடந்த சனிக்கிழமை வெளியிட்ட அறிக்கையில் வடக்கு மாகாண சபை, முறையாக இயங்குவதற்கு நிதி மற்றும் நிர்வாகம் சார்ந்த வளங்களை வழங்குவதன் மூலம் ஆளுநரும், ஜனாதிபதியும் முதலமைச்சருக்கும் தெரிவு செய்யப்பட்ட மாகாண சபைக்கும் ஆதரவையும், ஒத்துழைப்பையும் வழங்குவார்கள் என்பது வெள்ளிக்கருத்துக் களத்தின் நம்பிக்கையாக இருக்கின்றது எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கை அரசாங்கம், குறிப்பாக ஜனாதி பதி அவர்களும், ஆளுநராகிய தானும் வடமாகாண முதலமைச்சருக்கும் தெரிவு செய்யப்பட்ட மாகாண சபைக்கும் நிதி மற்றும் நிர்வாகம் சார்ந்த அனைத்து வளங்களையும் பூரணமான ஒத்துழைப்பையும் வடமாகாண சபை அமைக்கப்பட்ட நாளிலிருந்து இலங்கையின் அரசியல் யாப்புக்கமையவும் இலங்கையின் ஏனைய சட்ட திட்டங்களுக்கு அமையவும் வழங்கி வருகிறார்கள் என்பதை வடமாகாண ஆளுநர் ஜி.ஏ.சந்திரசிறி தெரிவித்துக் கொள்கின்றார்.

நிதி மற்றும் நிர்வாகம் சார்ந்த விடயங்களில் வடக்கு மாகாண சபைக்கு ஒத்துழைப்பும், ஆதரவும் வழங்கப்பட்டுக் கொண்டிருக்கவில்லையென வெள்ளிக் கருத்துக்களம் கருதுகிறதா என்பதையும் அவ்வாறு கருதின் இலங்கையின் அரசியல் யாப்புக்கும் இலங்கையின் ஏனைய சட்டதிட்டங்களுக்கும் அமைய நிதி மற்றும் நிர்வாகம் சார்ந்த எவ்விடயங்களில் குறிப்பாக ஒத்துழைப்பு வழங்கப்படாத நிலைமை உள்ளது என்பதை வெள்ளிக் கருத்துக் களம் தெளிவுபடுத்த முடியுமா என்பதையும் தான் அறிய விரும்புவதாக வடமாகாண ஆளுநர் தெரிவித்துள்ளார்.

## மோதியது இராணுவ வாகனம்; மாணவர்கள் உட்பட ஐவர் காயம்

(கொழும்பு)

கொழும்பு ஹைலேவல் வீதியின் தெல்கந்த பிரதேசத்தில் இராணுவ ட்ரக் வண்டி, பாடசாலை மாணவர்களை ஏற்றி சென்ற வானில் மோதியதில் 5 பேர் காயமடைந்துள்ளனர்.

நேற்று முற்பகல் இடம்பெற்ற இந்த சம்பவத்தில் 4 மாணவர்களும் ஒரு ஆசிரியையும் காயமடைந்துள்ளனர்.

காயமடைந்தவர்கள் கொழும்பு தேசிய வைத்தியசாலையில் சிகிச்சை பெற்ற பின்னர் வெளியேறிச் சென்றுள்ளனர். இராணுவ ட்ரக் வண்டியின் சாரதியை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

# நகரில் நான்கு இளைஞர்கள் கைது

யாழ்ப்பாணம் மணியந்தோட்டம் பகுதியில் வீதியில் நின்றிருந்த இளைஞர்கள் நால்வரை படையினரும், பொலிஸாரும் இணைந்து கைது செய்து சென்ற சம்பவம் நேற்று இடம்பெற்றுள்ளது.

இது குறித்து மேலும் தெரிய வருவதாவது, மணியந்தோட்டம் 2ஆம் குறுக்குத் தெருப் பகுதியில் இளைஞர்கள் நால்வர் வீதியோரத்தில் கதைத்துக் கொண்டு நின்றனர். அவ்வேளை அங்கு சென்ற பொலிஸாரும், இராணுவத்தினரும் குறித்த நால்வரையும் பிடித்து யாழ்.பொலிஸ் நிலையத்துக்கு கொண்டு சென்றதாகத் தெரியவருகிறது. கைதுக்கான காரணம் தெரியவரவில்லை. வீதியோரத்தில் கூட்டமாக நின்றமையே இவர்கள் கைது செய்யப்பட்டமைக்குக் காரணமாக இருக்கலாம் என்று தெரிவிக்கப்படுகிறது.

# கியூ மெடிக்கா நிறுவனத்தினால் 76 பயனாளிகளுக்கு உதவிகள்

(பூநகரி)

பூநகரி பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட முழங்காவில் கிராம அலுவலர் பிரிவில் கியூமெடிக்கா நிறுவனத்தினால் வாழ்வாரத்தை உயர்த்தும் நோக்குடன் 96 பயனாளிகளுக்கு அவர்களுடைய தேவைகளைக் கேட்டறிந்து உதவிகள் வழங்கப்பட்டன.

இதன்போது 8 பேருக்கு தையல்இயந்திரங்களும், 3பேருக்கு நீர் இறைக்கும் இயந்திரமும், 49 பேருக்கு துவிச்சக்கரவண்டிகளும், 29 பேருக்கு நீரிறைக்கும் குழாய்களும், 2 பேருக்கு சிறுதொழில் வாணிப உதவிகளும், 5 பேருக்கு கோழிக்குஞ்சுகளும் வழங்கப்பட்டன.

இந்த உதவிகளை முழங்காவில் கிராம அலுவலர் நகுலேஸ்வரம் வழங்கி வைத்தார். (36)

# சவுக்கங்காடு எரிந்து நாசம்

(வடமராட்சி)

வடமராட்சி வல்லிபுரம் வலிக்கண்டிப் பகுதியில் நேற்றுப் பகல் 11.00 மணியளவில் சவுக்கங்காடு தீப்பிடித்து எரிந்து நாசமாகியுள்ளது.

பெருமளவு ஏக்கர் பரப்பளவைக் கொண்ட சவுக்கங்காடுகள் எரிந்து சாம்பராகியுள்ளன. (116)

இப்பத்திரிகை இல.373 பிரதான வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் அமைந்துள்ள அற்புதன் அச்சகத்தில் 2014 யூன் 03 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.